தொகுதி 7, இதழ் 09

நவம்பர் 1–15, 2026

இலவச விநியோகத்திற்கு

நியூ இந்தியா சமாச்சார்

தீபாவளி சிறப்பிதழ்

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

தேசியத் தீர்மானமாக


உருவெடுத்த அழைப்பு

12 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற அழைப்பு, 140 கோடி இந்தியர்களிடையே எதிரொலிக்கும் ஒரு தேசியத் தீர்மானமாக உருவெடுத்துள்ளது. மண் விளக்குகள் முதல் செமிகண்டக்டர் சிப்கள் வரை, கதர் முதல் பிரம்மோஸ் ஏவுகணை வரை, இந்தியாவின் பொருளாதார அடித்தளத்தை வலுப்படுத்துவது முதல் தேசியப் பாதுகாப்பைப் பேணுவது வரையிலான இந்தியாவின் இலக்குகள் அனைத்தையும் இந்தத் தீர்மானம் உள்ளடக்கியுள்ளது.













Follow Us @NISPIBIndia


யுனெஸ்கோவின் உத்தேசப் பட்டியலில் இந்தியாவின் 5 புதிய பாரம்பரிய இடங்கள்

வளமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட பாரம்பரியம்

யுனெஸ்கோ உத்தேசப் பட்டியலில் இந்தியாவின் ஐந்து பாரம்பரிய இடங்கள் மற்றும் முன்மொழிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம், பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்திய இடங்களின் மொத்த எண்ணிக்கை 78 ஆக உயர்ந்துள்ளது. புதிதாகச் சேர்க்கப்பட்ட இடங்களில், பாக் குகை பௌத்தச் சுவரோவியங்கள், சம்பல் பள்ளத்தாக்கின் கோயில்கள், குப்தர் காலத்தைச் சேர்ந்த உதயகிரி குகைகள் மற்றும் கின்னோர்கரின் பழங்குடியின பாரம்பரியம் ஆகியவை அடங்கும். இந்த இடங்கள் இந்தியாவின் வளமான நாகரிக பாரம்பரியத்தையும், தேசிய அடையாளத்தையும் பிரதிபலிக்கின்றன. இந்த முன்னேற்றம், இந்திய பாரம்பரியத்தைப் பாதுகாத்து, அதை உலக அரங்கில் முன்னிறுத்த வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்துகிறது.




இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா நாடுகளை உள்ளடக்கிய, 'சத்யாகிரகம்' தொடர்பான பன்னாட்டுத் தொடர் இடங்கள்



பௌத்த மதம் குறித்த பாக் குகை ஓவியங்கள்



குப்தர் கால உதயகிரி குகைகள்



கின்னோர்கரின் பழங்குடியின மரபு



சம்பல் பள்ளத்தாக்கின் கோயில்கள்

NEW INDIA SAMACHAR

VOLUME 7, ISSUE 09 | NOVEMBER 1-15, 2026

EDITOR IN CHIEF
DHIRENDRA OJHA
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

CHIEF CONSULTING EDITOR
SANTOSH KUMAR

SENIOR ASST. CONSULTING EDITOR
PAWAN KUMAR

ASST. CONSULTING EDITORS
AKHILESH KUMAR
CHANDAN KUMAR CHOUDHARY

LANGUAGE EDITORS
SUMIT KUMAR (ENGLISH)
RAJNEESH MISHRA (ENGLISH)
NADEEM AHMED (URDU)

SENIOR DESIGNER
PHOOL CHAND TIWARI

DESIGNERS
SATYAM SINGH
ANIL KUMAR



CLICK TO READ NEW INDIA SAMACHAR AVAILABLE IN 13 LANGUAGES
https://newindiasamachar.pib.gov.in/news.aspx
TO READ THE NEW INDIA SAMACHAR ARCHIVE EDITIONS CLICK
https://newindiasamachar.pib.gov.in.archive.aspx

Follow @NISPIBIndia on Twitter for regular updates on 'New India Samachar'

உள் பக்கங்களில்...

அட்டைப்பக்கக் கட்டுரை



'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

இந்தியர்களின் இதயங்களை ஒருங்கிணைத்த அறைகூவல்.

இந்த ஆண்டு தீபாவளியின் பிரகாசம் மிகவும் சிறப்புவாய்ந்தது; ஏனெனில், இது 'தற்சார்பு' எனும் ஒளியால் பிரகாசிக்கிறது. 'மனதில் குரல்' நிகழ்ச்சியின் வாயிலாக விடுக்கப்பட்ட 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற அழைப்பு, இன்று ஒரு ஆலமரம் போலப் பரந்து விரிந்து வளர்ந்துள்ளது. இந்தத் தீபாவளி ஒரு முக்கிய மைல்கல்லாகும்; இந்தியக் கைவினைக்கலைஞர்களின் திறன்களில் பெருமிதம் கொள்ளும் இந்தியா, 2047-க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா எனும் இலக்கை அடைவதற்கான அடித்தளத்தை அமைத்து வருகிறது. இந்தத் தீபாவளியில், ஏற்றப்படும் ஒவ்வொரு விளக்கும், வழங்கப்படும் ஒவ்வொரு பரிசும், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொள்முதலும் வெறும் பண்டிகை கொண்டாட்டத்தை மட்டும் குறிக்கவில்லை; இவை 140 கோடி இந்தியர்களின் கூட்டு உறுதியை பறைசாற்றுகின்றன – சுதேசி, தற்சார்பு மற்றும் வளமான இந்தியாவுக்கான உறுதி... |14-29

பொதுச் சேவையின் மூலம் நாட்டிற்கு 25 ஆண்டுகால சேவை

புதிய இந்தியாவின் கூட்டு வலிமையின் அடையாளம்



பிரதமர் மோடி தமது உரையில், 'நாம் இதைச் செய்து முடிப்போம்' என்ற உணர்வை, புதிய இந்தியாவின் கூட்டு வலிமையின் அடையாளமாக விவரித்தார்... |8-13

இந்திய விமானியின் துணிச்சலான செயல்

இந்தியர்கள் உயிரைக் காப்பவர்கள் உயிரைப் பறிப்பவர்கள் அல்ல



பிரதமர் மோடி, இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சாருடன் காணொளி வாயிலான கலந்துரையாடலில், அவரது துணிச்சலையும் சமயோசிதத்தையும் பாராட்டியதோடு, அவர் விரைவில் குணமடைய வாழ்த்துகளையும் தெரிவித்தார்... |30-31

செய்திச் சுருக்கங்கள் |4-5

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்காக ரூ.10,000 கோடி நிதி ஒதுக்கீடு
ஐடிஎல்ஏ அமைப்பை உருவாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் |6-7

டிஜிட்டல் இணைப்பு: எதிர்காலத்திற்கான புதிய பாதை
இந்தியா மொபைல் காங்கிரஸின் 10-வது பதிப்பில் பிரதமர் மோடி உரை |32-33

மக்களை மையப்படுத்திய நிர்வாகம்: சிறந்த நிர்வாகத்தின் அடையாளம்
மூன்று மந்திரங்களை முன்வைத்த பிரதமர் மோடி: மக்களை மையப்படுத்திய அணுகுமுறை, செயல்திறன் மற்றும் சிறந்த நிர்வாகம் |34-35

பழங்குடியின சமூகத்தின் மேம்பாடு... பாரம்பரியத்தைக் கொண்டாடுவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு ஊக்கமளித்தல்
பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் மூன்றாம் ஆண்டு |36-37

அதிகாரமளிப்பதற்கான ஆற்றல்
புளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றத்தில் பிரதமர் மோடியின் உரை |38-39

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2026: ஓர் அற்புதமான பயணம், என்றும் நினைவில் நிற்கும் சாதனை
21 தங்கம், 27 வெள்ளி மற்றும் 37 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா நான்காம் இடம் |40-42

லடாக்கின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியில் ஒரு புதிய அத்தியாயம்
ரூ.3,350 கோடி மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்த பிரதமர் மோடி... |43

ஆளுமை: டாக்டர் பத்மாவதி பந்தோபாத்யாய்
இந்தியாவின் முதல் பெண் ஏர் மார்ஷல் |47

அஞ்சலி: விடைபெற்றார், நானா படேகர் |48



பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும்
எதிர்கால முன்னேற்றத்திற்கான லட்சியங்கள்

பிரதமர் மோடி தமிழ்நாட்டில் ரூ.13,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்து மூளை ஆராய்ச்சி மையத்தையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார்... |44-46

Published: Kanchan Prasad, Director General, on behalf of Central Bureau of Communication
Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003.
E-Mail : response-nis@pib.gov.in, RNI No. : DELENG/2020/78811

ஆசிரியரின் மேசையிலிருந்து...

இந்த ஆண்டு தீபாவளியில், சுதேசி தயாரிப்புகளைக் கொண்டு உங்கள் இல்லத்தை ஒளிரச் செய்யுங்கள்

அன்பான வணக்கங்கள்!

பண்டிகைக் காலம் நெருங்கி வரும் வேளையில், ஒவ்வொரு வீடும் பண்டிகைக் கொண்டாட்ட உணர்வால் உயிர்பெற்று விளங்குகிறது. சந்தைகள் அலங்கரிக்கப்படுகின்றன; குடும்பங்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கான பட்டியலைத் தயாரித்து வருகின்றன. தீபாவளிக்காக வெளியே சென்று மண் அகல் விளக்குகளை வாங்கியது, நம் சிறுவயது நினைவுகளில் மிகவும் மறக்க முடியாத அனுபவங்களில் ஒன்றாகும். குயவர் செய்யும் ஒவ்வொரு விளக்கும் வெறும் ஒளியை மட்டும் தருவதில்லை; அது ஒரு குடும்பத்தின் கடின உழைப்பையும், அவர்கள் அதில் முதலீடு செய்துள்ள நம்பிக்கையையும் உள்ளடக்கியது.

இந்த ஆண்டு தீபாவளி உணர்த்தும் செய்தி மிகவும் முக்கியமானது. பிரதமர் நரேந்திர மோடி பொதுவாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளார். இந்த தருணத்தில், "நம்மால் முடியும்" என்ற உறுதியுடன், 'வளர்ச்சியடைந்த இந்தியா' எனும் இலக்கை அடைய வேண்டும் என்ற செய்தியை அவர் முன்வைத்துள்ளார். 2047-க்குள் 'வளர்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை அடைவதற்கான பாதை 'தற்சார்பு' மூலமே உருவாகிறது; இதில் 'சுதேசி' அடிப்படை தூணாக விளங்குகிறது. 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற முழக்கம், வெறும் முழக்கமாக மட்டுமன்றி, இன்று நமது அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாகவே மாறியுள்ளது.

சிந்தித்துப் பாருங்கள். நாம் செய்யும் ஒரு சிறிய கொள்முதல், ஒரு கைவினைக்கலைஞரின் இல்லத்தில் விளக்கேற்ற உதவக்கூடும். நாம் வழங்கும் பரிசுகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவையாக இருக்கட்டும்; நாம் அணியும் ஆடைகள் இந்தியாவில் நெய்யப்பட்டவையாக இருக்கட்டும்; நம் இல்லத்தின் அலங்கார வேலைப்பாடுகளில் இந்தியத் தயாரிப்புகள் இடம்பெறட்டும்; நம் வீடுகளை ஒளிரச் செய்யும் விளக்குகள் மற்றும் மெழுகுவர்த்திகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவையாக இருக்கட்டும். நீங்கள் ஒரு உள்நாட்டுத் தயாரிப்பைப் பரிசாக அளிக்கும்போது, இனிப்பை மட்டுமல்ல, உங்கள் அன்புக்குரியவர்களுடன் ஒருவிதமான நெருக்கத்தையும், அன்பான பிணைப்பையும் பகிர்ந்து கொள்கிறீர்கள்.

நமது உடல், மனம் மற்றும் ஒவ்வொரு அணுவிலும் 'சுதேசி' உணர்வை நாம் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். இந்த பண்டிகைக் காலத்தில், பெருமிதத்துடன், "இது சுதேசி" என்று முழங்குவோம். 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற மந்திரம், 'தற்சார்பு' என்ற பாதை, 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கு, இவைதான் நம் முன்னுள்ள வழிகள். இதனால்தான், இந்த பண்டிகைக் கால இதழில், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்பதை முதன்மைச் செய்தியாக வழங்கியுள்ளோம். இந்த இதழின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று, பிரதமர் மோடியின் 'பொதுச்சேவை' முதல் 'தேசத்திற்கான சேவை' வரையிலான 25 ஆண்டுகாலப் பயணத்தைப் பற்றிய கட்டுரை ஆகும். 'ஆளுமை' பகுதியில், இந்தியாவின் முதல் பெண் ஏர் மார்ஷலான டாக்டர் பத்மாவதி பந்தோபாத்யாய் இடம்பெற்றுள்ளார். மேலும், கடந்த இரு வாரங்களில் மத்திய அமைச்சரவை எடுத்த முக்கிய முடிவுகள் மற்றும் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்ட பொது நிகழ்வுகள் குறித்த தகவல்களும் இதில் உள்ளன.

யுனெஸ்கோ உலக பாரம்பரிய இடங்களுக்கான உத்தேசப் பட்டியலில் உள்ள இடங்கள் குறித்த தகவல்கள் மற்றும் நவம்பர் 12 அன்று கடைப்பிடிக்கப்படும் 'பொதுச் சேவை ஒலிபரப்பு தினம்' குறித்த சிறப்பு உள்ளடக்கம் ஆகியவையும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.


தொடர்ந்து உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.



(திரேந்திர ஓஜா)

இந்த இதழை இந்தி, ஆங்கிலம் மற்றும் 11 பிற மொழிகளில் படிக்க/பதிவிறக்கம் செய்ய:
https://newindiasamachar.pib.gov.in/

மின்னஞ்சல்





'நியூ இந்தியா சமாச்சார்' இதழ்: தகவல்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ள மிகவும் பயனுள்ளது

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இந்திய அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் குறித்த தகவல்களை உடனுக்குடன் தெரிந்துகொள்ள இந்த இதழ் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இது நாட்டின் முன்னேற்றம் குறித்த எனது அறிவை விரிவுபடுத்துவதுடன், பல்வேறு விஷயங்களை ஆழமாகப் புரிந்துகொண்டு, ஒரு பொறுப்புள்ள குடிமகனாகச் செயல்பட எனக்கு ஊக்கமளிக்கிறது.

நிவேஷ் கோயல்
goyalnivesh98@gmail.com

புதிய இதழுக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழை மிகவும் விரும்பி வாசிக்கிறேன்; ஒவ்வொரு புதிய இதழுக்காகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன். இதை வாசிக்கும்போதெல்லாம், இந்தியாவின் கலாச்சார மற்றும் மத பன்முகத்தன்மை குறித்து மேலும் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்கிறேன். மேலும், இந்த இதழ் இந்தியாவின் வளர்ச்சித் திறனை எடுத்துரைப்பதுடன், 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047' என்ற இலக்கை அடைவதற்காக, நாடு அனைத்துத் துறைகளிலும் எவ்வளவு விரைவாக முன்னேறி வருகிறது என்பதையும் காட்டுகிறது.

shivanshchouhan397@gmail.com

நடப்பு நிகழ்வுகள் குறித்த தகவல்களைப் பெறுவதற்கான ஒரு சிறந்த ஊடகம்

ஒரு ஆசிரியராக, கற்றுக்கொள்ள ஆர்வமுள்ள மாணவர்களுடன் தொடர்ந்து அறிவைப் பகிர்ந்துகொள்வதன் முக்கியத்துவத்தை நான் உணர்கிறேன். நான் தவறாமல் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழைப் பதிவிறக்கம் செய்கிறேன். இது அரசின் முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் குறித்த தகவல்களைப் பரப்புவதற்கான ஒரு சிறந்த ஊடகமாகச் செயல்படுகிறது; 'புதிய இந்தியா'வில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் குறித்த விவரங்களை இது வழங்குகிறது.

பிரதீப் குமார் சாஹு
pradeepgrasshopper@gmail.com

அறிவையும் திறன்களையும் வளர்க்க உதவுகிறது

நான் 'நியூ இந்தியா சமாச்சார்' இதழைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். இது தகவல்களுடன், அரசின் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விவரங்களை வழங்குகிறது. இது எனது தனிப்பட்ட வளர்ச்சிக்கு உதவுவதுடன், எனது அறிவையும் திறன்களையும் வளர்க்கவும் துணைபுரிகிறது. இந்த இதழை வாசிப்தாலும், அதிலிருந்து புதியவற்றைக் கற்றுக்கொள்வதாலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பாஸ்கர் சிங் மஹார்
bhaskarmahar65@gmail.com

Communication Address : Room No–1077, Soochna Bhawan, CGO Complex, New Delhi -110003

E-Mail: response-nis@pib.gov.in

செய்திச் சுருக்கங்கள்



வளர்ச்சியடைந்த இந்தியா – ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாத இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய 375 வகையான பணிகள்

'வளர்ச்சியடைந்த இந்தியா – ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான உத்தரவாத இயக்கத்தின் கீழ், தற்போது மொத்தம் 375 வகையான பணிகளை மேற்கொள்ளலாம். முன்னதாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (எம்ஜிஎன்ஆர்இஜிஏ) கீழ் 266 வகையான பணிகளை மேற்கொள்ள மட்டுமே அனுமதி இருந்தது. இதில் 38 சிறப்புப் பணிகளைக் கொண்ட புதிய வகை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது; இவை தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொள்ளவும், பேரிடர் மேலாண்மைக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தண்ணீர் பாதுகாப்புப் பிரிவின் கீழ், சொட்டு நீர் பாசனம், தெளிப்பான் பாசன அமைப்புகள், கட்டிடங்களின் மொட்டைமாடியில் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் பாதுகாப்பு போன்ற புதிய நடவடிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நீர் விநியோகக் கட்டமைப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகளும் இதில் அடங்கும். புதிய திட்ட வரைபடத்தில், மாற்றுத்திறனாளிகள் எளிதாக அணுகும் வகையில், அரசு கட்டிடங்களில் படிக்கட்டுகள் மற்றும் சாய்வுதளங்களை அமைப்பதற்கான தெளிவான ஏற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்குமான பணிகள்

இந்த புதிய அறிவிப்பில் விவசாயிகள், நலிவடைந்த குடும்பங்கள், பெண்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் அது சார்ந்த செயல்பாடுகளுக்காக 181 பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன; இதில் தனிப்பட்ட பயனாளிகளுக்கான 52 பணிகளும் அடங்கும்.அதேபோல், பின்தங்கிய அல்லது நலிவடைந்த குடும்பங்களுக்காக 107 பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும், பெண்களை மேம்படுத்துவதற்காக 36 பணிகளும், இளைஞர்களின் மேம்பாட்டிற்காக 36 பணிகளும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.







இந்தியாவில் வறுமை மேலும் குறையும்: உலக வங்கி

உலக வங்கியின் அக்டோபர் மாத அறிக்கையில், கடந்த பத்தாண்டுகளில் இந்தியா வறுமையைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது. உலகளவில் மிக வேகமாக வறுமையைக் குறைக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. வறுமை விகிதமானது 2026-ல் 14.2 சதவீதத்திலிருந்து 2028-க்குள் 12.1 சதவீதமாகக் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2011 முதல் 2023-ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில், ஒரு நாளைக்கு சுமார் ரூ.400-க்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்த மக்களின் விகிதம் 57.7 சதவீதத்திலிருந்து 16.1 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், இதன் மூலம் சுமார் 49.6 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. அதேவேளையில், தீவிர வறுமையில் இருந்தவர்களின் சதவீதம் 27.1 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. வேலைவாய்ப்பு அதிகரிப்பு, குறிப்பாக, அரசாங்கத்தால் வழங்கப்படும் மானிய விலையிலான உணவு தானியங்கள் மற்றும் ஒட்டுமொத்த செலவினம் மற்றும் நுகர்வு அதிகரிப்பு ஆகியவை இந்த வறுமைக் குறைப்பிற்கான முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்தியாவின் வளர்ந்து வரும் சூப்பர்கம்ப்யூட்டர் சூழல்

'டிஜிட்டல் இந்தியா' முன்னெடுப்புடன் இணைந்து, இந்தியா தனது தரவு மையங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறது. இந்தச் சூழல், உள்நாட்டில் மேம்பட்ட கணினி உள்கட்டமைப்பிற்கான தேவையை அதிகரித்துள்ளது. உலகின் மொத்தத் தரவுகளில் சுமார் 20 சதவீதத்தை இந்தியா உருவாக்குகிறது. செயற்கை நுண்ணறிவு, வானிலை முன்னறிவிப்பு மற்றும் விண்வெளி ஆராய்ச்சி போன்ற துறைகளுக்கு மிக உயர்ந்த கணினித் திறன் தேவைப்படுகிறது; எனவே, ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு சூப்பர் கம்ப்யூட்டிங் வசதிகளை அணுகும் வாய்ப்பை மத்திய அரசு விரிவுபடுத்தி வருகிறது. தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் இயக்கத்தின் ஒரு பகுதியாக, 2026 செப்டம்பர் நிலவரப்படி, இந்தியா மொத்தம் 68 பெட்டாஃப்ளாப்ஸ் திறன் கொண்ட 40 சூப்பர் கம்ப்யூட்டர்களை நிறுவியுள்ளது. ஒட்டுமொத்தமாக 123 பெட்டாஃப்ளாப்ஸிற்கும் அதிகமான திறன் கொண்ட 50 சூப்பர் கம்ப்யூட்டர்களை நிறுவுவதே இந்த இயக்கத்தின் இலக்காகும்.





குறைந்த விலையில் புற்றுநோய் மருந்துகள்; ஆண்டுக்கு ரூ. 2,500 கோடி சேமிப்பு

அத்தியாவசியப் பட்டியலில் இல்லாத புற்றுநோய் மருந்துகளுக்கான வர்த்தக லாப வரம்பை – அதாவது விநியோகம் மற்றும் சில்லறை விற்பனைக்கு இடைப்பட்ட கூடுதல் விலையை – அதிகபட்ச சில்லறை விலையில் (MRP) 30 சதவீதமாகக் கட்டுப்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் சில மருந்துகளின் விலை 70 சதவீதம் வரை குறையும் என்றும், இதன் விளைவாக ஆண்டுக்கு சுமார் ரூ.2,500 கோடி சேமிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, அத்தியாவசியப் பட்டியலில் உள்ள புற்றுநோய் மருந்துகளின் விலையை அரசு முறைப்படுத்துகிறது. இந்த ஒழுங்குமுறை கட்டமைப்பு, தற்போது அந்தப் பட்டியலில் இல்லாத புற்றுநோய் மருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதில் பெயர் முத்திரை கொண்ட மற்றும் ஜெனரிக் மருந்துகள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் ஆகியவற்றுடன் காப்புரிமை பெற்ற மற்றும் காப்புரிமை பெறாத மருந்துகள் எனப் பல்வேறு வகையான மருந்துகள் அடங்கும். அரசின் தகவல்படி, இத்தகைய மருந்துகளின் விலை விநியோகத்தின் வாயிலாக சராசரியாக சுமார் 170 சதவீதம் அதிகரிக்கிறது; சில நேரங்களில் இந்த விலை உயர்வு 700 சதவீதத்திற்கும் மேலாக உள்ளது. முன்னதாக, 2019–ம் ஆண்டில் அத்தியாவசியப் பட்டியலில் இல்லாத 42 புற்றுநோய் மருந்துகளுக்கு லாப வரம்பு நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக, 526 பெயர் முத்திரை கொண்ட மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை 91 சதவீதம் வரை குறைந்தது. இதன் மூலம் நோயாளிகளால் ஆண்டுக்கு ரூ.984 கோடி சேமிக்க முடிந்தது.

விழிப்புணர்வை மேம்படுத்தும் 'சஞ்சார் சாத்தி'... ரூ.5,000 கோடி மதிப்பிலான மோசடிகளைத் தடுத்துள்ளது.

சைபர் குற்றங்கள் மற்றும் நிதி மோசடிகளுக்காகத் தொலைத்தொடர்பு கட்டமைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட 'சஞ்சார் சாத்தி' இணையதளம், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், ரூ.5,000 கோடிக்கும் அதிகமான மோசடிகளைத் தடுத்துள்ளது. 2023 மே மாதம் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த இணையதளத்தை 300 மில்லியனுக்கும் அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர். மேலும், 4 கோடி மக்கள் தங்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மொபைல் இணைப்புகள் குறித்த விவரங்களைச் சரிபார்க்க இந்தச் சேவையைப் பயன்படுத்தியுள்ளனர்.

குடிமக்களுக்கான சேவைகள்

- தொலைந்து போன அல்லது திருடப்பட்ட கைப்பேசி: அனைத்து நிறுவனங்களின் சேவைகள் வாயிலாகவும் கைப்பேசிகளை முடக்கவும், அவற்றைக் கண்டறியவும் முடியும். இதுவரை 14 லட்சத்துக்கும் அதிகமான கைப்பேசிகள் மீட்கப்பட்டுள்ளன.
- உங்கள் பெயரிலுள்ள மொபைல் இணைப்புகள்: குடிமக்கள் தங்கள் பெயரில் வழங்கப்பட்டுள்ள மொபைல் இணைப்புகளின் எண்ணிக்கையைப் பார்த்து, தங்களுக்குத் தெரியாமல் மேற்கொள்ளப்பட்ட இணைப்புகள் குறித்து புகார் அளிக்கலாம்.
- சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் அல்லது செய்திகள்: 'சக்ஷு' வசதியைப் பயன்படுத்தி, மோசடி அழைப்புகள், குறுஞ்செய்திகள் மற்றும் வாட்ஸ்அப் செய்திகள் குறித்து பயனர்கள் புகார் அளிக்கலாம்.





மத்திய அமைச்சரவை முடிவுகள்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.10,000 கோடி நிதி

தேசிய சமூக நல உதவித் திட்டத்தை விரிவுபடுத்துதல்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் நேரடி பங்கு முதலீடு செய்வதற்காக 'சிறு மற்றும் நடுத்தர நிறுவன வளர்ச்சி நிதியம்' ஒன்றை உருவாக்குவதற்கான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்தத் துறைகளுக்குப் புதிய ஊக்கத்தை அளிக்கும். இந்த நிதி, தொழில் விரிவாக்கம், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் மற்றும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு வழிவகுப்பதோடு, கூடுதல் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும். மேலும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தேசிய சமூக நல உதவித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் தளவாட ஆணையத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு முன்மொழிவுகளுக்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

முடிவு: சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் நேரடி பங்கு முதலீட்டை ஊக்குவிப்பதற்காக, ரூ.10,000 கோடி மதிப்பிலான 'எஸ்எம்இ வளர்ச்சி நிதியம்' ஒன்றை உருவாக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: இந்த முயற்சி, தொழில் முனைவோரை வலுப்படுத்துவதிலும், போட்டித்தன்மை கொண்ட புதிய தலைமுறை நிறுவனங்களை உருவாக்குவதிலும் அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் நிலைநிறுத்துகிறது. அதிக வளர்ச்சித் திறன் கொண்ட சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் முதலீடு செய்வதன் மூலம், இந்த நிதி சிறந்த தொழில்முனைவோரை உருவாக்கவும், புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்மயமாக்கலை வேகப்படுத்தவும், நாடு முழுவதும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உதவும். 2047-க்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கான முக்கிய தூணாக இந்த முயற்சி அமையும்.

- இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்கள் உட்பட பல்வேறு தொழிற்பூங்காக்களில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், அந்தந்த பிராந்தியங்களின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.
- உள்ளூர் விநியோகக் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படுவதோடு உயர்தர வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

முடிவு: போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துத் துறைகளில் ஆராய்ச்சி, திட்டமிடல், மதிப்பீடு, கண்காணிப்பு மற்றும் தாக்க மதிப்பீடு ஆகியவற்றை வலுப்படுத்தும் நோக்கில், ஒருங்கிணைந்த போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்து ஆணையம் (ஐடிஎல்ஏ) என்ற சிறப்பு அமைப்பை (எஸ்பிவி) நிறுவ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தாக்கம்: போக்குவரத்து தொடர்பான பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் முகமைகளிடையே திட்டங்கள் மற்றும் அவற்றின் செயலாக்கத்தில் ஒருங்கிணைப்பு இல்லாததால் காணப்படும் நீண்டகால சவால்களை எதிர்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஐடிஎல்ஏ-வின் மூலம் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் பல்வகை போக்குவரத்து இணைப்பை ஊக்குவிப்பது, இந்தியாவில் போக்குவரத்து உள்கட்டமைப்பு மேம்பாட்டின் திறன், நிலைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவின் 'தொலைநோக்கு பார்வை 2047' இலக்கை அடைவதில் ஐடிஎல்ஏ வின் உருவாக்கம் மிக முக்கியப் பங்காற்றும்.
- இது பல்முனை இணைப்பை வலுப்படுத்தவும், உள்கட்டமைப்புத் திறனை மேம்படுத்தவும், தளவாடச் செலவுகளைக் குறைக்கவும், உலகளாவிய தளவாடப் போட்டியில் இந்தியாவின் நிலையை மேம்படுத்தவும் உதவும்.
- ஆராய்ச்சி, திட்டமிடல், தரவு ஒருங்கிணைப்பு மற்றும் திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றிற்கான நிறுவனத் திறனை ஐடிஎல்ஏ கட்டமைக்கும்.
- இது திறன் மேம்பாட்டிற்கும், சர்வதேச அளவில் சிறந்த நடைமுறைகளை ஏற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்



முடிவு: 'தேசிய சமூக நல உதவித் திட்டத்தை' 2026–27 முதல் 2030–31 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தாக்கம்: ஓய்வூதியத்திற்குத் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச ஊனமுற்றோர் சதவீத வரம்பு 80%–லிருந்து 40%–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அதிக எண்ணிக்கையிலான மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தின் பலன்களைப் பெற முடியும்.

- இனி, மாற்றுத்திறனாளிகள் பிறந்ததிலிருந்தே இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.
- இந்த மாற்றங்கள், சமூகப் பாதுகாப்பு பலன்களை அதிக எண்ணிக்கையிலான மாற்றுத் திறனாளிகளுக்குக் கொண்டு சேர்ப்பதுடன், ஓய்வூதியத் திட்டத்தின் எல்லையையும் விரிவு படுத்தும்.
- இந்தத் திட்டமும் அதன் உட்பிரிவுத் திட்டங்களும் மறுபெயரிடப்படும்.
- இதற்காக மொத்தம் ரூ.53,428 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மொத்தம் 3.20 கோடி பயனாளிகள் இதன் மூலம் பயனடைவார்கள்.
- மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவுத் தொகையானது, பிற பிரிவினருக்கான இதே போன்ற திட்டங்களின் கீழ் வழங்கப்படும் தொகையை விட எப்போதும் 25% கூடுதலாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை முடிவுகள் குறித்த செய்தியாளர் சந்திப்பைக் காண இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

முடிவு: சுமார் 11.40 லட்சம் ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாட்களுக்கான உற்பத்தி சார்ந்த போனஸ் (பிஎல்பி) வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தாக்கம்: இரவு பகலாக அயராது உழைக்கும் ஊழியர்களுக்கு இது ஒரு தீபாவளிப் பரிசாக அமையும். இதற்காக மொத்தம் ரூ. 2,009.61 கோடி போனஸ் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள ரயில்வே ஊழியர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் துர்கா பூஜை/தசரா பண்டிகைகளுக்கு முன்னதாக இந்த உற்பத்தி சார்ந்த போனஸ் (பிஎல்பி) வழங்கப்படுகிறது.


முடிவு: ஐடிபிஐ வங்கியின் உத்திசார்ந்த மறுசீரமைப்புக்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தாக்கம்: வங்கியின் மொத்த லாபப் பங்குகளில் 60.72% ஒரு உத்திசார் முதலீட்டாளருக்கு விற்கப்படும். இதில் மத்திய அரசுக்குச் சொந்தமான 30.48% பங்குகளும், எல்ஐசி–க்கு சொந்தமான 30.24% பங்குகளும் அடங்கும்.

- இதனைத் தொடர்ந்து, இந்திய அரசு ஐடிபிஐ வங்கி லிமிடெட்டில் 15% பங்குகளைத் தக்கவைத்துக் கொள்ளும், மேலும் எல்ஐசி நிறுவனம் 19% பங்குகளைத் தக்கவைத்துக் கொள்ளும்.







'நாம் இதைச் செய்து காட்டுவோம்'

புதிய இந்தியாவின் கூட்டு வலிமையின் அடையாளம்

குஜராத் முதலமைச்சர் முதல் இந்தியாவின் பிரதமர் வரை, பிரதமர் நரேந்திர மோடியின் 25 ஆண்டுகாலப் பயணம், கொள்கை முடிவுகள், மக்கள் நலத் திட்டங்கள், தேசிய முன்னெடுப்புகள் மற்றும் சீர்திருத்தங்கள் எனப் பல முக்கிய மைல்கற்களைக் கொண்டுள்ளது. கொள்கைகளை உருவாக்குவது முதல், அவற்றின் பலன்கள் கடைக்கோடி குடிமகன் வரை சென்றடைவது வரையிலும்; தற்சார்பு முதல் தொழில்நுட்பம் வரையிலும்; தேசப் பாதுகாப்பு முதல் நிறுவனச் சீர்திருத்தங்கள் வரையிலும் – இத்தகைய மாற்றங்களுக்கு அவரது தொலைநோக்குப் பார்வை அடித்தளமாக அமைந்திருக்கிறது.

மத்திய அமைச்சரவை தமது நன்றியைத் தெரிவிக்கும் வகையில், அக்டோபர் 6 அன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அவரது 25 ஆண்டுகால இடைவிடாத, தொடர்ச்சியான தலைமைத்துவத்தைப் பாராட்டியது. அதனைத் தொடர்ந்து, 25 ஆண்டுகால சேவையை நிறைவு செய்ததைக் குறிக்கும் வகையில் அக்டோபர் 7 அன்று நடைபெற்ற நிகழ்வில், பிரதமர் நரேந்திர மோடி 'நாம் இதைச் செய்து முடிப்போம்' என்ற முழக்கத்தை முன்வைத்தார்; இது 'புதிய இந்தியாவின்' கூட்டு வலிமையின் அடையாளமாக அமைந்தது. இது பொதுச் சேவையில் 25 ஆண்டுகாலப் பயணமாகும். மக்களுடன் வாழ்ந்து, நாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தப் பயணம், தேசத்தைக் கட்டமைப்பதற்கான உறுதியாலும் அர்ப்பணிப்பு உணர்வாலும் முன்னெடுக்கப்பட்டது. இந்த 25 ஆண்டுகால சேவையில், பிரதமர் நரேந்திர மோடி முக்கியமான முடிவுகளை எடுத்தது மட்டுமின்றி, ஒரு புதிய மனநிலையை உருவாக்குவதற்கான அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்தார். அக்டோபர் 7 அன்று, தனது 25 ஆண்டுகாலப் பயணத்திற்கு, மக்களின் நம்பிக்கை மற்றும் கட்சித் தொண்டர்களின் கடின உழைப்பு ஆகியவையே முக்கியக் காரணம் என்று அவர் குறிப்பிட்டார். மக்களின் கூட்டுச் சக்தியே தனது மிகப்பெரிய பலம் என்று குறிப்பிட்ட அவர், 'வளர்ச்சியடைந்த இந்தியா' எனும் இலக்கை நோக்கிப் புதிய ஆற்றலுடன் முன்னேற அழைப்பு விடுத்தார்.

ஸ்ரீ விநாயகர் கோயிலில் வழிபாடு

பிரதமர் மோடி அக்டோபர் 7 அன்று காலை, ஸ்ரீ விநாயகர் கோயிலில் வழிபாடு செய்து, நாட்டின் 140 கோடி மக்களின் நலனுக்காக பிரார்த்தனை செய்தார். தேசத்திற்கு இன்னும் கூடுதல் உத்வேகத்துடன் சேவை செய்வதற்கான வலிமையை அவர் இறைவனிடம் கோரினார். தான் வகிக்கும் தற்போதைய பதவியும், பொறுப்புகளும், மக்கள் (அவர் மக்களை 'ஜனதா–ஜனார்தனன்' – அதாவது மக்களே இறைவன் – என்று கருதுகிறார்), லட்சக்கணக்கான அர்ப்பணிப்புள்ள தொண்டர்களின் நம்பிக்கை மற்றும் கடின உழைப்பின் பலனே என்பதை அவர் நன்றியுடன் தெரிவித்தார்.



பிரதமர் மோடி தன்னை இன்னும் ஒரு மாணவராகவே கருதுகிறார்

தனது மாணவ பருவத்தை நினைவு கூர்ந்த பிரதமர், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதில் தமக்கு இருக்கும் ஆர்வம், எப்போதும் தமது வாழ்வின் ஒரு அங்கமாகவே இருந்து வருவதாகவும், இன்றும் கூட தன்னை ஒரு மாணவராகவே அவர் கருதுவதாகவும் கூறினார். கடந்த கால நிகழ்வுகளை நினைத்துப் பார்க்கும்போது, தமக்குள் ஒரு நன்றியுணர்வு பெருகுவதாக அவர் தெரிவித்தார். தனது வெற்றிக்கு உதவியவர்கள், தமக்குப் பணிவுணர்வைக் கற்றுக் கொடுத்ததாகவும், அதேசமயம், தமக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள், மீண்டும் எவ்வாறு எழுவது என்பதைக் கற்றுக் கொடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகள் அவருக்கு ஜனநாயகத்தின் வலிமையை உணர்த்தியதுடன், ஒவ்வொரு நெருக்கடியும் அவரது பொறுமையை வெகுவாக சோதித்தன.

கனவுகள் பெரியதாகவும், மன உறுதி உயர்ந்ததாகவும் இருக்க வேண்டும்

வளங்கள் குறைவாக இருந்த போதும், ஒருவரது கனவுகள் மிகப்பெரியனவாகவும், மன உறுதி அசைக்க முடியாததாகவும் இருக்க வேண்டும் என்பதை கிராமப்புற மக்களின் வாழ்வும், ஏழைகளின் அனுபவங்களும் தனக்குக் கற்றுத் தந்திருப்பதாகப் பிரதமர் குறிப்பிட்டார். நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கும், தன்னார்வலர்களின் பங்களிப்பிற்கும் அவர் மரியாதை செலுத்தினார். இந்தியத் தாய்க்குச் சேவை செய்வதற்கான உறுதிப்பாட்டினால் செயல்படும் கோடிக்கணக்கான தன்னார்வலர்களும் தொண்டர்களும், தமது பயணம் முழுவதும் தனக்கு மிகப்பெரிய ஆற்றல் சக்தியாக இருந்து வந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

'நாம் இதைச் செய்து காட்டுவோம்'

புதிய இந்தியாவின் கூட்டு வலிமையின் சின்னமாக, 'நாம் இதைச் செய்து காட்டுவோம்' என்ற முழக்கத்தைத் தனது உரையில் பிரதமர் அறிமுகப்படுத்தினார். வளர்ச்சியடைந்த இந்தியாவை அடையும் இலக்கு என்பது வெறும் நினைவுகூர்வதற்கான விஷயம் மட்டுமின்றி, நமது தீர்மானங்களுக்குப் புதிய ஆற்றலை அளிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். மக்கள் சேவையில் 25 ஆண்டு கால பயணத்தை, தனிப்பட்ட

> **நான் வெற்றி பெற உதவியவர்... எனக்குப் பணிவைக் கற்றுக்கொடுத்தார். நான் வீழ்வதற்குக் காரணமானவர்... மீண்டும் எழுவதைக் கற்றுக்கொடுத்தார். எனக்கு ஆதரவு அளித்தவர்... நம்பிக்கையின் வலிமையைக் காட்டினார். என்னை எதிர்த்தவர்... ஜனநாயகத்தின் வலிமையைக் கற்றுக்கொடுத்தார்.**
>
> *– பிரதமர் நரேந்திர மோடி*

பெருமையாகத் தான் கருதவில்லை என்றும், தம்மைப் பொறுத்தவரை வாழ்க்கையின் நோக்கம் என்பது ஒரு பதவியோ, அரசியல் லட்சியமோ அல்ல; மாறாக, அது ஒரு இயக்கம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மக்கள் சக்தியின் உந்துதலில், வளர்ச்சியின் புதிய உச்சங்களை குஜராத் எட்டுகிறது

குஜராத்தின் முதலமைச்சராகப் பணிபுரிந்த அனுபவங்களை நினைவு கூர்ந்த பிரதமர், அந்தச் சமயத்தில் தமக்கு விரிவான நிர்வாக அனுபவம் இல்லை என்றாலும், மக்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்ததாகக் கூறினார். முடிவுகளை



பிரதமரின் 25 ஆண்டுகால தொடர்ச்சியான, இடைவிடாத தலைமைத்துவத்தைப் பாராட்டி மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது

அரசின் தலைவராகத் தொடர்ந்து 25 ஆண்டுகளை நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடியைப் பாராட்டி, அக்டோபர் 6–ம் தேதி, மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியது. இது வெறும் சம்பிரதாயமான பாராட்டாக இல்லாமல், 'தேசமே முதலில்', 'குடிமக்களே முதலில்' என்ற கொள்கையின்படி பிரதமர் மோடியின் சிறப்புவாய்ந்த பயணத்தைக் கொண்டாடும் நிகழ்வாகும். குஜராத்தில் தொடர்ந்து மூன்று முறை கிடைத்த மகத்தான மக்கள் ஆதரவும், அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று மக்களவைத் தேர்தல்களில் அவருக்குக் கிடைத்த வெற்றிகளும், பிரதமர் நரேந்திர மோடி மீது மக்கள் கொண்டுள்ள தொடர் நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

குஜராத் மாநிலத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து இந்தியாவின் தலைமைப் பொறுப்பு வரை, அவரது தலைமைத்துவத்தை ஒன்றிணைக்கும் விஷயங்களை பத்து முக்கிய அம்சங்கள் எடுத்துரைக்கின்றன. அமைச்சரவையின் தீர்மானத்தின் முக்கியப் பகுதிகள் பின்வருமாறு:

1. குஜராத்திலிருந்து இந்தியா வரை: வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வை

குஜராத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட முன்முயற்சிகளை பிரதமர் நரேந்திர மோடி எவ்வாறு தேசிய அளவில் செயல்படுத்தினார் என்பதை அமைச்சரவையின் தீர்மானம் எடுத்துரைக்கிறது. பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக அவர் நேரடியாகச் செயல்படுத்திய 'ஸ்வாகத்' திட்டத்துக்கு, 2010–ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சேவை விருது வழங்கப்பட்டது. முடிவுறாமல் இருக்கும் திட்டங்களை ஆய்வு செய்தல், அவை எதிர்கொள்ளும் தடைகளை நீக்குதல், பணிகளை விரைவுபடுத்தி நிறைவு செய்தல் ஆகியவற்றுக்காக அரசு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் 'பிரகதி' திட்டத்தை உருவாக்குவதற்கு இது முன்னுதாரணமாக அமைந்தது. இதேபோல், வேளாண்மைக்கான பிரத்தியேக மின்சாரப் பாதைகளை ஏற்படுத்திய ஜோதிகிராம் திட்டத்தின் அணுகுமுறையும் தேசிய அளவில் பின்பற்றப்பட்டது. இதன் மூலம், குஜராத்தின் வளர்ச்சி நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

2. ஏழைகள் மீதான அக்கறை, அவர்களின் கண்ணியமான வாழ்வுக்கு வழிவகுத்தது

அன்றாட வாழ்க்கையில் தனது தாயார் எதிர்கொண்ட சிரமங்களைக் கண்டதும், பயணங்களின்போது வறுமையின் தாக்கங்களை நேரில் உணர்ந்ததும், பிரதமர் மோடியிடம் ஏழைகள் மீதான அக்கறையை ஆழமாக வளர்த்தன. வீட்டு வசதி, குடிநீர், வங்கிச் சேவைகள், சுகாதார வசதிகளை மக்களுக்கு வழங்கும் திட்டங்களுடன் இந்த அனுபவங்களை அமைச்சரவையின் தீர்மானம் தொடர்புபடுத்துகிறது. சுமார் 60 கோடி ஜன் தன் கணக்குகள், 4 கோடிக்கும் மேற்பட்ட வீடுகள், 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டிருப்பது முதலியவை, தனிப்பட்ட அனுபவங்களிலிருந்து உருவான புரிதல், மக்கள் நல நடவடிக்கைகளாக மாறியதைக் காட்டுகின்றன. இதன் மூலம், பல

எடுப்பது, கொள்கைகளை உருவாக்குவது, அவற்றை மக்களுடன் இணைந்து செயல்படுத்துவது ஆகியவற்றைத் தனது செயல்பாடுகளின் அடித்தளமாக அவர் மாற்றினார். இத்தகைய 'மக்கள் சக்தியின்' மூலம்தான் குஜராத் மாநிலம் வளர்ச்சியின் புதிய உச்சங்களை எட்டியது. 2014–ம் ஆண்டில், நாட்டின் 'முதன்மைச் சேவகர்' என்ற முறையில் நாட்டுக்குச் சேவை செய்யும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகப் பிரதமர் குறிப்பிட்டார். அக்காலகட்டத்தில், நாடு பொருளாதாரச் சவால்கள், பணவீக்கம், ஒருவித சோர்வு முதலிய சிக்கல்களை எதிர்கொண்டிருந்தது. மக்கள் சக்தியை மீண்டும் ஒருமுறை ஒன்றிணைக்குமாறு பிரதமர் அழைப்பு விடுத்ததுடன், "நாம் இதைச் செய்து காட்டுவோம்" என்ற நம்பிக்கையை மக்கள்

குடும்பங்களின் வாழ்க்கை கண்ணியம் மிக்கதாக மாறியுள்ளது.

3. அதிகாரமளித்தல் மூலம் புதிய வாய்ப்புகள் உருவாகின்றன

மக்கள் தங்களது எதிர்காலத்தைத் தாங்களே வடிவமைத்துக்கொள்ள உதவ வேண்டும் என்ற பிரதமர் மோடியின் உறுதிப்பாடு, அமைச்சரவையின் தீர்மானம் முழுவதும் வெளிப்படுகிறது. சுமார் 3.5 கோடி பெண்கள், லட்சாதிபதி சகோதரிகளாக உயர்ந்துள்ளனர். அதேவேளையில், மகளிர் இடஒதுக்கீடுச் சட்டம், மகளிர் இடஒதுக்கீட்டிற்கு வழிவகுத்துள்ளது. புத்தொழில் நிறுவனங்கள், திறன் மேம்பாடு, கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன. பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு சுமார் ரூ.4 லட்சம் கோடி நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினச் சமூகத்தினருக்கு இலக்குடன் கூடிய ஆதரவை வழங்கும் பிரதமரின் ஜன்மன் திட்டம், வரலாற்று ரீதியாக வளர்ச்சியின் பலன்கள் சென்றடையாத மக்களுக்கும் வளர்ச்சியை விரிவுபடுத்தியுள்ளது.

4. சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் தளராத உறுதிப்பாடு

அரசியல் ரீதியான இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் பிரதமர் மோடி கொண்டுள்ள உறுதிப்பாட்டிற்கு அமைச்சரவையின் தீர்மானம் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கிறது. சரக்கு மற்றும் சேவை வரி, நலத்திட்டங்களின் பலன்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், காலனிய ஆட்சிக்காலச் சட்டங்களுக்கு மாற்றாக புதிய சட்டங்களைக் கொண்டுவந்தது முதலியவை, நீண்டகாலமாக நிலவி வந்த சவால்களுக்குத் தீர்வு காண்பதில் பிரதமரின் உறுதியைப் பறைசாற்றுகின்றன. தூய்மை, மின்னணுப் பணப் பரிவர்த்தனைகள், உள்நாட்டுப் பொருட்களின் பயன்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும் விதமான அவரது அழைப்பு, மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் மக்களையும் பங்கேற்கச் செய்தன. உறுதியான நம்பிக்கை, மக்களின் பங்கேற்பு, தேசிய லட்சியம் ஆகியவற்றின் வலிமையுடன், சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது, அவரது தலைமையின் நிலையான உறுதிப்பாடாகத் திகழ்கிறது.

5. தற்சார்பு இந்தியாவுக்கான அடித்தளங்களைக் கட்டமைத்தல்

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், பொதுத்துறை மூலதனச் செலவினம் ரூ.2 லட்சம் கோடியிலிருந்து கிட்டத்தட்ட ரூ.12 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதனுடன், நெடுஞ்சாலைகள் விரிவாக்கம், ரயில்வே மின்மயமாக்கல் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மின்னணுப் பொருட்களின் உற்பத்தி சுமார் ரூ.2 லட்சம் கோடியிலிருந்து ரூ.13 லட்சம் கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது. பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, செமிகண்டக்டர் உற்பத்தித் துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களும், இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனை வலுப்படுத்துவதில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.

6. மக்களுக்குச் சேவையாற்றும் தொழில்நுட்பம், தேசிய இலக்குகளையும் விரிவுபடுத்துகிறது

அன்றாடப் பொதுச் சேவைகள் முதல் அறிவியல் துறையின் புதிய சாதனைகள் வரை, தொழில்நுட்பத்தின் மீதான பிரதமர் மோடியின் நம்பிக்கை பல்வேறு சாதனைகள் மூலம் வெளிப்படுகிறது. ஜன் தன் கணக்குகள், ஆதார், கைப்பேசி வசதிகள் ஆகியவை அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தின. அதேவேளையில், பணப் பரிவர்த்தனை முறையில் பெரிய மாற்றத்தை யுபிஐ ஏற்படுத்தியது. இந்தியா தனது சொந்த கோவிட் தடுப்பூசிகளை உருவாக்கியதும், சந்திரயான்–3 விண்கலத்தை நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறக்கியதும், அறிவியல் திறன் மிக்க, தன்னிறைவு கொண்ட தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதில் பிரதமர் மோடி கொண்டுள்ள தொலைநோக்குப் பார்வைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. விண்வெளித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்கேற்பு, செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், அமைச்சரவையின் தீர்மானத்தில் பாராட்டப்பட்டுள்ள 'மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதுடன், நாட்டின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்துவதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது' என்ற தொலைநோக்குப் பார்வையை மேலும் முன்னெடுத்துச் செல்கின்றன.

7. நெருக்கடியான காலகட்டங்களிலும் தளராத தலைமைத்துவம்

உலக அளவில் நெருக்கடியான மற்றும் சவாலான காலகட்டங்களில், இந்தியாவுக்கு உரிய வழிகாட்டுதலை வழங்குவதில் பிரதமர் மோடியின் திறனை அமைச்சரவையின் தீர்மானம் எடுத்துரைக்கிறது. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், நாட்டை ஒருங்கிணைத்த அவர், உள்நாட்டிலேயே தடுப்பூசிகளை உருவாக்குவதற்கு ஆதரவளித்ததுடன், மக்களுக்கு தடுப்பூசிகள் விரைவாக செலுத்தவும் வழிவகை செய்தார். மேற்கு ஆசிய நெருக்கடியின்போது, உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும், சர்வதேச இடையூறுகளின் தாக்கங்களை இந்தியா திறம்பட எதிர்கொள்ள உதவின. உடனடி நடவடிக்கைகளுடன், பல ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட திறன்களையும் ஒருங்கிணைத்த அவரது தலைமைத்துவம், சவாலான காலகட்டங்களில் நாடு மீள்திறனுடனும் நம்பிக்கையுடனும் செயல்பட வழிவகுத்தது.

8. உறுதியான தலைமை, அமைதியையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்துகிறது

2016–ல் மேற்கொள்ளப்பட்ட துல்லியத் தாக்குதல்கள், 2019–ல் நடத்தப்பட்ட பாலகோட் வான்வழித் தாக்குதல்கள், 2025–ம் ஆண்டின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை ஆகியவை, பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் தேசியப் பாதுகாப்பில் வகுக்கப்பட்ட உத்திகளை எடுத்துக்காட்டுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் 370–வது பிரிவு நீக்கம், ஒரே பதவி ஒரே ஓய்வூதியத் திட்டம், முப்படை தலைமைத் தளபதி பதவி உருவாக்கம் ஆகியவற்றையும் இந்தத் தீர்மானம் இந்த நடவடிக்கைகளுடன் இணைத்துக் குறிப்பிடுகிறது. மாவோயிஸ்ட் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் வடகிழக்குப் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளும், தேசிய உறுதிப்பாட்டுடன் வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் மக்கள் நம்பிக்கையையும் ஒருங்கிணைக்கும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

9. உலக அரங்கில் வலுப்பெறும் இந்தியாவின் குரல்

பல்வேறு கருத்து வேறுபாடுகளைக் கடந்து ஒத்துழைப்பை உருவாக்கும் பிரதமர் மோடியின் தனித்திறனுடன், உலக அரங்கில்

மத்தியில் விதைத்தார்.

இன்றைய சீர்திருத்தத்தின் வேகத்தில் கவனம் செலுத்துதல்

இந்தியப் பொருளாதாரம், உற்பத்தி, ஏற்றுமதி, கைப்பேசி உற்பத்தி, சூரியசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பிரதமர் மோடி எடுத்துரைத்தார். கடந்த காலங்களில் நெருக்கடியான சூழல்களில் இந்தியப் பொருளாதாரத்தின் சிக்கல்கள் குறித்தே விவாதங்கள் இருந்தன என்றும், ஆனால், இன்று இந்தியாவின் மீள்திறன் குறித்தே விவாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். 36 நாடுகள் இந்தியாவுக்கு வழங்கியுள்ள



இந்தியாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை அமைச்சரவையின் தீர்மானம் இணைக்கிறது. ஜி20, பிரிக்ஸ் கூட்டமைப்புகளில் ஒருமித்த கருத்தை உருவாக்கியது, வளரும் நாடுகளின் நலன்களுக்காகக் குரல் கொடுத்தது, ஆப்பிரிக்க ஒன்றியத்தை ஜி20 அமைப்பில் உறுப்பினராக இணைத்தது ஆகியவை, அவரது ராஜதந்திரத் தலைமையைப் பிரதிபலிக்கின்றன. 'தடுப்பூசி மைத்ரி' திட்டம், இந்தியாவின் திறன்கள் பிற நாடுகளுக்கும் எவ்வாறு பயனளிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டியது.

10. பாரம்பரியம் மற்றும் பொறுப்புணர்விலிருந்து வலிமை பெறும் வளர்ச்சி

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை வளர்ச்சி, கலாச்சாரத் தன்னம்பிக்கை, சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. பருவநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள் குஜராத்தின் பிரத்யேகத் துறையிலிருந்து தொடங்கி, தற்போது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விரிவாக்கம், சர்வதேசக் கூட்டாண்மைகள் எனப் பல நிலைகளில் முன்னேற்றம் கண்டுள்ளன. யோகா, சிறுதானியங்கள், காசி விஸ்வநாதர் கோயில், ராமர் சிலை பிரதிஷ்டை ஆகியவை இந்தியாவின் வரலாற்றுப் பாரம்பரியப் பிணைப்பை வலுப்படுத்தியுள்ளன.

அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக வாசிக்க இந்த கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

உயரிய விருதுகள், சர்வதேச அளவில் பிரதமர் நரேந்திர மோடியின் நன்மதிப்பையும், உலகளாவிய பொதுப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளில் இந்தியாவின் வளர்ந்து வரும் பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன. வேளாண் துறையைப் பற்றி கூறுகையில், 2015 முதல் 2025 வரையிலான பத்தாண்டுக் காலத்தில் இத்துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாகப் பிரதமர் தெரிவித்தார்.

'அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்': நல்லாட்சியின் அடித்தளம்

"அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம்" என்பதே தனது நல்லாட்சியின் அடித்தளம் என்று பிரதமர் குறிப்பிட்டார். நல்லாட்சியை 'முழுமை பெறுதல்' என்ற கருத்துருவுடன் இணைத்து விளக்கமளித்த அவர், அரசுத் திட்டங்களின் பலன்கள் தகுதியுள்ள ஒவ்வொரு பயனாளியையும் சென்றடைவதை உறுதி செய்வதே இதன் பொருள் என்று கூறினார். தகுதியுள்ள எவரும் விடுபடக் கூடாது, மற்றவர்களின் உரிமைகளை எவரும் பறித்துக்கொள்ளவும் கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

இளம் இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல்

சுற்றுலா, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம், நல்வாழ்வு, விளையாட்டு, புத்தாக்கம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவை உலகளாவிய தலைமைப் பொறுப்பு வகிக்கும் நாடாக உருவாக்குவதற்கான தொலைநோக்குப் பார்வையைப் பிரதமர் மோடி எடுத்துரைத்தார். இளைஞர்களே இந்தியாவின் மிகப்பெரிய பலம் என்று குறிப்பிட்ட அவர், நாட்டின் இளம் மக்கள் தொகை என்பது, வரலாறு, இந்தியாவுக்கு வழங்கியுள்ள மகத்தான வாய்ப்பு என்று தெரிவித்தார். முந்தைய தலைமுறையினர் எதிர்கொண்ட இன்னல்களை எதிர்காலத் தலைமுறையினர் எதிர்கொள்ள

25 ஆண்டுகால நல்லாட்சி

குடியரசுத்தலைவர், உலகத் தலைவர்கள் மற்றும் உடன் பணியாற்றுபவர்களின் பாராட்டு

2026 அக்டோபர் 7 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, அரசின் தலைவராக வரலாற்றுச் சிறப்புமிக்க 25 ஆண்டுகாலப் பணியை நிறைவு செய்ததை முன்னிட்டு, உலகத் தலைவர்கள் அவருக்குத் தங்களது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர். 2001–ம் ஆண்டில் குஜராத் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதையும், பின்னர் 2014–ம் ஆண்டில் இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றதை அடுத்து, 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையும் குறிக்கும் வகையில், உலகத் தலைவர்கள், பிரதமர் மோடியின் தலைமைத்துவம், நல்லாட்சிக்கான அர்ப்பணிப்பு, உலக அமைதி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, நிலையான வளர்ச்சி ஆகியவற்றுக்கான அவரது உறுதிப்பாட்டைப் பாராட்டினர்.

இந்த முக்கிய மைல்கல், மக்களின் நலனுக்கான தளராத அர்ப்பணிப்பையும், இந்தியாவின் முன்னேற்றத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கான உறுதியையும் பிரதிபலிப்பதாக, குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார். குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு மட்டுமின்றி, முன்னாள் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த், குடியரசு துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தலைவர்களும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பூடான் பிரதமர் ஷெரிங் டோப்கே, நைஜீரிய அதிபர் போலா அகமது டினுபு, பிலிப்பைன்ஸ் அதிபர் உள்ளிட்ட உலகத் தலைவர்களும் பிரதமர் மோடிக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். மேலும், நேபாளம், பெல்ஜியம், ஜப்பான், டொமினிகா ஆகிய நாடுகளின் பிரதமர்களும், போட்ஸ்வானா அதிபரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

எல்.கே. அத்வானியைச் சந்தித்துபிரதமர் வாழ்த்து பெற்றார்

25 ஆண்டுகால சேவையைக் குறிக்கும் வகையில், முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானியை அவரது இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து வாழ்த்து பெற்றார். அத்வானியின் பல தசாப்தகால தேசச் சேவையையும், பொது வாழ்வில் அவர் ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளையும் பாராட்டிய மோடி, அவரது முயற்சிகள், நாட்டின் முன்னேற்றத்தில் அழியாதத் தடத்தைப் பதித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.



வேண்டிய நிலை ஏற்படாத வகையில், இளைஞர்களின் ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வாழ்வின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு நொடியும் இந்திய மண்ணுக்கே அர்ப்பணிப்பு

தேசமே முதலில் என்ற உறுதிமொழியுடன் தொடர்ந்து முன்னேறுவதற்கு பிரதமர் உறுதியளித்தார். தேசத்தை வளம் பெறச் செய்வதே தனது சபதம் என்றும், நாட்டுக்குச் சேவையாற்றுவதே தனது இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார். செயலாக்கமே தனது தர்மம் என்றும், கடமையை நிறைவேற்றுவதே தனது உறுதியான அர்ப்பணிப்பு என்றும் அவர் தெரிவித்தார். தனிமனித நிலையிலிருந்து சமூகத்தின் ஒட்டுமொத்த நிலைக்கு– 'நான்' என்பதிலிருந்து 'நாம்' என்ற நிலைக்கு உயர்ந்து, தனது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு நொடியும் இந்திய நாட்டுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டிருக்கும் என்று அவர் உறுதியளித்தார். இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறும் வரை ஓயமாட்டேன், சோர்வடையமாட்டேன், எனது பாதையிலிருந்து ஒருபோதும் விலகமாட்டேன் என்றும் அவர் சபதம் ஏற்றார். ●

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

இந்தியர்களின் இதயங்களை ஒன்றிணைத்த ஓர் அறைகூவல்











இந்த ஆண்டு தீபாவளியின் கண்கவர் விளக்குகள், தற்சார்பு உணர்வின் ஒளியுடன் ஏற்றப்படுவதால் அவை தனிச்சிறப்புப் பெறுகின்றன. 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் வாயிலாக எதிரொலித்த 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற அறைகூவல், இன்று ஒரு பிரம்மாண்டமான ஆலமரமாக வளர்ந்துள்ளது. எளிமையாகத் தொடங்கிய இந்தப் பயணம், தற்போது செமிகண்டக்டர் சிப்கள், அணுசக்தி போன்ற துறைகளில் உள்நாட்டுச் சாதனைகளாக உருவெடுத்துள்ளன. காதி முதல் பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதி வரை, பொம்மை உற்பத்தித் தொழில், வேளாண்மை, இதர ஏற்றுமதித் துறைகள் வரை, 'இந்தியத்தன்மை' என்ற பெருமித உணர்வு உலகெங்கும் எதிரொலிக்கிறது. சுதேசி என்பது சந்தை சார்ந்த கருத்து மட்டுமின்றி, தேசியப் பாதுகாப்பிற்கான வலிமையான அரணாகவும் திகழ்கிறது என்பதை 'ஆபரேஷன் சிந்தூர்' நிரூபித்துள்ளது. கைவினைக்கலைஞர்களின் திறமைகளைப் பெருமையுடன் போற்றும் இந்தியா, 2047–ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாட்டை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைத்து வரும் முக்கியமான தருணமாக அமைந்துள்ளதால், இந்த ஆண்டு தீபாவளி தனிச்சிறப்புப் பெறுகிறது. தீபாவளி, சத் பூஜை போன்ற பண்டிகைகளின் போது ஏற்றப்படும் ஒவ்வொரு விளக்கும், வழங்கப்படும் ஒவ்வொரு பரிசும், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொள்முதலும் வெறும் பண்டிகை கொண்டாட்டத்தை மட்டும் குறிக்கவில்லை; இவை 140 கோடி இந்தியர்களின் கூட்டு உறுதியை பறைசாற்றுகின்றன – சுதேசி, தற்சார்பு மற்றும் வளமான இந்தியாவுக்கான உறுதியாகும்.











அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

இந்தியா, பண்டிகைகளின் பூமியாகத் திகழ்கிறது. இங்கு ஒவ்வொரு மதத்தினரும், சமூகத்தினரும் கொண்டாடும் பண்டிகைகள் மகிழ்ச்சியை மட்டுமின்றி, உறுதியான நல்லெண்ணங்களையும் நம்முள் விதைக்கின்றன. இத்தகைய ஒவ்வொரு உறுதிமொழிக்கும் தனித்துவமான சிறப்பும், ஆழமான பொருளும் உண்டு. இருளை ஒளி வெல்வதை தீபாவளி கொண்டாடுகிறது. ரம்ஜான் பண்டிகை, சகோதரத்துவத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்துகிறது. கிறிஸ்துமஸ், அன்பையும் கருணையையும் போதிக்கிறது. சீக்கிய மதத்தின் பண்டிகைகள், சேவை மற்றும் தியாகத்தின் பாதையைக் காட்டுகின்றன; புத்த பூர்ணிமா, இரக்கம் மற்றும் அகிம்சையின் மாண்புகளை உணர்த்துகிறது. ரக்ஷா பந்தன், சகோதர, சகோதரிகளுக்கு இடையிலான பாசத்தை ஒரே நூலில் பிணைக்கிறது. மகர சங்கராந்தி, கொடை மற்றும் சமூக நல்லிணக்கத்தின் செய்தியை எடுத்துரைக்கிறது. மாபெரும் திருவிழாவான சத் பூஜை, சூரியனுக்கும் நீருக்கும் நன்றி செலுத்தும் நிகழ்வாகவும், ஒழுக்கத்தையும் தவத்தையும் கடைப்பிடிக்கும் தருணமாகவும் அமைகிறது. நீர் அருந்தாமல் நோன்பிருத்தல், சூரிய உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் அர்க்கியம் செலுத்துதல் ஆகிய மரபுகள், இயற்கையைப் போற்றும் ஆழமான பண்பாட்டுப் பாரம்பரியத்தை இன்றளவும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. நவராத்திரி, ஓணம், பொங்கல், பைசாகி, பிஹு போன்ற பண்டிகைகள் ஒவ்வொன்றும் தனித்துவமான மரபுகளையும், கதைகளையும் கொண்டிருந்தாலும், கொண்டாட்டத்தில் அனைவரும் ஒன்றிணையும் உணர்வு அவற்றை ஒரே இழையில் இணைக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, இந்த ஒற்றுமை உணர்வு ஒரு புதிய உறுதிப்பாட்டை முன்னிறுத்தி வருகிறது. அனைத்து சமூகங்கள், மதங்கள், பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களின் பண்டிகைகளை ஒரே இழையில் இணைக்கும் இந்த உறுதிப்பாடுதான் 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்பதாகும்.

மாபெரும் திருவிழாவான சத் பூஜை, இந்த உணர்வின் இயல்பான, உயிரோட்டமிக்க வெளிப்பாடாகத் திகழ்கிறது. சத் பூஜையில் பயன்படுத்தப்படும் முறமும், பெரிய மூங்கில் கூடையும் மூங்கிலால் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் பீகார் மற்றும் பூர்வாஞ்சல் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மூங்கில் கைவினைக்கலைஞர்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கிறது. சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும் கூடைகள், மண் விளக்குகள், மண் அடுப்புகள் என அனைத்திலும் கிராமப்புற மண்பாண்டத் தொழிலாளர்களின் கைவினைத்திறன் வெளிப்படுகிறது. அவர்களது உழைப்பின் பயன் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைகிறது. பிரசாதமாகப் படைக்கப்படும் தேகுவா, உள்ளூர் கோதுமை மற்றும் வெல்லத்தால் தயாரிக்கப்படுகிறது. பிரசாதத் தட்டில் இடம்பெறும் கரும்பு, தேங்காய், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, வாழைப்பழங்கள், பாக்கு உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் உள்ளூர் விவசாயிகளின் வயல்களிலிருந்து நேரடியாகக் கிடைக்கின்றன. மஞ்சள் செடி, விளக்கேற்றப் பயன்படுத்தப்படும் மண் தட்டு முதல் ஆற்றங்கரையில் விரிக்கப்படும் பாய்கள் வரை, சத் பூஜையுடன் தொடர்புடைய ஒவ்வொரு பொருளும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் கைவினைக்கலைஞர்கள், நெசவாளர்கள், விவசாயிகளின் கடின உழைப்பைப் பறைசாற்றுகின்றன. இதனால்தான், பல ஆண்டுகளாக, முறையான அழைப்பு ஏதுமின்றியே, சத் பூஜை இயல்பாகவே 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' என்ற உணர்வை வெளிப்படுத்தி வருகிறது. தற்போது இந்தப் பண்டிகை தனது பிராந்திய எல்லைகளைக் கடந்து உலகளாவிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியும் தமது நிகழ்ச்சிகளின்போதும், சத் பூஜையின் முக்கியத்துவம் குறித்து தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறார்.



அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'



'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்', 'இந்தியாவில் உற்பத்தி செய்தல்', 'தற்சார்பு இந்தியா' ஆகிய தொலைநோக்குப் பார்வைகளின் நேரடி விளைவாக, நவராத்திரி முதல் தீபாவளி வரையிலான காலகட்டத்தில் நாட்டில் வணிகப் பரிவர்த்தனை மதிப்பு ரூ.7 லட்சம் கோடியைத் தாண்டும் என்று அகில இந்திய வணிகர்கள் கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது.

இந்தியப் பண்பாட்டின் சாரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள பண்டிகைகளின்போது பொருட்களை வாங்குவதாக இருந்தாலும், பரிசுகளைப் பரிமாறிக்கொள்வதாக இருந்தாலும், அவை இந்தியக் கைவினைக்கலைஞர்களால் உருவாக்கப்பட்டவையாக இருக்கும்போது, அந்தப் பண்டிகை வெறும் நம்பிக்கை சார்ந்த கொண்டாட்டமாக மட்டும் அமைவதில்லை; மாறாக, அது நாட்டைக் கட்டமைப்பதில் ஒவ்வொரு குடிமகனும் நேரடியாகப் பங்களிப்பதற்கான வாய்ப்பாக அமைகிறது. இந்த உணர்வுதான் பன்முகத்தன்மை கொண்ட 140 கோடி இந்தியர்களையும் ஒன்றிணைத்து, தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான கூட்டு உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த ஆண்டும் தீபாவளியும் சத் பூஜையும் ஒரு சிறப்பான வாய்ப்பை உருவாக்குகின்றன– 'உள்ளூர் பொருட்களுக்குக் ஆதரவளித்தல்' என்ற உறுதிப்பாடு, உள்நாட்டுப் பொருட்களை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லும் உறுதிப்பாடு, 2047–ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றும் உறுதிப்பாடு. இந்நிலையில், பண்டிகைகள் இனி வெறும் பாரம்பரியக் கொண்டாட்டங்களாக மட்டுமின்றி, நமது தற்சார்பைக் கொண்டாடும் விழாக்களாகவும் மாறியுள்ளன. இன்று மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ள இந்த முன்முயற்சி, 2014–ம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடியின் முதல் 'மனதின் குரல்' வானொலி உரையுடன் தொடங்கியது. அந்த நிகழ்ச்சியில் காதித் தயாரிப்புகளைப் பயன்படுத்துமாறு அவர் விடுத்த அழைப்பு, மக்களின் மனங்களில் நீங்காத இடத்தைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து, 2020 ஜூன், ஆகஸ்ட் மாதங்களில், உலகமே கோவிட்–19 பெருந்தொற்றின் பாதிப்புகளை எதிர்கொண்டிருந்த வேளையில், உள்ளூர் பொருட்களைப் பயன்படுத்துவதுடன், உள்ளூர் கைவினைக்கலைஞர்கள், நெசவாளர்கள், கைவினைத் தொழிலாளர்களின் திறமைகளை அங்கீகரிக்குமாறும் பிரதமர் மோடி மீண்டும் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். இது வெறும் முழக்கமாக மட்டும் அமையவில்லை; நெருக்கடிகளின் போதும் வாய்ப்புகளைக் கண்டறியும் தொலைநோக்குப் பார்வையை அது உள்ளடக்கியிருந்தது. இந்தத் தொலைநோக்குப் பார்வை, அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரச் சிந்தனையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது. பிரதமர் விடுத்த இந்த அழைப்புகளின் விளைவாக, 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' என்பது வெறும் அரசுத் திட்டம் என்ற நிலையைக் கடந்து, 140 கோடி இந்தியர்களின் கூட்டு உணர்வின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது. ஒவ்வொரு கிராமத்தில் உள்ள

"பிற நாடுகளைச் சார்ந்து வாழும் நிலையில் இந்தியா இனியும் தொடரக் கூடாது என்பதில் கடந்த சில ஆண்டுகளாக நாம் உறுதியுடன் உள்ளோம். நாம் தன்னிறைவு பெற வேண்டும். உலகில் பல பொருட்கள் குறைந்த விலையிலும் விரைவாகவும் கிடைக்கக்கூடும். ஆனால், அவற்றைச் சார்ந்திருப்பது நமது சொந்தத் திறன்களை வளர்த்துக் கொள்ள உதவாது. அதேபோல், நமது திறன்களின் வலிமையைச் சோதித்துப் பார்க்கும் வாய்ப்பையும் அளிக்காது. எனவே, நமது சொந்தத் திறன்களை வலுப்படுத்துவதுடன், நமது நலன்களையும் நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதனால்தான், 'தற்சார்பு இந்தியா' என்ற உறுதியான இலக்குடன் நாம் முன்னேறி வருகிறோம். இந்தியாவில் உற்பத்தி செய்தல், சுதேசி, உள்ளூர் பொருட்களுக்குக் குரல் கொடுத்தல் போன்ற முன்முயற்சிகளுடன் இந்திய மக்களின் உள்ளங்கள் ஒன்றிணைகின்றன.

– பிரதமர் நரேந்திர மோடி

கடைகளிலும், ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குழந்தைகளின் சிந்தனையிலும், ஒவ்வொரு சந்தையில் நடைபெறும் ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் இந்த உணர்வு பிரதிபலிக்கிறது.

மக்கள் இயக்கமாக மாறிய ஒரு தாரக மந்திரம்

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' என்பதன் நோக்கம், மண் விளக்குகளையோ, வழிபாட்டுப் பொருட்களையோ வாங்குவதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை என்பதைப் பிரதமர் மோடி பலமுறை தெளிவுபடுத்தியுள்ளார்; இதன் தொலைநோக்குப்



பார்வை மிகவும் விரிவானது. நமது வீடுகளுக்கோ, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையோ வாங்கும்போது, அவை இந்தியாவில் தயாரிக்கப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருளாகும். ஒரு நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்ததாக இருந்தாலும், அதன் வணிகப் பெயர் எந்த மொழியில் இருந்தாலும், அந்தப் பொருள் இந்தியக் கைவினைக்கலைஞர்களின் கடின உழைப்பின் மூலம் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இதுவே சுதேசி என்பதற்கான எளிய விளக்கம் என்று பிரதமர் தொடர்ந்து நாட்டு மக்களை வலியுறுத்தி வருகிறார். இந்த உணர்வு, அரசின் முன்முயற்சி என்ற நிலையைக் கடந்து முன்னேற்றம் கண்டுள்ளது. ஊடகங்கள், படைப்பாற்றல் துறை, சமூக ஊடக பிரபலங்கள், திரையுலகப் பிரபலங்கள் எனப் பலரும் இந்த இயக்கத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர். 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' என்ற உணர்வைத் தாங்களும் கடைப்பிடிப்பதுடன், தங்களைப் பின்தொடரும் லட்சக்கணக்கான மக்களையும் ஊக்குவிக்குமாறு சமூக ஊடக பிரபலங்களுக்கும் பிரதமர் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகிறார்.

தன்னிறைவின் கதைகள்

எந்தவொரு திட்டத்தின் வெற்றியையும் உறுதிப்படுத்துவதற்கான மிக நம்பகமான சான்றுகளாகப் புள்ளிவிவரங்கள் திகழ்கின்றன. அந்த வகையில், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' முன்முயற்சியின் புள்ளிவிவரங்கள் மிகுந்த ஊக்கமளிப்பதாக உள்ளன. கடந்த 12 ஆண்டுகளில், பாதுகாப்புத் தளவாட உற்பத்தி ஏறத்தாழ நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. காதி மற்றும் கிராமத் தொழில்கள் துறையின் உற்பத்தி சுமார் ஆறு மடங்கும், மின்னணுப் பொருட்கள் உற்பத்தி ஏறத்தாழ ஏழு மடங்கும் அதிகரித்துள்ளன. நவீன ரயில் பெட்டிகளின் உற்பத்தி 21 மடங்காகவும், கைப்பேசி உற்பத்தி 35 மடங்காகவும் உயர்ந்துள்ளது. மேலும், டிஜிட்டல் தொழில்நுட்பம், புத்தாக்கத் துறைகளில் இந்தியா உலக அரங்கில் தனக்கென தனி முத்திரையைப் பதித்துள்ளது. இணையப் பயனாளர்களின்

“

‘உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்’ என்பது வெறும் அகல் விளக்குகளை வாங்குவதுடன் மட்டும் முடிந்துவிடுவதில்லை. உங்கள் பகுதியில் தயாரிக்கப்படும் உள்ளூர் பொருட்களை உங்களால் இயன்றவரை தீவிரமாக ஊக்குவிக்க வேண்டும். இந்தியக் கைவினைக்கலைஞரின் உழைப்பால் உருவான, நமது மண்ணின் வளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட எந்தவொரு பொருளும் நமக்கு பெருமைக்குரிய விஷயமாகும். இந்தப் பெருமையை நாம் தொடர்ந்து மேம்படுத்திக் கொண்டாட வேண்டும்.

– பிரதமர் நரேந்திர மோடி

எண்ணிக்கை ஏறத்தாழ நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. அதேபோல, இதுவரை வழங்கப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கையும் நான்கு மடங்கு உயர்ந்துள்ளது. டிஜிட்டல் பரிவர்த்தனைகள் நூறு மடங்கு அதிகரித்துள்ளன. அதே நேரத்தில், சாமானிய மக்களின் வசதிகளை மேம்படுத்துவதிலும் மத்திய அரசு அதே அளவு அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளது. குழாய் மூலம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதன் வேகம் சராசரியாக 15 மடங்கு அதிகரித்துள்ளது. சமையல் எரிவாயு இணைப்புகள் முன்பைவிட சராசரியாக ஆறு மடங்கு வேகத்தில் வழங்கப்பட்டுள்ளன. ஏழை மக்களுக்கு முன்பைவிட நான்கு மடங்கு வேகத்தில் கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஏழைகளுக்கான வீடுகளும் முன்பைவிட மூன்று மடங்கு வேகத்தில் கட்டிமுடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாட்டின் நிர்வாக முறையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான தேவையற்ற ஒழுங்குமுறை நடைமுறைகள் நீக்கப்பட்டுள்ளன; காலாவதியான நூற்றுக்கணக்கான சட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. கடந்த நூற்றாண்டின் சட்டங்களைக் கொண்டு 21–ம் நூற்றாண்டை நோக்கிய பயணத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை உணர்ந்து இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நவீன உள்கட்டமைப்பை உருவாக்கும் வகையில் மெட்ரோ ரயில் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன; பொதுப் போக்குவரத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய பணிகளின் வேகம், அளவு, வெற்றி ஆகியவற்றுடன் அவற்றின் முன்னேற்றமும், விரிவாக்கமும், சுதந்திரத்திற்குப் பின் கடந்த பத்தாண்டுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இத்தகைய சாதனைகள் கண்முன்னே இருக்கும்போதும், இவ்வளவு விரைவான முன்னேற்றம் தென்படும்போது, நாட்டு மக்களின் ஆற்றல் ஒவ்வொரு கணமும் வலுப்பெறும்போது, 2047–ம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற உறுதிப்பாடு நிச்சயம் நிறைவேறும். இந்தியா இனி ஒருபோதும் தயங்கவோ, நிற்கவோ போவதில்லை என்பதற்கும், அது தொடர்ந்து முன்னேறிச் செல்லும் என்பதற்கும் இந்தப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் சான்றாக அமைகின்றன.

செமிகண்டக்டர்கள் முதல் அணுசக்தி வரை: தன்னிறைவை நோக்கிய பயணம்

தன்னிறைவை நோக்கிய இந்த உந்துதலுக்கு செமிகண்டக்டர் துறை, ஒரு சமீபத்திய உதாரணமாகும். உலக அளவில் செமிகண்டக்டர் சிப்கள் குறித்த விவாதங்கள் இந்தியா சுதந்திரம் அடைந்த காலகட்டத்திலேயே தொடங்கியிருந்தாலும், அப்போது

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

இயக்கத்திற்கான அறைகூவல்

12 ஆண்டுகளில், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' முன்முயற்சியிலிருந்து உருவெடுத்த வளர்ச்சிக்கான ஏழு அம்சங்கள்

கடந்த 12 ஆண்டுகளில், சுதேசி மற்றும் 'உள்ளூர்ப் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' என்ற அறைகூவல், தேசிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் உந்துசக்தியாக உருவெடுத்துள்ளது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் கை ராட்டையும் காதியும் வலிமையான அடையாளங்களாகத் திகழ்ந்ததைப் போலவும், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் இந்தியாவின் உணவுப் பற்றாக்குறையைப் போக்க 'ஜெய் ஜவான் – ஜெய் கிசான்' என்ற முழக்கம் வழிவகுத்ததைப் போலவும், 2014–ம் ஆண்டு தொடங்கப்பட்ட 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' முன்முயற்சி பல்வேறு பரிமாணங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரே ஒரு வேண்டுகோள், வளர்ச்சியின் பல்வேறு பிரிவுகளுக்கு வித்திட்டுள்ளது.

சிப்கள் முதல் அணுசக்தி வரை



இத்துறையில் குறிப்பிடத்தக்க திட்டங்கள் எதுவும் நாட்டில் செயல்பாட்டுக்கு வரவில்லை. இன்றைய டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பச் சூழலில் செமிகண்டக்டர் சிப்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது தெளிவாகப் புலனாகிறது. மின்னணுச்சாதனங்கள் முதல் மருத்துவ உபகரணங்கள் வரை அனைத்திலும் அவை இன்றியமையாத கூறுகளாக உள்ளன. இவை இல்லையெனில் உலகின் செயல்பாடுகளே முடங்கிவிடும். இந்தச் சூழலில், செமிகண்டக்டர் சிப்களின் உற்பத்தியில் தன்னிறைவை அடையும் நோக்கில் இந்தியா தனது சொந்த உற்பத்தி ஆலைகளை நிறுவியுள்ளது. ஏற்கெனவே மூன்று ஆலைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. இந்தியா இத்துறையில் ஏற்றுமதியையும் தொடங்கியுள்ளது. அடுத்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளில், மேலும் ஐந்து முதல் எட்டு

இன்று, 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்ற இலக்கை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடுமையாக உழைத்து வரும் வேளையில், நாடு நம்மிடம் சில எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளது. அந்த எதிர்பார்ப்புதான் 'தன்னிறைவு'. தற்சார்பு கொண்ட நாடாக மாறும்போதுதான், ஒரு வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா உருவாகும். இந்தியா தன்னிறைவு அடைவதற்கு, 'சுதேசி' என்ற தாரக மந்திரம் மிக அவசியமானதாகும்.

– பிரதமர் நரேந்திர மோடி



சுதேசி இயக்கத்தின் பயணம்

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான நடவடிக்கைகள்

ஆண்டு	சாதனைகள்
7 ஆகஸ்ட் 1905	வங்கப் பிரிவினைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டது.
2014	'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் அறிமுகம்
அக்டோபர் 2014	குறைந்தது ஒரு காதி தயாரிப்பை வாங்குமாறு ('மனதின் குரல்' நிகழ்ச்சியின் வாயிலாக) அழைப்பு விடுக்கப்பட்டது.
7 ஆகஸ்ட் 2015	முதலாவது தேசிய கைத்தறி தினம்
ஜூன் – ஆகஸ்ட் 2020	'மனதின் குரல்' நிகழ்ச்சியில் 'உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவளித்தல்' குறித்த அறைகூவல்; 'தற்சார்பு இந்தியா' இயக்கம் தொடக்கம்
24 ஜூன் 2021	'டாய்கத்தான் – 2021' – 'உள்ளூர் பொம்மைகளுக்கு ஆதரவளிக்க அழைப்பு
27 பிப்ரவரி – 2 மார்ச் 2021	முதலாவது 'பொம்மைத் திருவிழா'
டிசம்பர் 2021	ரூ.76,000 கோடி மதிப்பீட்டில் 'செமிகான் இந்தியா' திட்டத்திற்கு ஒப்புதல்
ஆகஸ்ட் 2023	கதர் விற்பனை வருவாய் ரூ.1.3 லட்சம் கோடியைக் கடந்தது (தேசிய கைத்தறி தின உரையில் குறிப்பிடப்பட்டது)
ஜனவரி 2024	அயோத்தியில் ராம் லல்லா–வின் பிராண பிரதிஷ்டை. (அபிஷேக விழா) உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் கலைகளின் பயன்பாடு
6–7 மே 2025	'ஆபரேஷன் சிந்தூர்'–உள்நாட்டு ஆயுதங்களின் செயல்திறன் வெளிப்பாடு
அக்டோபர் 2025	என்சிஇஆர்டி–யின் 'சுதேசி: உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவளித்தல்' பாடத்திட்ட தொகுதி
28 பிப்ரவரி 2026	நாட்டின் முதல் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை தொடக்கம்
31 மார்ச் 2026	இரண்டாவது செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை தொடக்கம்
ஜூலை 2026	'செமிகான் 2.0' திட்டத்திற்கு ஒப்புதல் (ரூ.1,27,500 கோடி)
செப்டம்பர் 2026	12 செமிகண்டக்டர் திட்டங்களில், 5 திட்டங்கள், வர்த்தக ரீதியான உற்பத்தியைத் தொடங்கின.

செமிகண்டக்டர் ஆலைகள் நிறுவப்படவுள்ளன. இது தற்சார்பு என்ற அடித்தளத்தின் மீது கட்டமைக்கப்பட்ட வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

பல தசாப்தங்களாக இந்தியா இத்துறையில் பின்தங்கிய நிலையில் இருந்தது. ஆனால் தற்சார்பு இந்தியாவிற்கான உறுதிப்பாடு, இந்தச் சூழலை விரைவாக மாற்றியமைத்து வருகிறது. 'இந்தியா செமிகண்டக்டர் இயக்கத்தின்' கீழ், இதுவரை, ரூ.1.64 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடுகளைக் கொண்ட 12 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் முதல் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலையை 2026 பிப்ரவரி 28–ம் தேதி அன்றும், இரண்டாவது ஆலையை 2026 மார்ச் 31–ம் தேதி அன்றும் தொடங்கி வைத்தார்.

2026 செப்டம்பர் மாதத்திற்குள், மைக்ரான், கெய்ன்ஸ் செமிகான், சிஜி செமி, சிடிஐஎல் செமிகண்டக்டர் மொஹாலி மற்றும் சுச்சி செமிகான் சூரத் ஆகிய ஐந்து திட்டங்கள் வர்த்தக ரீதியான உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. ஜூலை 2026–ல், சிப் வடிவமைப்பு, உபகரணங்கள், மூலப்பொருட்கள் தயாரிப்பு மற்றும் மேம்பட்ட பேக்கேஜிங் திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையில் 'செமிகான் 2.0' திட்டத்திற்கு ரூ.1,27,500 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. மேலும், தோலேராவில் அமைந்துள்ள டாடா எலக்ட்ரானிக்ஸ்–பிஎஸ்எம்சி ஆலை, 2026 டிசம்பர் மாதத்திற்குள் தனது முதல் சிலிக்கான் உற்பத்தியைத் தொடங்கும் இலக்குடன் செயல்பட்டு வருகிறது.

அட்டைப்படக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

தற்சார்பு இந்தியாவிற்கான நடவடிக்கைகள் குறித்து இந்த புள்ளி விவரங்கள் மூலம் அறிந்து கொள்ளுங்கள்

விற்பனையில்,
501%
அதிகரிப்பு





விற்பனையில்,
380%
அதிகரிப்பு

வேலைவாய்ப்பு உருவாக்கத்தில்,
56%
அதிகரிப்பு

2.04
கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது









(2013–14 நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 2025–26 நிதியாண்டில்)

செமிகண்டக்டர்களுக்கான முக்கியத்துவத்தைப் போலவே, அரியவகைக் கனிமங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். தொழில்நுட்பத் துறைக்கு எரிசக்தி மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக மாறி வருகிறது. எரிசக்திப் பயன்பாடு இன்றி, இந்தப் புதிய உலகம் இயங்குவது கடினம். எனவே, சிப்கள், செயற்கை நுண்ணறிவு அல்லது தரவு மையங்கள் என எத்தகைய தொழில்நுட்பங்களாக இருந்தாலும், அவற்றிற்கு அதிக அளவிலான மின்சாரம் தேவைப்படும். எனவே, எரிசக்திப் பாதுகாப்பு என்பது, தற்போதைய காலத்தின் கட்டாயத் தேவையாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, இந்தியா ஏற்கனவே வலுவான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட 'தேசிய அரியவகைக் கனிமங்கள் இயக்கம்', 'அரியவகைக் கனிம வழித்தடம்' போன்ற முன்முயற்சிகள் மூலம், இந்தியா உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தற்போது, இந்தத் துறையில், உலகளவில் பல்வேறு நாடுகள், இந்தியாவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளன. தொழில்நுட்பம், தற்சார்பு போன்ற திட்டங்களுடன், எரிசக்திப் பாதுகாப்பு என்பது மற்றொரு மிக முக்கியத்துவம் வாய்ந்த துறையாக உருவெடுத்துள்ளது. சிப்கள், செயற்கை நுண்ணறிவு

“

அண்மைக் காலங்களில், பண்டிகைகளுடன் ஒரு புதிய உறுதிமொழி இணைந்துள்ளது: அது 'உள்ளூர் தயாரிப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல்' எனும் உறுதிமொழி. தற்போது, பண்டிகைகளின் மகிழ்ச்சியில், உள்ளூர் கைவினைஞர்கள், கலைஞர்கள் மற்றும் வணிகர்களையும் இணைத்துக் கொள்கிறோம். இந்த இயக்கத்தை அனைவரும் ஒன்றிணைந்து வீரைவுபடுத்த வேண்டும்.

– பிரதமர் நரேந்திர மோடி

அட்டைப்படக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

2025–26–ம் ஆண்டில், மின்னணு சாதனங்களின் உற்பத்தி மதிப்பு

ரூ.13.11

லட்சம் கோடியாக உயரும் (2014–15–ம் ஆண்டில், இது ரூ.1.9 லட்சம் கோடியாக இருந்தது). இது மின்னணு சாதன உற்பத்தியில் 7 மடங்கு வளர்ச்சியைக் குறிக்கிறது.



2025–26–ம் ஆண்டில், மின்னணு சாதன ஏற்றுமதி மதிப்பு

ரூ.4.24

லட்சம் கோடியாக இருக்கும் (2014–15–ல், இது ரூ.38,000 கோடியாக இருந்தது).

ஜூலை 15, 2026 அன்று,

ரூ.1,27,500

கோடி ஒதுக்கீட்டுடன் 'செமிகான் 2.0' திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.



ஆறு மாநிலங்களில், 12 செமிகண்டக்டர் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதலீடு,

ரூ.1.64

கோடியைக் கடந்துள்ளது.



அல்லது தரவு மையங்கள் என எதுவாக இருந்தாலும், இவை அனைத்திற்கும் பெருமளவிலான மின்சாரம் தேவைப்படும். இதனைக் கருத்தில் கொண்டு, அணுசக்தித் துறையில், இந்தியா, 2047–ம் ஆண்டிற்குள், 100 ஜிகாவாட் அணுசக்தித் திறனை எட்ட வேண்டும் என்ற லட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளது. நாடாளுமன்றத்தில், 'சாந்தி சட்டம்' நிறைவேற்றப்பட்டதன் மூலம், இந்தப் புதிய இலக்கை அடைவதற்கான வழிவகை உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பத்தாண்டு காலத்திற்குள், ஐந்து புதிய அணு உலைகளைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு, 'வேக ஈனுலை' அணுக்கரு தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்றதன் மூலம், இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க நிலையை எட்டியுள்ளது. இது அணுசக்தி விவகாரத்தில், நாட்டின் தன்னிறைவு முயற்சியில் கிடைத்த வெற்றியாகும்.

உள்நாட்டுமயமாக்கல் நடவடிக்கைகளின் வலிமை: பாதுகாப்பு கட்டமைப்பில் தன்னிறைவு

தன்னிறைவு என்பது பொருளாதார வளத்திற்கு அடிப்படையாக இருப்பதுடன், தேசிய பாதுகாப்பின் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக உருவெடுத்துள்ளது. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது, உலக நாடுகள் இதனை உணர்ந்தன. பஹல்காமில் அப்பாவி பொதுமக்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராக, இந்தியா உறுதியான நடவடிக்கையை எடுத்தது. 2025–ம் ஆண்டு மே 6–7 தேதிகளில், பாகிஸ்தான் நாட்டிற்குள் இருந்த பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்துத் துல்லியத் தாக்குதல்களை நடத்த இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை மேற்கொண்டது. இந்த நடவடிக்கையின் போது, இந்தியாவின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் வலிமையை, ஒட்டுமொத்த உலகமும் நேரில் கண்டது. இந்தியாவின் வான் பாதுகாப்பு அமைப்புகள், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் ஆகியவை, 'தற்சார்பு இந்தியா'–விற்கான உறுதியான நிலைப்பாடு,

அட்டைப்பக்கக் கட்டுரை

‘உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்’

2025–26–ம் நிதியாண்டில், மொபைல்போன் உற்பத்தி மதிப்பு

₹6.27 லட்சம் கோடியாக

இருக்கும் (2014–15–ல், இது ரூ.18,000 கோடியாக இருந்தது). இது 33 மடங்கு வளர்ச்சியாகும்.



2025–26–ம் நிதியாண்டில், ஏற்றுமதி மதிப்பு **₹2.60**


லட்சம் கோடியாக இருக்கும் (2014–15–ல், இது ரூ.1,566 கோடியாக இருந்தது). இது 165 மடங்கு வளர்ச்சியாகும்.

மொபைல்போன் உற்பத்தி ஆலைகளின் எண்ணிக்கை



மொபைல்போன் உற்பத்தித் துறையில் உள்ள **12** லட்சம் பணியாளர்களில், 70% பெண்கள் ஆவர்.





இந்தியாவில் பயன்படுத்தப்படும் மொபைல்போன்களில்

99.2%

தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

உற்பத்தி அளவின் அடிப்படையில், இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய மொபைல்போன் உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது.

பொருளாதார முழக்கமாகவும், தேசிய பாதுகாப்பிற்கான ஒரு உத்தரவாதம் என்பதையும் நிரூபித்துக் காட்டின.

பிரம்மோஸ் போன்ற உள்நாட்டு ஏவுகணைகள், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை எதிரிகளின் மனதில் பெரும் அச்சத்தை உருவாக்கியுள்ளது. பிரம்மோஸ் ஏவுகணையின் சத்தம், பாகிஸ்தானில் உள்ள மக்களின் தூக்கத்தைக் கலைந்துவிடும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

பாதுகாப்புத் துறையில் தற்சார்பு நிலையை அடைந்த போதிலும், அதில் ஒரு மனிதாபிமான நடைமுறையையும், தீபாவளி பண்டிகையின் போது காண முடிகிறது. கடந்த 25 ஆண்டுகளாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து தீபாவளிப் பண்டிகையைப் பாதுகாப்புப் படை வீரர்களுடன் கொண்டாடி வருகிறார். இந்த உணர்வு, ஒரு வலுவான

“உலகில் பல பொருட்களை குறைந்த விலையிலும், விரைவாகவும் பெற்றுவிட முடியும். ஆனால், அவை நம் திறனை வளர்ப்பதுமில்லை, அதனைச் சோதித்துப் பார்ப்பதுமில்லை. எனவே, நாம் நமது திறன்களை மேம்படுத்திக்கொண்டு, நமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ‘தற்சார்பு இந்தியா’ என்ற இலக்கை நோக்கி, உறுதியான நிலைப்பாட்டுடன் நாடு முன்னேற்றம் அடைந்து வருகிறது.

– பிரதமர் நரேந்திர மோடி

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

பொம்மைகள்

2014–15–ம் நிதியாண்டில், ரூ.46,429 கோடியாக இருந்த பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, 2025–26–ம் நிதியாண்டில்,

1.78

லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது 16% வளர்ச்சியைக் குறிக்கிறது.



2025–26–ம் நிதியாண்டில்,

384.7 மில்லியன் அமெரிக்க டாலர்

மதிப்பிலான பொம்மைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டுகளில், ஏற்றுமதி

239%

வளர்ச்சியைக் கண்டுள்ளது.

இந்தியாவிலிருந்து,

150–க்கும்

மேற்பட்ட நாடுகளுக்குப் பொம்மைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.





செய்தியை வெளிப்படுத்துகிறது. இது, நாட்டு மக்களுக்கு அதிகாரமளிப்பதுடன், நாட்டின் எல்லைப் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.

பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியம்... சுதேசி

'சுதேசி' என்ற உணர்வு இந்தியாவிற்குப் புதியதல்ல. வங்கப்பிரிவினை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1905–ம் ஆண்டு ஆகஸ்ட் 7–ம் தேதி சுதேசி இயக்கம் தொடங்கியது. அந்நியப் பொருட்களைப் புறக்கணித்து, உள்நாட்டுத் தயாரிப்புகளை ஏற்றுக்கொள்வதென, இந்தியர்கள் உறுதிமொழி ஏற்றனர். இது அரசியல் சார்ந்த இயக்கமாகவும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகப் பொருளாதார ரீதியாக, பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, 1905 முதல் 1908–ம் ஆண்டு வரை, இறக்குமதி கணிசமாகக் குறைந்தது. மேலும், நாட்டில், உள்நாட்டு ஜவுளி ஆலைகள், சோப்பு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் நிலையங்கள், வங்கி, காப்பீட்டு நிறுவனங்கள் போன்றவை உருவாவதற்கு அடித்தளம் அமைத்தது. இந்த பாரம்பரியத்தைத் தொடர்ந்து, 2014–ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட "உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்" மற்றும் கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில், பெரும் உத்வேகம் பெற்ற "தற்சார்பு இந்தியா" ஆகிய முழக்கங்கள், ஒரு புதிய சுதேசி இயக்கத்திற்கு வித்திட்டுள்ளன. இந்த தொலைநோக்குப் பார்வையால் ஈர்க்கப்பட்ட மத்திய அரசு, 2015–ம் ஆண்டு ஆகஸ்ட் 7–ம் தேதியை 'தேசிய கைத்தறி தினமாக' அறிவித்தது. அண்மையில், என்சிஇஆர்டி நிறுவனம் "சுதேசி: உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்" என்ற தலைப்பில், சிறப்புப்

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

'வணிக நடவடிக்கைகளை எளிமையாக்குதல்' தொடர்பான தரவரிசை



2013-14-ம் நிதியாண்டில், 36.05 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த அந்நிய நேரடி முதலீடு, 2024-25-ம் நிதியாண்டில்,

81.04

பில்லியன் அமெரிக்க டாலராக குற்காலிக மதிப்பீடு உயர்ந்துள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில்,

163%

வளர்ச்சி பதிவாகியுள்ளது.



63-வது இடம் (2019 நிதியாண்டு)

142-வது இடம் (2014 நிதியாண்டு)

ஜவுளி ஏற்றுமதி

2025-26-ம் நிதியாண்டில், இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி (கைவினைப்பொருட்கள் உட்பட)

₹3,25,339

கோடியாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

1.8% வளர்ச்சி

2024-25-ம் நிதியாண்டில்,

₹3,19,573.2 கோடி



பாடத்திட்டங்களை உருவாக்கியுள்ளது. இதனைப் பிரதமர் திரு நரேந்திர மோடி, செங்கோட்டையிலிருந்து ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். இத்தகைய தேசிய அளவிலான முன்னேற்றத்திற்குத் தன்னம்பிக்கையும், பெருமித உணர்வும் தேவை. இதனால்தான், கடந்த சில ஆண்டுகளாக, இந்தியா, இதர நாடுகளைச் சார்ந்திராமல், தன்னிறைவு பெற்ற நாடாக உருவெடுக்க வேண்டும் என்பதில், மத்திய அரசு உறுதியாக உள்ளது. உலகளவில், பல்வேறு பொருட்கள் எளிதாகவும், குறைந்த விலையிலும் கிடைக்கும் போதிலும், அவை, வலிமையான நாடாக உருவெடுக்க உதவிடவில்லை என்பதுடன், மக்களின் திறன்களையும் வெளிப்படுத்துவதில்லை. பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கடி கூறுவது போல, "நாம் நமது திறன்களை மேம்படுத்தி, நாட்டின் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இதனால்தான் 'தற்சார்பு இந்தியா' என்ற இலக்கை நோக்கி உறுதியுடன் முன்னேறி வருகிறோம். 'இந்தியாவில் தயாரிப்போம்', 'சுதேசி', மற்றும் 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளித்தல்' போன்ற முன்முயற்சிகள், இந்த விரிவான தொலைநோக்குப் பார்வையிலிருந்து விளைந்தவையாகும்.

தற்போது, இந்தியாவின் 140 கோடி மக்களின் ஒரே தாரக மந்திரம் 'வளமான இந்தியா' என்பதாகும். 'அமிர்தப் பெருவிழா' காலத்தைக் கடந்து வளர்ந்துள்ள ஒரு உணர்வு, இதற்கு அடிப்படையாக உள்ளது. கோடிக்கணக்கான மக்களின் தியாகங்கள், இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்துள்ள வேளையில், அதே மக்களின் ஒருங்கிணைந்த உறுதிப்பாடும், கடின உழைப்பும், 'உள்ளூர் தயாரிப்புகளுக்கு முன்னுரிமை' மற்றும் 'சுதேசி' போன்ற தாரக மந்திரத்தை முன்னெடுப்பதன் மூலம், இந்தியாவை வளமான நாடாக உருவெடுக்கச் செய்ய முடியும். அந்தத் தலைமுறை, சுதந்திர இந்தியாவிற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது. இந்தத் தலைமுறை, வளமான இந்தியாவிற்கானப் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'

அணுசக்தி

அணுசக்தி இயக்கம்


- 2047–ம் ஆண்டிற்குள், இந்தியாவின் அணுசக்தி உற்பத்தித் திறனை 100 ஜிகாவாட்டாக உயர்த்த, இந்தியா இலக்கு

நிறுவப்பட்ட திறன்

- 2026, ஜூலை 31 நிலவரப்படி, இந்தியாவின் அணுசக்தி உற்பத்தித் திறன் 8.78 ஜிகாவாட் ஆகும்.



உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம்



₹2.40

லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீடு



14.15 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கம்

₹15.12 லட்சம் கோடிக்கும் அதிகமான ஏற்றுமதி

2021–ல், 22.65 மில்லியன் வாகனங்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், 2025–ல், வாகன உற்பத்தி

31.03

மில்லியன் அலகுகளாக உயர்ந்துள்ளது

வாகனத் துறையின் மூலம்,

3 கோடி

நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன



வேண்டும்–இதுவே காலத்தின் கட்டாயமாகும்.

இதன் காரணமாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, செங்கோட்டை கொத்தளத்திலிருந்து 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற முழக்கத்தை முன்வைத்தார். "தற்போது, நான் அனைவரையும், குறிப்பாக, நாட்டின் செல்வாக்கு மிக்கவர்கள், இந்த முழக்கத்தை முன்னெடுத்துச் செல்ல உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். வாருங்கள், நாம் அனைவரும் ஒன்றிணைவோம். இது ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் நிகழ்ச்சி நிரல் அல்ல. இந்தியா நம் அனைவருக்கும் சொந்தமானது. 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்பதை ஒவ்வொரு குடிமகனின் வாழ்விலும், ஒரு வழிகாட்டும் கொள்கையாக மாற்றுவோம். இந்திய மண்ணின் வாசனையைக் கொண்ட, இந்தியக் குடிமக்களின் வியர்வையால் உருவாக்கப்பட்ட, நாடு தன்னிறைவு பெறுவதற்கான உறுதியை வலுப்படுத்தும் வகையில், இந்தியத் தயாரிப்புகளை மட்டுமே வாங்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் உறுதியேற்போம். இதுவே, நம் அனைவரின் ஒருங்கிணைந்த உறுதிமொழியாக இருக்க வேண்டும். விரைவில், நாம் உலகை மாற்றியமைப்போம்."

காதி முதல் பொம்மைகள் வரை: கள யதார்த்தத்தின் கதைகள்

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு, ராட்டையும், காதியும், மக்கள் இயக்கத்தின் அடையாளங்களாகத் திகழ்ந்தன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் அறைகூவலைத் தொடர்ந்து, காதி மீண்டும் தேசிய (ஃபேஷன்) அளவில் நவநாகரீகத்தின் அடையாளமாக உருவெடுத்துள்ளது. இதன் தாக்கம் இந்தியாவுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்ட மெக்சிகோவின் வஹாகா பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் தனது சொந்த

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'



டிஜிட்டல் பொருளாதாரம்

இது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில்,

12-14%

பங்களிக்கிறது. அடுத்த பத்தாண்டுகளில், இந்த அளவு 20%–ஐ எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.





'இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதார அறிக்கை 2026 –ன் படி, இந்தியா தற்போது, உலகின் ஐந்தாவது மிகப்பெரிய டிஜிட்டல் பொருளாதார நாடாக உள்ளது.

ஊருக்குத் திரும்பியதும், அங்குள்ள கிராம மக்களுக்குக் கதர் தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொடுத்தார். இன்று, 'வஹாகா கதர்' ஒரு புகழ்பெற்ற வணிக முத்திரை கொண்ட தயாரிப்பாக உருவெடுத்துள்ளது.

பொம்மைத் தொழிலின் வளர்ச்சியும், இதேபோல உத்வேகம் அளிப்பதாக உள்ளது. பொம்மை தயாரிக்கும் இந்த வளமான பாரம்பரியத்திற்கும், இந்தியப் பெருமைக்கும், ஒரு தளத்தை வழங்க, மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கலாச்சாரத்தையும், புத்தாக்கத்தையும் இணைத்து, உலகளவில் விரிவடையும் 'தற்சார்பு' கொண்ட பொம்மைத் தொழிலை ஊக்குவிக்க, 2021 ஜனவரியில் 'டாய்கத்தான்' போட்டி நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2021 பிப்ரவரி 27 முதல் மார்ச் 2 வரை நாட்டின் முதல் 'பொம்மை திருவிழா' நடைபெற்றது. 2021–ல், இந்தியா தனது பொம்மைத் தேவையில், 80 சதவீதத்தை இறக்குமதி செய்து வந்ததாகவும், 100 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான, உலகளவிலான பொம்மைச் சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு 1.5 பில்லியன் டாலராக மட்டுமே இருந்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டிருந்தார். கடந்த ஐந்து ஆண்டுகளில், இந்த நிலை முற்றிலும் மாறியுள்ளது. ஜூலை 2026–ல் வெளியான அறிக்கையின்படி, முக்கிய பொம்மை வகைகளில், இந்தியாவின் ஏற்றுமதி 2017–18–ல், 152.7 மில்லியன் டாலரிலிருந்து, 2025–26–ல், 384.7 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இது 152 சதவீத வளர்ச்சியாகும். மின்னணு மற்றும் மின்னணு வகை அல்லாத பொம்மைகளின் ஏற்றுமதி 160 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. 2017–18–ம் ஆண்டில், இந்தத் துறையில் இந்தியா 213 மில்லியன் டாலர் வர்த்தகப் பற்றாக்குறையைச் சந்தித்த நிலையில், 2025–26–ம் ஆண்டில், 152 மில்லியன் டாலர் வர்த்தக உபரியைப் பதிவு

'தற்சார்பு இந்தியா'–வின் ஐந்து தூண்கள்

1. பொருளாதாரம்

சிறிய மாற்றங்களுக்கு மாறாக, மிகப்பெரிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டது. இந்தியாவை 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதே மத்திய அரசின் இலக்காகும்.



2. உள்கட்டமைப்பு

இந்தியாவின் புதிய அடையாளம். 5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை அடைய, அடுத்த ஐந்து ஆண்டுகளில், இந்தியாவின் உள்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்காக, ரூ.100 லட்சம் கோடிக்கும் அதிகமான முதலீட்டுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.



3. அமைப்பு

21–ம் நூற்றாண்டின் தொழில்நுட்பம் சார்ந்த அமைப்புகள்.

4. துடிப்பான மக்கள்

போட்டித்தன்மை,'தற்சார்பு இந்தியா' திட்டத்திற்குச் பலம் சேர்க்கும் காரணி.



5. தேவை

தேவை மற்றும் விநியோக நடைமுறையின் வலிமையை, அதன் முழுத் திறனுடன் பயன்படுத்த வேண்டும்.



செய்துள்ளது. குஜராத் மாநிலம் ராஜ்கோட் முதல் கர்நாடகாவின் சென்னப்பட்டணா, ஆந்திரப் பிரதேசத்தின் கொண்டபள்ளி–எட்டிக்கொப்பாக்கா மற்றும் உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி வரை பரவியுள்ள பாரம்பரிய பொம்மைத் தயாரிப்பு மையங்கள், தற்போதைய இந்த மாற்றத்திற்கு காரணமாக உள்ளன. இந்தியாவில், பன்னிரண்டு பாரம்பரிய பொம்மைத் தயாரிப்பு மையங்கள் புவிசார் குறியீடு பெற்றுள்ளன. இந்த மரபு 5,000 ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படுகிறது.

ஒவ்வொரு வீட்டிற்கும், கடைக்கும் ஒரு உறுதிமொழி

பிரதமர் திரு நரேந்திர மோடி, பெரிய, சிறிய வணிகர்கள் மற்றும் கடை உரிமையாளர்களிடம், தங்களது கடைகளில் 'சுதேசி' (உள்நாட்டு) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதைக் குறிக்கும் பலகைகளை பெருமையுடன் காட்சிப்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். உள்நாட்டுப் பொருட்களின் பயன்பாடு என்பது கட்டாயத்தின் பேரில் இல்லாமல், மாறாக, ஒரு வலிமையான நிலையிலிருந்து வர வேண்டும் என்று அவர் கருதுகிறார். இந்த உறுதியான நிலைப்பாட்டை விளக்கும் வகையில் திரு நரேந்திர மோடி இவ்வாறு கூறுகிறார்: "தற்போது, ஒவ்வொரு வணிகரிடமும், கடை உரிமையாளரிடமும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவதும் இதைத்தான்; இது உங்கள் பொறுப்பு. நம்முடைய சிறு வயதில், சந்தைகளில் 'நெய் கடை' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் காலப்போக்கில், அவை 'சுத்தமான நெய் கடை' என்று காட்சிப்படுத்தத் தொடங்கின. நாடு முழுவதும் உள்ள வணிகர்களும், கடைக்காரர்களும் தாமாக முன்வந்து, 'இங்கே உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் விற்கப்படுகின்றன'

அட்டைப்பக்கக் கட்டுரை

'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்'



என்று எழுதப்பட்ட பலகைகளைத் தங்களது கடைகளில் வைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வலிமையைக் கட்டமைக்கவும், தேவைப்பட்டால் மற்றவர்களையும் அவ்வாறே செய்யத் தூண்டவும், நாம் 'சுதேசி'யைப் பயன்படுத்த வேண்டும். இதுவே, நமது வலிமையாகவும், நமது தாரக மந்திரமாகவும் இருக்க வேண்டும்". பள்ளிகளில் 'சுதேசி தினம்', 'சுதேசி வாரம்' மற்றும் 'உள்ளூர் தயாரிப்பு தினம்' போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம், இந்த உணர்வை வளர்க்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. 2025 செப்டம்பரில், தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர்களுடன் உரையாடியபோது, மாணவர்களை ஒருங்கிணைத்து 'சுதேசி' இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லுமாறு ஆசிரியர்களிடம் பிரதமர் கேட்டுக்கொண்டார். பள்ளிகளில் 'இந்தியாவில் தயாரிப்போம்' கருப்பொருளை மையமாகக் கொண்ட திட்டப்பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்த அவர் பரிந்துரைத்தார். மாணவர்கள் தங்களது பகுதிகளில், சுதேசி பேரணிகளை நடத்தலாம். பள்ளிகளில் நடைபெறும் விழாக்களின் வாயிலாக, சுதேசி மற்றும் உள்ளூர் தயாரிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தங்களது வீடுகளில் உள்ள உள்நாட்டுத் தயாரிப்புகளைப் பட்டியலிட்டு, அதை பள்ளிக்குக் கொண்டு வர மாணவர்களை ஊக்குவிக்கலாம். மேலும், தங்கள் வீடுகளில் இத்தகைய உள்நாட்டுப் பொருட்களின் எண்ணிக்கையை மாதந்தோறும் அதிகரிப்பதற்கான உறுதிமொழியை அவர்கள் மேற்கொள்ளலாம். சுதேசியின் முக்கியத்துவம் குறித்த கலந்துரையாடல்களை நடத்தலாம். குழந்தைகளின் பிறந்த தினங்களில், உள்நாட்டுத் தயாரிப்புகளைப் பரிசளிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கலாம். இதன் விளைவாக, சிறுவயதிலிருந்தே சுதேசி உணர்வு வளர்க்கப்பட்டு, காலப்போக்கில் ஒட்டுமொத்த குடும்பமும், உள்நாட்டுத் தயாரிப்புகளைப் பயன்படுத்தும் நிலையை எட்டும்.

வணிகம் மற்றும் கொள்கையில் மாற்றங்கள்

மத்திய அரசு முதன்முறையாக 14 முக்கியத் துறைகளைக் கண்டறிந்து, 'உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை' திட்டத்தைச் செயல்படுத்தியது. 'வணிக நடவடிக்கைகளை எளிமையாக்குதல்' குறித்த குறியீட்டில், இந்தியா 2014-ல் 142-வது இடத்திலிருந்து, 63-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அந்நிய முதலீட்டை ஈர்ப்பத்திலும் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2014 முதல் 2024 வரையிலான காலத்தில், இந்தியா 667.4 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது. இது முந்தைய பத்தாண்டுகளுடன் (2004-14) ஒப்பிடுகையில், 119% அதிகம் ஆகும். 2026 ஆகஸ்ட் மாதத்தில் மட்டும், இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி ரூ.29,776 கோடியாக இருந்தது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 16.1% வளர்ச்சியாகும். 'ஒரு மாவட்டம் – ஒரு தயாரிப்பு' கொள்கை, சிறு நிறுவனங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்தியுள்ளது.

இந்த தீபாவளிப் பண்டிகையிலும், இந்த உறுதியான நிலைப்பாடு தொடர்கிறது...

2026-ம் ஆண்டின், இந்த தீபாவளிப் பண்டிகை பல்வேறு வகைகளில் சிறப்பு வாய்ந்தது. இந்த ஆண்டில், செமிகண்டக்டர், அணுசக்தி போன்ற துறைகளில், நாடு மிகப்பெரிய முன்னேற்றங்களை எட்டியுள்ளது. பாதுகாப்புத் துறை ஏற்றுமதி, புதிய சாதனையைப் படைத்துள்ளது. மேலும், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ராணுவத் தளவாடங்கள், தனது திறனை நிரூபித்துள்ளன. உலகச் சூழல் மிக வேகமாக மாறிவரும் இக்காலகட்டத்தில், தற்சார்பின் தேவை, முன்னெப்போதையும் விட மிக அதிகமாக தேவைப்படுகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் செய்தி தெளிவாக உள்ளது. நீங்கள் எதை வாங்கினாலும், அது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருளாக இருக்க வேண்டும். உங்கள் இல்லங்களை உள்நாட்டுத் தயாரிப்புகளால் அலங்கரியுங்கள். 'இந்தியாவில் தயாரிக்கப்பட்ட' பொருட்களைப் பரிசுகளாக வழங்குங்கள். இந்திய மண்ணின் மணம், உங்கள் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவட்டும். இந்த வேண்டுகோள் ஏதோ ஒரு அரசியல் கட்சிக்கோ அல்லது அரசிற்கோ மட்டுமின்றி, இது ஒட்டுமொத்த தேசத்தின் எதிர்காலம் சார்ந்தது. இந்த உறுதியின் ஒரு பகுதியாக, மற்றவர்களுடன் தேவையற்ற ஒப்பீடுகளில் ஈடுபடுவதற்கு மாறாக, தங்களின் சொந்த வளர்ச்சியை முன்னிறுத்தி, எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்ளுமாறு பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். 2026 அக்டோபர் 07 அன்று அரசு நிர்வாகத் தலைமைப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த பிரதமர் திரு நரேந்திர மோடி இவ்வாறு கூறுகிறார்: "எனது நீண்டகால அனுபவத்திலிருந்து



நான் இதைக் கூறுகிறேன். மற்றவர்களின் எல்லைகளைச் சுருக்க முயற்சிப்பதில் நமது ஆற்றலை வீணடிக்கக் கூடாது. மாறாக, நமது எல்லைகளை மேலும் நீட்டிக்கவே முழு ஆற்றலையும் செலவிட வேண்டும். நாம் நமது எல்லைகளை விரிவுபடுத்தினால், நமது திறமையையும் வலிமையையும் உலகம் அங்கீகரிக்கும். இப்போது, பொருளாதார சுயநலம் உலக அரங்கில் ஆதிக்கம் செலுத்தும் நிலையில், நெருக்கடிகளை நினைத்து கவலைப்படக்கூடாது. மாறாக, தைரியமாக நமது பாதையை நீட்டிப்பதே தீர்வாகும். மேலும், அரசு தலைமைப் பதவியில் எனது 25 ஆண்டுகால அனுபவத்திலிருந்து என்னால் கூற முடிவது என்னவென்றால், நாம் இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தால், அனைவரும் இணைந்து இதைத் தேர்ந்தெடுத்தால், எந்தவொரு சுயநல சக்தியாலும் நம்மை ஒருபோதும் அதன் பிடியில் சிக்க வைக்க முடியாது."

வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கி...

இந்தியா தனது சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் 2047–ம் ஆண்டிற்குள் ஒரு வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்ற உறுதியானது, தன்னிறைவு, தற்சார்பு இந்தியா, சுதேசிப் பெருமிதம் ஆகிய உணர்வுகளில் வேரூன்றியுள்ளது. இந்தியாவில் தயாரிப்போம், சுதேசி, உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம் ஆகிய சக்திவாய்ந்த மூன்று அம்சங்களின் கூட்டணி என்பது, இந்தியா தனது பெருமைமிக்க பழங்காலப் பாரம்பரியத்தை மீட்டெடுப்பதற்கான பாதையை அமைத்துத் தருகிறது. இந்தப் பண்டிகைக் காலத்தில், குறிப்பாக தீபாவளி, சத் பூஜை ஆகியவற்றை ஒட்டி, ஒவ்வொரு இந்தியரும் சுதேசி விளக்குகளை ஏற்றி, "உள்ளூர் தயாரிப்புகளுடன் பண்டிகைகளைக் கொண்டாடி, "இது சுதேசி; இது இந்தியாவில் தயாரிக்கப்பட்டது" என்று பெருமையுடன் பறைசாற்ற வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்துகிறார்.

உண்மையில், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற முழக்கம் இப்போது இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலும் எதிரொலிக்கிறது. மக்கள் உள்ளூர் தயாரிப்புகளை ஆர்வத்துடன் தேடி வாங்குகிறார்கள். இது தேசியப் பெருமையின் அடையாளமாகும். இந்தியத் தன்மையின் உணர்வும், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற தாரக மந்திரத்தின் தொலைநோக்குப் பார்வையும் இணைந்து, தேசத்தை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்ல, 140 கோடி இந்தியர்களிடையே ஒரு கூட்டுத் தீர்மானமாக உருவெடுத்துள்ளது. இந்த இயக்கம், இந்தியப் பொருள்களை உலக அரங்கிற்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூர் தயாரிப்புகளையும் சந்தைகளையும் வளர்க்கிறது. இந்த அமிர்த காலத்தில், 'உள்ளூர் பொருட்களுக்கு ஆதரவளிப்போம்' என்ற முழக்கம் இந்தியாவின் பாரம்பரியங்களுக்கும் அதன் வீர காவியங்களுக்கும் இன்னும் பெரிய அங்கீகாரத்தை வழங்கும் என்று தேசம் தீர்மானித்துள்ளது. ●

இந்தியர்கள் உயிரைக் காப்பவர்கள் உயிரைப் பறிப்பவர்கள் அல்ல



வீரத்தையும் சமயோசித புத்தியையும் வெளிப்படுத்திய இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சார், 9/11 போன்ற ஒரு தாக்குதலைத் தடுத்தது மட்டுமல்லாமல், 140 கோடி இந்தியர்கள் பெருமை கொள்ள ஒரு சந்தர்ப்பத்தையும் அளித்துள்ளார். இந்தக் காரணத்தினால்தான், அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட ஒட்டுமொத்த உலகமும் இந்த இந்திய விமானியை ஒரு நாயகனாகப் போற்றுகின்றன. பிரதமர் திரு நரேந்திர மோடி அக்டோபர் 02–ம் தேதி இந்த வீர விமானியுடன் காணொலி மூலம் உரையாடி, அவர் விரைவில் குணமடைய வாழ்த்துத் தெரிவித்தார். அதன் முக்கிய அம்சங்கள் இதோ:

பிரதமர் – வணக்கம், ஸ்மித்.

கேப்டன் ஸ்மித் – ஜெய் ஹிந்த், வணக்கம் சார்.

பிரதமர் – நீங்கள் இப்போது எப்படி இருக்கிறீர்கள்? உங்கள் உடல்நிலை எப்படி இருக்கிறது?

கேப்டன் ஸ்மித் – சார், எல்லாம் நலமாக இருக்கிறது; எல்லாம் நலமாக இருக்கிறது.

பிரதமர் – பாருங்கள், தேசம் முழுவதும் உங்களுக்காகப் பிரார்த்திக்கிறது. எங்கும் மகா மிருத்யுஞ்ஜய மந்திரம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கேப்டன் ஸ்மித் – ஆமாம் சார்.

பிரதமர் – உங்கள் துணிச்சல், உங்கள் பொறுமை, உங்கள் சமயோசிதம் ஆகியவற்றால் ஒரு நொடிப்பொழுதில், நீங்கள் எத்தனையோ முடிவுகளை எடுத்தீர்கள்... எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றினீர்கள். இப்போது இந்த தேசம் முழுவதும் பெருமையுடன் சொல்லலாம், 'இந்தியர்கள் நாம் உயிர்களைப் பறிப்பவர்கள் அல்ல; நாம் உயிர்களைக் காப்பாற்றுபவர்கள்' என்று.

கேப்டன் ஸ்மித் – நிச்சயமாக சார்.

பிரதமர் – நீங்கள் வாழ்விற்கும் மரணத்திற்கும் இடையிலான போராட்டத்தில் இருந்தபோது, உங்கள் உடலில் அவ்வளவு பெரிய காயம் இருந்தது. ஆனாலும், அந்தத் தருணத்தில், உங்கள் உயிரை விட பயணிகளின் உயிர்களுக்கு முன்னுரிமை அளித்தீர்கள். மிக முக்கியமாக, 140 கோடி மக்களுக்கு நீங்கள் பெருமை சேர்த்துள்ளீர்கள்.

கேப்டன் ஸ்மித் – நன்றி சார்.

பிரதமர் – உங்கள் தந்தை பூபேந்திராவுடனும், தாய் கீதாவுடனும், உங்கள் மனைவி சோனலுனுடம் உரையாடினேன். நான் சகோதரி கீதாவிடம் சொன்னேன். "உங்கள் பெயர் கீதா என்பதால், நீங்கள் பகவத் கீதையின் சாரத்தையும், கிருஷ்ணரின் போதனைகளையும் உண்மையாகவே உள்வாங்கிக் கொண்டுள்ளீர்கள். அந்த விழுமியங்களைக் கொண்டே நீங்கள் ஸ்மித்தின் வாழ்க்கையை வடிவமைத்துள்ளீர்கள்" என்றேன்.

கேப்டன் ஸ்மித் – நிச்சயமாக சார்.

பிரதமர் – ஸ்மித், இப்போது நீங்கள் பேச வேண்டும் என்று விரும்புகிறேன்.

கேப்டன் ஸ்மித் – நீங்கள்தான் என் மிகப் பெரிய முன்மாதிரி சார். இப்படி என்னை அழைத்து ஊக்கப்படுத்துகிறீர்கள். அந்தத் தருணத்தில் நான் என் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தேன். ஆனால், நான் கீழே விழுந்து காயங்களுடன், கீழே சிக்கிக்கொண்ட நேரத்தில், நான் ஏதாவது செய்யாவிட்டால் என்ன ஆகும் என்று ஒரு கணம் உணர்ந்தேன். அப்போது எனக்குள் சொல்லிக்கொண்டேன். நான் எழவில்லை என்றால் என்ன ஆகும் என்பதை நினைத்தேன்... சார்.. நான் 17 ஆண்டுகளாக எஃப்இசட் நிறுவனத்தில் விமானியாக இருந்து வருகிறேன். கடந்த 11 ஆண்டுகளாக நான் கேப்டனாக இருக்கிறேன். என் கண்கள் மூடியிருந்தாலும்கூட, விமானத்தில் என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

நான் எழ முடியாமல் படுத்துக் கிடந்தபோது, விமானம் கீழே இறங்கிக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. இதுதான் கடைசி முயற்சி என்றும், அதை மட்டும் என்னால் செய்ய முடிந்தால், கதவைத் திறக்க முடியும் என்றும் எனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது. அப்போதும் என் மீது அடி விழுந்து கொண்டிருந்தது. ஆனாலும் நான் கதவைத் திறந்துவிட்டேன் சார். பிறகு எல்லோரும் வந்தார்கள். மற்ற ஒவ்வொருவரும் அவர்களால் முடிந்ததைச் செய்தார்கள். ஆனால், நான் என் உயிருக்காகப் போராடும் நிலையில் இருப்பதை உணர்ந்தேன். ஆனாலும் அந்த நேரத்தில் அவர்கள் அனைவரையும் இறக்க விட முடியாது என்பதையும் நான் உணர்ந்திருந்தேன்.

அதன்பிறகு, இங்கேயும், சவுதியிலும், இதைவிடச் சிறந்த கவனிப்பையோ மருத்துவ சிகிச்சையையோ நான் பெற்றிருக்க முடியாது. எனக்கு வலி ஏற்படும்போதெல்லாம், எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் நினைவுக்கு வரும். நான் அனுமன் மந்திரத்தை ஓதுவேன். அந்த நேரத்திலும் கூட, நான் அனுமன் மந்திரத்தை மட்டுமே ஓதிக் கொண்டிருந்தேன். கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார் என்பதும் எனக்குத் தெரியும். இப்போது, உங்கள் அழைப்பால் நான் அளவற்ற பெருமிதம் கொள்கிறேன். இதுவரை நான் அதை உணரவில்லை. இப்போது உணர்கிறேன் சார். மன்னிக்கவும், உங்கள் முன்னால் நான் அழுது கொண்டிருக்கிறேன் சார்.

பிரதமர் – ஸ்மித், என் முன்னால் உணர்ச்சிவசப்பட முடியவில்லையென்றால், வேறு எங்கேதான் உணர்ச்சிவசப்படுவீர்கள்?

கேப்டன் ஸ்மித் – சார், உங்களுடன் பேசுவேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

பிரதமர் – சகோதரரே, நீங்கள் செய்துள்ள மகத்தான செயலால், இன்று நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், ஏன், உலகெங்கிலும் உள்ள மக்களும்கூட உங்களைக் காணவும், உங்களுடன் பேசவும் ஆவலாக உள்ளனர். மேலும், அனுமன் மந்திரத்தைப் பற்றி நீங்கள் என்னிடம் சொன்ன அந்த விஷயத்திற்காக, உங்களுக்கு அத்தகைய விழுமியங்களை வழங்கிய உங்கள் தாய் சகோதரி கீதாவுக்கு நான் தலைவணங்குகிறேன்.

கேப்டன் ஸ்மித் – ஆமாம் சார். ஒவ்வொரு நாள் காலையும் நான் பிரார்த்தனை செய்யும்போது, எனது இரண்டு வயது மகன் என் மடியில் அமர்ந்திருப்பான். நான் அவனுக்கு அனுமன் மந்திரத்தை ஓதுவேன். நாம் நம் நாட்டை விட்டுத் தொலைவில் வாழ்ந்தாலும், நம் கலாச்சாரத்தை விட்டு ஒருபோதும் விலகி இருக்கக்கூடாது.

பிரதமர் – அது உண்மைதான்.

கேப்டன் ஸ்மித் – இங்கு நான் வீட்டை விட்டு வெகு தொலைவில் இருப்பது போல் உணரவில்லை. இங்குள்ள மக்கள் எங்களை மிகுந்த பாசத்துடனும் அக்கறையுடனும் கவனித்துக் கொள்கிறார்கள்.

பிரதமர் – உங்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். ஆனால் சாவர்குண்ட்லாவிலும், வத்வானிலும் மக்கள் மிகுந்த உணர்ச்சிபூர்வமான சூழலை உருவாக்கியுள்ளனர். நேற்று, எல்லா இடங்களிலும் உள்ள கோவில்களில் பிரார்த்தனைகள், வழிபாடுகள், பூஜைகள் நடைபெற்றன. நாடு முழுவதும் உள்ள புனித யாத்திரைத் தலங்களில் பூஜை செய்யப்பட்டது. இந்தியா உங்களை வரவேற்க ஆவலுடன் காத்திருக்கிறது.

பிரதமர் – உங்களை இவ்வளவு சிறப்பாக கவனித்துக் கொண்ட சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரக அரசுகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்மித், உங்களுக்கு எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் ஒரு தொலைபேசி அழைப்பைச் செய்யலாம்.

கேப்டன் ஸ்மித் – நன்றி சார்.

பிரதமர் – நாம் சந்திக்கும்போது, அனைத்து உள்விவரங்களையும் நான் பின்னர் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். ஏனெனில், இதுபோன்ற விஷயங்களை உங்களுடன் கைப்பேசியில் விவாதிக்க நான் விரும்பவில்லை.

கேப்டன் ஸ்மித் – அப்படியே ஆகட்டும் சார்.

பிரதமரே – தயவுசெய்து முழுமையாக குணமடைவதில் கவனம் செலுத்துங்கள். ஒட்டுமொத்த தேசமும் உங்களுடன் இருக்கிறது.

கேப்டன் ஸ்மித் – நன்றி சார்.

பிரதமர் – கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்!





கடந்த 10 முதல் 12 ஆண்டுகளில், கைப்பேசியானது (மொபைல்) நவீன தகவல் தொடர்பு சாதனமாக இருப்பதுடன், நல்லாட்சிக்கான ஒரு முக்கிய கருவியாகவும் உருவெடுத்துள்ளது. மேலும், இதுவே நமது டிஜிட்டல் இந்தியா தொலைநோக்குப் பார்வையின் மையமாக இருந்து வருகிறது.

– பிரதமர் திரு நரேந்திர மோடி

டிஜிட்டல் இணைப்பு மூலம் எதிர்காலத்திற்கான ஒரு புதிய பாதை

கடந்த பத்து ஆண்டுகளில், தொலைத்தொடர்பு, டிஜிட்டல் இணைப்பு ஆகிய துறைகளில் இந்தியா முன்னெப்போதும் இல்லாத விரிவாக்கத்தைக் கண்டுள்ளது. தொலைதூரப் பகுதிகளுக்குத் தொலைத்தொடர்பு கோபுரங்கள், கண்ணாடி இழை கட்டமைப்புகள் சென்றடைவது ஆகியவை, டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்துள்ளன. இந்த வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக, அடுத்த பத்து ஆண்டுகளுக்கான டிஜிட்டல், தொலைத்தொடர்புப் பயணத்திற்கான ஒரு செயல்திட்டத்தை இந்தியா தயாரித்து வருகிறது. இந்திய மொபைல் மாநாட்டின் 10–வது பதிப்பின் தொடக்க விழாவில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, தொழில்நுட்பம், ஆராய்ச்சி, தொழில், முதலீடு, சிந்தனைகள் ஆகியவற்றின் சந்திப்பு புள்ளியாக இந்திய மொபைல் மாநாடு (இந்திய மொபைல் காங்கிரஸ் – ஐஎம்சி) உருவாக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

2026 அக்டோபர் 07 முதல் 10 வரை நடைபெற்ற இந்திய மொபைல் மாநாடு, இந்தியாவின் முன்னேற்றத்தையும் லட்சியங்களையும் வெளிப்படுத்தியது. தொடக்க விழாவில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியாவின் தொலைத்தொடர்புக் கட்டமைப்பு தொடர்ச்சியாக விரிவடைந்துள்ளது என்று குறிப்பிட்டார். தொலைதூரப் பகுதிகளில் கோபுரங்கள் நிறுவப்பட்டன. கண்ணாடி இழை கட்டமைப்புகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் விரிவடைந்தன. மேலும் குறைந்த விலையில் தரவுப் பயன்பாடு சாத்தியமானது. இது புதிய பொருளாதாரத் துறைகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்துள்ளது. மேலும், தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, கல்வித் துறைகளில் ஒரு புதிய நுகர்வோர் தளத்தையும், புதிய தலைமுறை படைப்பாளிகளையும் இது வளர்த்தெடுத்துள்ளது. தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்ட இந்தப் புரட்சியால் இந்திய மக்கள் நேரடியாகப் பயனடைந்துள்ளனர்.

மிகவும் பன்முகத்தன்மை கொண்ட ஒரு தேசத்தை தொழில்நுட்பம் எவ்வாறு ஒன்றிணைத்தது என்பதை விளக்கிய பிரதமர், முன்னர் அன்றாட வாழ்க்கைக்குத் தடையாக இருந்த மிகப்பெரிய புவியியல், மொழித் தடைகளை கைப்பேசி இணைப்பு தகர்த்தெறிந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

டிஜிட்டல் மாற்றத்திற்கு முன்பு, மக்கள் அடிப்படை வங்கிச் சேவைகள், சுகாதாரப் பராமரிப்பு, அரசு சேவைகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக நகர்ப்புற மையங்களுக்குப் பயணம் செய்து பெருமளவு நேரத்தையும் பணத்தையும் வீணடிக்க வேண்டியதாக இருந்ததை அவர் சுட்டிக்காட்டினார். கைப்பேசி (மொபைல்) இணைப்பு இந்த பன்முகத்தன்மையை மக்களின் வசதிகளுடன் இணைத்துள்ளது.

டிஜிட்டல் ஆளுகை நிலைமையை மாற்றியமைத்துள்ளது. இப்போது, நூற்றுக்கணக்கான அரசு சேவைகள் கைப்பேசியிலேயே கிடைக்கின்றன. மேலும், அரசின் நிதியுதவியானது பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் போது, மற்ற அனைத்தும் முடங்கிப் போன வேளையில், இந்தியாவில் அலுவலகப் பணிகள், வங்கிச் செயல்பாடுகள், கல்விச் செயல்பாடுகள் ஆகியவை தொடர்ந்து இயங்கின. இந்தியாவின் டிஜிட்டல் சூழல் அமைப்பே இந்த மாற்றத்தைச் சாத்தியமாக்கியது. கல்வி, சுகாதாரம், பணம் செலுத்தும் முறைகள், அரசு சேவைகள் ஆகியவை தடையின்றி இயங்குவதை கைப்பேசியும், இணைய இணைப்பும் உறுதி செய்தன.

ஐஎம்சி 2026-ன் கருப்பொருள்: எல்லைகளைத் தாண்டி விரிவடைதல்

ஐஎம்சி 2026-ன் நான்கு முக்கிய தூண்கள்

- உருவாக்கம்: எதிர்காலத்தை உருவாக்குதல்
- செறிவூட்டல்: வளர்ச்சியை துரிதப்படுத்துதல்
- பாதுகாப்பு: நம்பிக்கையை வலுப்படுத்துதல்
- அதிகாரமளித்தல்: விரிவடையும் வாய்ப்புகள்



டிஜிட்டல் கட்டமைப்பின் வலிமையை எடுத்துரைத்தல்...

- பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதித் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு ரூ.4 லட்சம் கோடிக்கும் மேல் பணப்பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- சுமார் ரூ.50 லட்சம் கோடி, நேரடிப் பலன் பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகச் சென்றடைந்துள்ளது.
- இந்த நடைமுறை, ரூ.5 லட்சம் கோடி இழப்பைத் தடுத்து அரசுக்கு சேமிப்பை வழங்கியுள்ளது.
- இந்தியாவில் 50 கோடிக்கும் அதிகமான மக்கள் ஏதேனும் ஒரு வகையில் கேமிங் சூழலுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியா முழுவதும் 5.5 லட்சத்திற்கும் அதிகமான அடிப்படை நிலையங்கள் செயல்பட்டு, 5ஜி கட்டமைப்பிற்கு ஆற்றலை வழங்குகின்றன.
- 2022-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நாட்டில் மொபைல் இணைய வேகம் பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

ஒன்பது முக்கிய பிரிவுகள்

2026-ம் ஆண்டு பதிப்பில் சேர்க்கப்பட்டவை

- 5ஜி, 6ஜி
- அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்புகள்
- செமிகண்டக்டர்கள்
- பூமிக்கு அப்பாற்பட்ட கட்டமைப்புகள்
- இணையதளப் பாதுகாப்பு
- குவாண்டம் தகவல் தொடர்பு
- தொழில் நிறுவன மாற்றம்
- சுழற்சிப் பொருளாதாரம்
- சுற்றுச்சூழல், சமூகம், நிர்வாகம் (இஎஸ்ஜி) ஆகியவையும் மின்னணு உற்பத்தியும்



9-வது மொபைல் மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்ட முக்கிய பகுதிகள்...

- நவீன போக்குவரத்து (ஸ்மார்ட் மொபிலிட்டி)
- கள அனுபவம்
- தொழில்துறை ரோபாட்டிக்ஸ்
- போக்குவரத்து தொழில்நுட்பம்

ஐஎம்சி 2026-ன் சிறப்பம்சங்கள்...

100-க்கும் அதிகமான நாடுகளின் பிரதிநிதிகள்

900-க்கும் அதிகமான சிந்தனையாளர்களின் பங்கேற்பு


500-க்கும் அதிகமான கண்காட்சியாளர்களும், ஒத்துழைப்பு அமைப்புகளும்

600-க்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்கள்

1.5 லட்சத்திற்கும் அதிகமான பங்கேற்பாளர்கள்

120-க்கும் அதிகமான அமர்வுகள்

மக்களின் வசதிகளை மேம்படுத்தும் தொழில்நுட்பம்



கைப்பேசிகள் உரையாடலுக்கான ஒரு சாதனம் மட்டுமல்ல

தீக்ஷா தளம் இணையவழிக் கல்விக்கு வழிவகுக்கிறது. கோவிட்-19 பாதிப்புத் தொடங்கியதிலிருந்து ஜூலை 2022 வரை, இது 500 கோடிக்கும் அதிகமான கற்றல் அமர்வுகளையும், ஏறத்தாழ 6,000 கோடி நிமிடக் கற்றலையும் பதிவு செய்துள்ளது. சுமார் 25 கோடி மாணவர்களை இந்த டிஜிட்டல், இணையதளக் கல்வித் தளங்களுடன் இணைக்கும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) நூற்றாண்டு விழா

மக்கள் நலன் சார்ந்த ஆட்சிமுறை
நல்லாட்சியின் அடையாளம்

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கு, தற்போது தேவைப்படும் ஆளுகை முறையானது, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி), மாநிலப் பணியாளர் தேர்வாணையங்கள் ஆகியவற்றைப் பெருமளவில் சார்ந்துள்ளது. யுபிஎஸ்சி, 100 ஆண்டுகளில் தனது நம்பகத்தன்மையைத் தொடர்ந்து வலுப்படுத்தியுள்ளது. யுபிஎஸ்சி–யின் சுதந்திரம், நடுநிலைத்தன்மை, தகுதிக்கு முக்கியத்துவம், ரகசியத்தன்மை, நியாயமான நடைமுறைகள் ஆகியவை அதன் அடையாளமாக அமைகின்றன. 2026 அக்டோபர் 01 அன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற யுபிஎஸ்சி நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இந்தியாவின் புதிய பணிக் கலாச்சாரத்திற்கான மூன்று தாரக மந்திரங்களை எடுத்துரைத்தார்: மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறை, செயல்திறன், நல்லாட்சி ஆகியவை அவை.

1926–ம் ஆண்டில் இந்த அமைப்பிற்கு அடித்தளம் இடப்பட்டபோது, அக்காலத்தின் முன்னுரிமைகள் வேறுபட்டிருந்தன. அக்காலத்தில், இந்த அமைப்பின் கவனமும், அர்ப்பணிப்பும் பிரிட்டிஷ் ஆட்சியை நோக்கியே இருந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, சுதந்திர இந்தியாவின் கனவுகளும், சுதந்திர இந்தியாவின் ஆளுகைத் தேவைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. கடந்த பல ஆண்டுகளாக, யுபிஎஸ்சி தனது பொறுப்புகளை சிறந்த முறையில் நிறைவேற்றி வருகிறது. இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இது யுபிஎஸ்சி–யின் 100 ஆண்டுகாலக் கொண்டாட்டம் மட்டுமல்ல, ஒரு பாரம்பரியத்தின் கொண்டாட்டமும் கூட என்று குறிப்பிட்டார். இது, ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான இளைஞர்கள் போற்றிப் பின்தொடரும் எதிர்பார்ப்புகளின் கொண்டாட்டம். ஒவ்வொரு இந்தியரும் இந்த அமைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் கொண்டாட்டம். இந்த நூற்றாண்டு காலப் பயணத்தில், தலைமுறைகள் மாறின; அரசுகள் மாறின; தொழில்நுட்பம் மாறியது; பாடத்திட்டங்கள் மாறின; இருப்பினும், யுபிஎஸ்சி மீதான நம்பிக்கை இப்போதும் அசைக்க முடியாததாகவே உள்ளது. அதுவே யுபிஎஸ்சி–யின் மிகப்பெரிய சொத்துக்களில் ஒன்றாகும்.

பொறுமை, விவேகம், துணிச்சல் ஆகியவற்றுக்கு ஒரு எடுத்துக்காட்டு

இந்நிகழ்ச்சியின் போது, ஃப்ளைதுபாய் எஃப்இசட்1073 விமானத்தை இயக்கியபோது சிறந்த வீரத்தை வெளிப்படுத்திய கேப்டன் ஸ்மித் மச்சார் விரைவில் குணமடைய பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்தார். இந்திய கேப்டன் வெளிப்படுத்திய பொறுமை, விவேகம், துணிச்சல் ஆகியவற்றைப் பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டினார்.

இந்த இந்தியர் 9/11 போன்ற ஒரு துயரச் சம்பவத்தைத் தடுத்துள்ளார் என்று இஸ்ரேலியப் பிரதமர் கூறிய கருத்தையும் பிரதமர் திரு நரேந்திர

முன்பொரு காலத்தில், அரசே உச்சபட்ச அதிகார அமைப்பாக விளங்கிய காலகட்டத்தை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இப்போது, மக்களே கடவுள் என்பதே நமது தாரக மந்திரம். வேறுவார்த்தைகளில் கூறவேண்டுமெனில், இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எங்களுக்கு தெய்வத்திற்குச் சற்றும் குறைவானவர் அல்ல. மக்களுக்குச் சேவை செய்வதே எங்களின் தலையாய முன்னுரிமையாகும்.

– பிரதமர் நரேந்திர மோடி



பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த கியூ.ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

நினைவு நாணயமும் அஞ்சல் தலையும் வெளியிடப்பட்டது

- யுபிஎஸ்சி நூற்றாண்டு விழா நினைவு நாணயம், நினைவு அஞ்சல் தலை, யுபிஎஸ்சி கொள்கைகளை வடிவுமைத்த 100 வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் என்ற தலைப்பிலான புத்தகம் ஆகியவை வெளியிடப்பட்டன.
- பிரதமர் திரு நரேந்திர மோடி, பாரத் மண்டபத்தில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) 100 ஆண்டு காலப் பயணத்தை எடுத்துரைக்கும் கண்காட்சியையும் பார்வையிட்டார்.
- கடந்த ஆண்டு அக்டோபர் 01–ம் தேதி தொடங்கிய ஓராண்டு காலக் கொண்டாட்டங்களின் நிறைவைக் குறிக்கவும், 1926–ல் நிறுவப்பட்ட யுபிஎஸ்சி–யின் 100 ஆண்டு கால நிறைவை நினைவுகூரவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்நிகழ்ச்சியில், மாநிலப் அரசுப் பணியாளர் தேர்வாணையங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், மத்திய அரசின் மூத்த அதிகாரிகள், கல்வியாளர்கள், யுபிஎஸ்சி–ன் அதிகாரிகள் மற்றும் நாடு முழுவதிலுமிருந்து இத்துறை சார்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.
- இந்த நிகழ்ச்சி, யுபிஎஸ்சி–யால் 2026 செப்டம்பர் 30, அக்டோபர் 01 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்றது.
- முதல் நாளில், பாரத் மண்டபத்தில் நடைபெற்ற நூற்றாண்டு விழா கலந்துரையாடல் நிகழ்ச்சியில், புகழ்பெற்ற பேச்சாளர்களின் உரைகளைத் தொடர்ந்து பல்வேறு தலைப்புகளில் குழு விவாதங்கள் இடம்பெற்றன.

திறமையாளர்கள் நிறைந்த குழு

1976

- யுபிஎஸ்சி தனது 50–வது ஆண்டு விழாவைக் கொண்டாடிய 1976–ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 45 மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

1952

- 1952–ல், குடிமைப் பணித் தேர்வுகளில் பெண்களின் பங்கு வெறும் 3 சதவீதமாக மட்டுமே இருந்தது. இப்போது, அது 30 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

2014

- யுபிஎஸ்சி–யின் இத்தனை ஆண்டுகால வரலாற்றிலும் 4 பெண்களே தலைமைப் பொறுப்பை வகித்துள்ளனர். அவர்களில் மூவர் 2014–ம் ஆண்டுக்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்களாவர்.

மோடி சுட்டிக்காட்டினார். ஸ்மித்தின் இந்தச் சாதனை ஒவ்வொரு இந்தியரையும் பெருமிதம் கொள்ளச் செய்கிறது. நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தியாவின் பெருமையை உயர்த்திய நமது சகோதரர் ஸ்மித்தின் நீண்ட ஆயுளுக்கும் சிறந்த உடல் நலத்திற்கும் நாம் அனைவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று பிரதமர் வேண்டுகோள் விடுத்தார். ●

பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் மூன்றாண்டுகள்

பழங்குடியின சமூகத்தின் மேம்பாடு...

பழங்குடியினரின் பெருமையைக் கொண்டாடுவதன் மூலம் வருங்கால சந்ததியினருக்கு உத்வேகம் அளித்தல்

என் பழங்குடியின சகோதரர்கள் காடுகளிலும் மலைகளிலும், பல சமயங்களில் உடுத்த உடைகள் கூட இல்லாமல் வாழ்ந்தபோதிலும், இந்தியத் தாய்த்திருநாட்டின் சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்ய ஒருபோதும் தயங்கவில்லை என்பதை என் நாட்டின் வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மரியாதைக்கும் கௌரவத்திற்கும் உரியவர்கள். வருங்கால சந்ததியினர் அவர்களிடமிருந்து உத்வேகம் பெற வேண்டும்" என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் காரணமாகவே, 2021–ம் ஆண்டு முதல் 'பழங்குடியினர் பெருமை தினம்' (ஜன்ஜாதிய கௌரவ் திவாஸ்), ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 15 அன்று கொண்டாடப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, அதிகம் நலிவடைந்த பழங்குடியினர் மேம்பாட்டுக்காக, 2023–ம் ஆண்டில் பிரதமரின் ஜன்மன் திட்டம் தொடங்கப்பட்டது. இது, அதிகம் நலிவடைந்த 75 பழங்குடியினக் குழுக்களின் மேம்பாட்டிற்கு வழிவகுத்தது.

2011–ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 750 பழங்குடியின சமூகக் குழுக்கள் உள்ளன. அவற்றின் மொத்த மக்கள் தொகை 10.45 கோடி ஆகும். இவர்களில், 75 குழுக்கள் குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய பழங்குடியினக் குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பழங்குடியின சமூகங்களின் முன்னேற்றத்திற்காக இட ஒதுக்கீடு வழங்கப்பட்டாலும், அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான அரசு அவர்கள் மீது அதிக கவனம் செலுத்தியது. இந்த சமூகத்தின் நம்பிக்கைகளையும், விருப்பங்களையும் புரிந்துகொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1999–ம் ஆண்டில் பழங்குடியினர் வளர்ச்சிக்கென ஒரு தனி அமைச்சகம் நிறுவப்பட்டது. மேலும் பழங்குடியின சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் செழிப்புக்காகவும் 89–வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தேசிய பழங்குடியினர் ஆணையம் நிறுவப்பட்டது. இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய அரசு, கடந்த 12 ஆண்டுகளாக, பழங்குடியின சமூகத்தின் பெருமையையும் பங்களிப்புகளையும் தீவிரமாக முன்னிலைப்படுத்தியுள்ளது. இதன்மூலம் எதிர்கால சந்ததியினர் பழங்குடியினரின் பங்களிப்புகளைப் போற்றுவதற்கு வழிவகை செய்யப்படும். பழங்குடியின விடுதலைப் போராட்ட வீரரும், காலனியாதிக்க எதிர்ப்புச் செயல்பாட்டாளருமான பிர்சா முண்டாவின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், பழங்குடியினர் பெருமை தினம் நவம்பர் 15 அன்று கொண்டாடப்படுகிறது. பிர்சா முண்டா 1874–ம் ஆண்டு பிறந்தார். அவரது 150–வது பிறந்தநாள் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில், 2024 நவம்பர் 15 முதல் 2025 நவம்பர் 15 வரையிலான ஓராண்டு காலம், பழங்குடியினர் கௌரவ ஆண்டாகக் கொண்டாடப்பட்டது.

பிரதமரின் ஜன்மன்... சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்துதல்

குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய பழங்குடியினக் குழுக்களின் மேம்பாட்டுக்காக பிரதமரின் ஜன்மன் திட்டம், மண்ணின் மைந்தன் பழங்குடியின கிராம வளர்ச்சித் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை,

பழங்குடியின சமூகங்களுக்கென ஒரு தனி அமைச்சகத்தையும் அதற்கென பிரத்யேக நிதி ஒதுக்கீட்டையும் வழங்கியது அடல் பிஹாரி வாஜ்பாயின் அரசுதான். எமது அரசின் கீழ், பழங்குடியினர் நலனுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த காலத்தை விட தற்போது ஆறு மடங்கு அதிகரித்துள்ளது.

– பிரதமர் நரேந்திர மோடி





பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள்

நடவடிக்கைகள்	ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்/பணிகளின் எண்ணிக்கை
பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீட்டுவசதி	4.82 லட்சம்
பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைகள்	7,992 கிலோ மீட்டர்
ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கிராமங்கள்	18,756
நடமாடும் மருத்துவப் பிரிவுகள்	831
அங்கீகரிக்கப்பட்ட அங்கன்வாடி மையங்கள்	2,498
அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணிகள்	500
மின்மயமாக்கலுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட வீடுகள்	1.54 லட்சம்
போக்குவரத்து இணைப்பு வசதிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள்	4,347
வளர்ச்சி மையங்களும் பல்நோக்கு மையங்களும்	1,540
வனங்கள் வளர்ச்சி மையங்கள்	500

மண்ணின் மைந்தன் பழங்குடியின கிராம வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்கான 25 நடவடிக்கைகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, பழங்குடியின கிராமங்களின் சமூக–பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் செயல்படும், 17 அமைச்சகங்களை உள்ளடக்கிய மண்ணின் மைந்தன் பழங்குடியின கிராம வளர்ச்சி திட்டத்தை 2024 அக்டோபர் 02 அன்று தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 63,843 கிராமங்களில் சுகாதாரம், கல்வி, அங்கன்வாடி வசதிகள் உள்ளிட்டவற்றில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமான 25 நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது 30 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் உள்ள 549 மாவட்டங்களில் வசிக்கும் 5 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கும்.

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் **20** லட்சம் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்புத் (உஜ்வாலா திட்டம்) திட்டத்தின் கீழ் **25** லட்சம் எல்பிஜி இணைப்புகள் வழங்கப்படும்.

25,000 கிலோ மீட்டர் தொலைவுக்கு சாலைகள்

1,000 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன.

- அனைத்து கிராமங்களிலும் வீடுதோறும் குழாய் மூலம் குடிநீர் இணைப்புத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.
- 2,000 நிறுவனங்களின் மேற்கூரைகளில் சூரியசக்தி அமைப்புகள் நிறுவப்படும்.
- ஊட்டச்சத்து 2.0 திட்டத்தின் கீழ் 2,000 புதிய அங்கன்வாடி மையங்கள் திறக்கப்படவுள்ளன.
- ஒருங்கிணைந்த கல்வித் (சமக்ரா சிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழ் 1,000 தங்கும் விடுதிகள் கட்டப்படும்.
- 1,000 வனங்கள் வளர்ச்சி மையங்களும் 30 திறன் மையங்களும் தொடங்கப்படும்.
- 700 ஊட்டச்சத்து பூங்காக்கள்; 1,000 தங்கும் விடுதிகள்

பழங்குடியினர் நலனுக்காக மத்திய அரசு தொடங்கியுள்ளது. இவை இந்த சமூகங்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துகின்றன.

2023–ம் ஆண்டு பழங்குடியினர் பெருமை தினத்தன்று பிரதமரால் தொடங்கப்பட்ட பிரதமரின் ஜன்மன் திட்டம், நாடு முழுவதும் உள்ள குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய பழங்குடியினக் குழுக்களைச் சேர்ந்த மக்களின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக ரூ.24,000 கோடிக்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பாதுகாப்பான வீடுகள், தூய்மையான குடிநீர், கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்துக்கான மேம்பட்ட அணுகல், சாலை, தொலைத்தொடர்பு இணைப்பு, மின்சார வசதியற்ற வீடுகளை மின்மயமாக்குதல், நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் ஆகியவற்றை வழங்குகிறது. குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய பழங்குடியினச் சமூகங்களின் மேம்பாட்டுக்காக, இந்தத் திட்டத்தின் கீழ், ஒன்பது அமைச்சகங்கள் இணைந்து, 11 வகையான பணிகளைச் செயல்படுத்துகின்றன.

கைப்பேசி செயலி மூலம் தரவுகள் சேகரிப்பு:

பிரதமரின் ஜன்மன் திட்டத்தின் கீழ் பயன்பெறும் கிராமங்களிலும் குடியிருப்புகளிலும், குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய பழங்குடியின மக்கள் தொகை, உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவை குறித்த தரவுகளைச் சேகரிக்க, பிரதமரின் விரைவு சக்தி கைப்பேசி (மொபைல்) செயலி பயன்படுத்தப்பட்டது. 19 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களில் 12.36 லட்சம் அதிகம் நலிவடைந்த குடும்பங்கள் இருப்பதாகவும், அவர்களின் மொத்த மக்கள் தொகை 48.52 லட்சம் என்றும் தரவுகள் குறிப்பிடுகின்றன. குறிப்பிடத்தக்க வகையில் பாதிப்படையக்கூடிய 75 பழங்குடியின சமூகக் குழுக்கள், சமூக, பொருளாதார, கல்வித் துறைகளில் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டு, பழங்குடியின சமூகங்களுக்குள் மிகவும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட பிரிவினராக உள்ளனர். ●



ப்ளூம்பெர்க் | புதிய பொருளாதார மன்றம் 2026

ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்ற மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடியின் உரை

மக்களுக்கு அதிகாரமளிப்பதற்கான ஆட்சி நிர்வாகம்

உண்மையான கேள்வி, அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதல்ல. மாறாக அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதே. தொழில்நுட்பத்தின் பலன்கள் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்குமா, அல்லது அவை கோடிக்கணக்கான மக்களுக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்குமா? அறிவு ஒரு சிலருக்குள்ளேயே முடங்கிக் கிடக்குமா, அல்லது அது ஒவ்வொரு தனிநபரின் ஆற்றலையும் மேம்படுத்துமா? அக்டோபர் 13 அன்று புதுதில்லியில் தொடங்கிய ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்ற மாநாட்டில் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்த பிரதமர் திரு நரேந்திர மோடி, "இப்போது, நான் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் இங்கு வந்துள்ளேன்: அது, மக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான ஆட்சி நிர்வாகம்..." என்று குறிப்பிட்டார்.

"அறிவு, செல்வம் அல்லது அதிகாரம் பெற்ற எவருக்கும், அவற்றைப் பயன்படுத்தும் விதமே முக்கியமானதாக அமையும்" என்று ஒரு நீதிமொழி கூறுகிறது. வேறுவிதமாகக் கூறினால், அதிகாரத்தின் உண்மையான மதிப்பு அதன் நோக்கத்தில்தான் உள்ளது. இது இப்போதைய காலகட்டத்தில் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான கருத்தாகும். தமது உரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி, அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றவர்களை மேம்படுத்தும் மனிதப் பண்பு என்பது வெறும் போதனை மட்டுமல்ல எனவும் அது நமது பல்லாயிரம் ஆண்டுகால மரபுகள் நமக்கு கற்பித்த பாடம் என்றும் கூறினார். இந்தியாவில், இதை ஆளுகையிலும், பணிக் கலாச்சாரத்திலும் ஒருங்கிணைப்பதன் மூலம் நிரூபித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இணைப்பு, வாய்ப்புகளையும் இணைத்துள்ளது

சுமார் 12 அல்லது 13 ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்தியாவில் கைப்பேசிகளுக்கும் இணையத்திற்குமான அணுகலே ஒரு அதிகாரத்தின் வடிவமாக இருந்தது. 2014-ம் ஆண்டுக்குப் பிறகு, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பதவியேற்றபோது, குறைந்த விலையில் கைப்பேசிக்கான இணைய வசதி கிடைப்பதற்கு இந்தியா முன்னுரிமை அளித்தது. அதன் விளைவாக, இப்போது, ஒரு சிறிய நகரத்தில் உள்ள மாணவரும் கூட டிஜிட்டல் வழியிலான கல்வி கற்றல் வாய்ப்பைப் பெற முடிகிறது. ஒரு சிறிய கிராமத்துக் கடைக்காரர், புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடைய முடிகிறது. ஒரு இளைஞர் புதிய இணையதளப் படிப்பில் சேர முடிகிறது. வேறுவிதமாகக் கூறினால், இந்தியாவில் இணைப்பு என்பது மக்களை இணைத்ததோடு, பொன்னான வாய்ப்புகளையும் இணைத்துள்ளது. இதுவே மக்களுக்கு அதிகாரமளிக்கும் ஆட்சி அதிகாரமாகும்.

டிஜிட்டல் சக்தியின் முக்கிய பங்கு

100 –க்கும் அதிகமான மொழிகள்

1,000 –க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள் தொலைக்காட்சி அலைவரிசைகள்

80,000 பதிவு செய்யப்பட்ட செய்தித்தாள்கள்

50 கோடிக்கும் அதிகமான யூடியூப் பயனர்கள்

சுமார் **50** கோடி இன்ஸ்டாகிராம் பயனர்கள்



புத்தொழில் நிறுவனங்கள்

2.50 லட்சத்திற்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்கள்

45 % –க்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்களில் குறைந்தது ஒரு பெண் இயக்குநராவது உள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற நிகழ்ச்சியை முழுமையாகக் காண இந்த கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

இந்த ஆண்டு ப்ளூம்பெர்க் பொருளாதார மன்ற மாநாட்டின் கருப்பொருளில், உலகம் முழுவதும் உருவாகி வரும் புதிய சக்திகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியா அறிமுகப்படுத்தியவை–

- சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு.
- பேரிடரைத் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டமைப்பு.
- சர்வதேச புலியினங்கள் கூட்டமைப்பு.
- உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டமைப்பு.
- இந்தியா–மத்திய கிழக்கு–ஐரோப்பா பொருளாதார வழித்தடம் (ஐஎம்இசி).
- மிஷன் லைஃப் (சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை இயக்கம்) – கூட்டு நன்மையை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள்.

இந்தியா இந்தக் கருத்துருக்களை முன்வைத்தது–

- ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே கட்டமைப்பு.
- ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்.
- இந்தச் சந்தர்ப்பங்களிலும்கூட, அதிகாரமானது மற்றவர்களை மேம்படுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

அந்நியச் செலாவணிக் கையிருப்பு 700 பில்லியன் டாலரைத் தாண்டியுள்ளது–

- இந்தியா தற்போது 700 பில்லியன் டாலருக்கும் அதிகமான அந்நியச் செலாவணிக் கையிருப்பைக் கொண்டுள்ளது.
- இந்த நிதியாண்டின் (2026–27) ஏப்ரல் – ஜூன் காலாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 7.8% ஆக இருந்தது.

“ஒவ்வொரு காலகட்டத்திற்கும் அதிகார மையங்களும், அவற்றுக்கான வரையறைகளும் இருந்துள்ளன. இருப்பினும், 21–ம் நூற்றாண்டில், குறிப்பாக இந்த மூன்றாவது பத்தாண்டு காலத்தில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்து வருகிறது. இப்போது, தொழில்நுட்பம், தரவு, அறிவு, புதுமை ஆகியவையே அதிகாரமாக விளங்குகின்றன.


– பிரதமர் நரேந்திர மோடி



2026 ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் சிறப்பான செயல்பாடு

ஒரு அற்புதமான பயணம்
ஒரு மறக்கமுடியாத சாதனை

நாட்டின் தலைமை விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும்போது, அது மாபெரும் பலன்களை அளிக்கிறது. அதனால்தான், கடந்த 12 ஆண்டுகளில் இந்திய விளையாட்டு வீரர்கள் தங்கள் சிறப்பான செயல்பாடுகள் மூலம் விளையாட்டு அரங்கில் நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். இந்த நிலை ஆசிய விளையாட்டுப் போட்டியிலும் தொடர்ந்தது. இதில் இந்தியா, 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலப் பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்தது.



இந்தியா தமது ஆசிய விளையாட்டுப் போட்டி 2026 பயணத்தை மொத்தம் 85 பதக்கங்களுடன் நிறைவு செய்தது. இந்திய விளையாட்டு வீரர்களின் மிகச்சிறந்த செயல்பாடுகளும், வரலாற்றுச் சாதனைகளும் நிறைந்த இப்பயணம், நாட்டின் நினைவில் நீண்ட காலம் நிலைத்திருக்கும், ஐச்சி–நகோயா விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என மொத்தம் 85 பதக்கங்களைப் வென்று நான்காவது இடத்தைப் பிடித்தது. ஆசிய விளையாட்டுப் போட்டியின் வரலாற்றில், இந்தியா இதுவரை வென்ற பதக்க எண்ணிக்கையில் இது இரண்டாவது மிக அதிக எண்ணிக்கையாகும். நிறைவு விழாவில், விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு உள்ளிட்ட பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெற்றன.



தடகளத்தில் 24 பதக்கங்களையும், துப்பாக்கிச் சுடுதலில் 15 பதக்கங்களையும் இந்தியா வென்றது

இந்தியா பல வரலாற்றுச் சிறப்புமிக்க தனிநபர் சாதனைகளையும் படைத்தது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கோல்ஃப் விளையாட்டில் தனிநபர் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையை பிரணவி உர்ஸ் பெற்றார். அதேபோல், 17 வயதான கும்கும் மோஹாட், இந்தப் போட்டியில் வில்வித்தை ரிகர்வ் பிரிவில் தனிநபர் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் எனும் வரலாற்றைப் படைத்தார். மேலும், குத்துச்சண்டை பிரிவில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இரண்டாவது இந்தியப் பெண் (மேரி கோமுக்கு அடுத்ததாக) என்ற பெருமையை லவ்லினா போர்கோஹெய்ன் பெற்றார். இந்தியா தடகளப் போட்டிகளில் இதுவரை இல்லாத அளவாக 24 பதக்கங்களையும், துப்பாக்கிச் சுடுதலில் 15 பதக்கங்களையும் வென்றது. தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, வில்வித்தை விளையாட்டு மிகவும் வெற்றிகரமான விளையாட்டாக அமைந்தது. அதில் இந்தியா ஐந்து தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றியது.





ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவடைந்துள்ள நிலையில், மிகுந்த உறுதியுடனும், ஆர்வத்துடனும், சிறப்பான விளையாட்டு உணர்வுடனும் நம் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்திய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதக்கம் வென்ற அனைவருக்கும் எனது பாராட்டுகள். அவர்களின் அற்புதமான செயல்பாடுகள் நாட்டிற்கு அளப்பரிய மகிழ்ச்சியைத் தந்துள்ளன. இந்தப் போட்டிகள் வரும் ஆண்டுகளில் இன்னும் பெரிய சாதனைகளைப் படைக்க ஊக்கமளிப்பதோடு, அடிமட்ட அளவில் விளையாட்டை வலுப்படுத்தவும் பங்களிக்கும் என்று நம்புகிறேன்.

– பிரதமர் திரு நரேந்திர மோடி

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகள்

ஜப்பானில் இந்தியாவின் பயணம் பல வரலாற்று மைல்கற்களாலும், பல்வேறு விளையாட்டுகளில் பட்டங்களைத் தக்கவைத்துக் கொண்டதாலும் சிறப்பு பெற்றது. ஆடவர், மகளிர் கிரிக்கெட் அணிகள் இரண்டும் தங்களது ஆசியப் பட்டங்களைத் தக்கவைத்துக் கொண்டன. அதே நேரத்தில் இரு கபடி அணிகளும் தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றின. ஆடவர் ஹாக்கி அணி மலேசியாவை 5–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தமது பட்டத்தை வெற்றிகரமாகத் தக்கவைத்துக் கொண்டது. அதேவேளையில் மகளிர் அணி இறுதிப் போட்டியில் சீனாவை 1–0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்திற்கான 44 ஆண்டு கால காத்திருப்பை முடிவுக்குக் கொண்டு வந்தது.





நீங்கள் நமது மூவண்ணக் கொடிக்குப் பெருமை சேர்த்துள்ளீர்கள்

விளையாட்டு வீரர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்

அக்டோபர் 15 –ம் தேதி மாலை, தில்லியில் உள்ள மேஜர் தயான் சந்த் தேசிய மைதானத்தில், 2026 ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற இந்தியக் குழுவினருடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார். இந்த நிகழ்வின் போது, அவர் இந்தியக் குழுவினரிடையே உரையாற்றினார். இதில், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், உதவியாளர்கள், இந்திய ஒலிம்பிக் சங்க அதிகாரிகள், பல்வேறு தேசிய விளையாட்டு சம்மேளனங்களின் பிரதிநிதிகள், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். மகளிர் ஹாக்கி அணி 44 ஆண்டுகால நீண்ட காத்திருப்புக்குப் பிறகு தங்கப் பதக்கம் வென்றதை பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார். கிரிக்கெட்டில், ஆடவர், மகளிர் ஆகிய இரு அணிகளும் தொடர்ந்து இரண்டாவது முறையாக தங்கப் பதக்கங்களை வென்றன. மேலும், 28 ஆண்டுகளுக்குப் பிறகு பளுதூக்கும் போட்டியில் இந்தியா பதக்கம் வென்றுள்ளது. விளையாட்டு வீராங்கனைகளைப் பாராட்டிய பிரதமர், இந்தியா வென்ற மொத்தம் 85 பதக்கங்களில், 38 பதக்கங்களை நமது மகள்கள் பெற்றுத் தந்துள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தப் பதக்கங்கள் வெறும் எண்ணிக்கைகள் மட்டுமின்றி, அவை 'புதிய இந்தியா'–வின் வலிமையான பிம்பத்தைப் பிரதிபலிக்கின்றன.

கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்தியா மிகவும் பொறுமையுடனும், கடின உழைப்புடனும் தனது விளையாட்டுச் சூழலை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது.

நீங்கள் மூவண்ணக் கொடியின் பெருமையை உயர்த்தியுள்ளீர்கள்; அதன் கண்ணியத்தைக் காத்துள்ளீர்கள். அதனால்தான், உங்கள் வெற்றி உங்களுடையது மட்டுமின்றி, அது இந்நாட்டின் கோடிக்கணக்கான மக்களின் வெற்றியாக கொண்டாடப்படுகிறது. இந்திய மக்கள் அனைவரின் சார்பாகவும், உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

– பிரதமர் திரு நரேந்திர மோடி



லடாக்கின் மேம்பாட்டிற்கு ஊக்கமளித்தல்

லடாக்கில் இளைய தலைமுறையை மையமாகக் கொண்ட மேம்பாடு மற்றும் அதிகாரமளித்தலில் புதிய சகாப்தம் உருவாகி வருகிறது. தரமானக் கல்வியை அளிப்பதற்காக, லே பகுதியில் ஒரு முக்கிய 'திறன் மையம்' அமைக்கப்படுகிறது. மேலும், ஐஐடி ஜம்மு, ஐஐஎம் ஜம்மு ஆகியவற்றின் கிளை வளாகங்களை அமைப்பதற்கான முன்மொழிவுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு நவீன உள்கட்டமைப்பை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, புதிய விமான நிலைய முனையம் ஒன்றும் கட்டமைக்கப்படுகிறது. இது சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழலில், பிரதமர் நரேந்திர மோடி அக்டோபர் 15 அன்று ரூ.3,350 கோடி மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்தார்...

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலானத் திட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, லடாக்கின் புதிய தலைமுறைக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருவதாகக் குறிப்பிட்டார். அப்பகுதி இளைஞர்களுக்குத் தரமான கல்வி கிடைப்பதையும், புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் கிடைப்பதையும், அவர்கள் பிற நகரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் இல்லாத சூழலை உருவாக்குவதையும் உறுதி செய்யும் வகையில் அரசு பணியாற்றி வருகிறது. லே பகுதியில் ஒரு முக்கிய 'திறன் மையத்தை' அமைப்பதற்கான பணிகளுடன், ஐஐடி ஜம்மு, ஐஐஎம் ஜம்மு ஆகியவற்றின் துணை வளாகங்களை அமைப்பதற்கான முன்மொழிவுகளும் முன்னெடுக்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்தார். இது லடாக் இளைஞர்களுக்கு உயர்கல்வி, ஆராய்ச்சி, புதிய திறன்கள் ஆகியவற்றுக்கான சிறந்த வாய்ப்புகளை, அவர்களின் பிராந்தியத்திலேயே பெற்றுத் தரும்.

லடாக்கில் நவீன உள்கட்டமைப்பை மேம்படுத்தும் அதே வேளையில், உள்ளூர் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மத்திய அரசு உறுதியுடன் உள்ளது. பிரதமர் மோடி, சுமார் ரூ.2,500 கோடி செலவில் அமைக்கப்பட்ட நிம்மு – பதும் – தர்ச்சா சாலையை லடாக்கிற்கு அர்ப்பணித்தார். இதற்கு முன்னர் சுமார் 12 மணிநேரமாக இருந்த பயண நேரத்தை, தற்போது சுமார் 3 மணிநேரமாக குறைத்துள்ளது. இது பயண நேரத்தைச் சேமிப்பதோடு, அப்பகுதியின் வணிகம், வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பெரும் ஊக்கமளிக்கும்.

லடாக்கிற்கு ரூ.3,350 கோடி மதிப்பிலான 5 முக்கியத் திட்டங்கள்

- நிம்மு – பதும் – தர்ச்சா சாலை: 298 கி.மீ நீளமுள்ள, முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சாலை நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- புதிய விமான நிலைய முனையம்: குஷோக் பகுலா ரிம்போச்சி விமான நிலையத்தில், ரூ.640 கோடி செலவில் கட்டப்பட்ட 23,800 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நவீன முனையம் செயல்பாட்டுக்கு வந்தது. (வருடாந்திர கையாளும் திறன்: 35 லட்சம் பயணிகள்)
- மின்சாரம் மற்றும் எரிசக்தி: 9 மெகாவாட் திறன் கொண்ட 'ஹனு' சிறிய நீர்மின் திட்டம், 66 kV இரட்டைச் சுற்று 'தா– ஹனு– கலாட்சே' மின் கடத்தி இணைப்பு ஆகியவை தொடங்கி வைக்கப்பட்டன.
- நீர் பாதுகாப்பு: 'ஹிம் சரோவர்' திட்டத்தின் கீழ், 40 கிராமங்களில் கட்டமைக்கப்பட்டுள்ள 40 நீர்நிலைகள் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.



பாரம்பரியத்தையும் எதிர்காலத்தையும் வளமாக்குதல் முன்னேற்றத்திற்கான லட்சியங்கள்

இந்தியா தனது பாரம்பரியத்தைப் போற்றிப் பாதுகாப்பதோடு, எதிர்கால லட்சியங்களையும், கனவுகளையும் நோக்கி விரைவாக முன்னேறுகிறது. 'காசி தமிழ்ச் சங்கமம்' போன்ற முன்முயற்சிகள் கலாச்சார பிணைப்புகளை வலுப்படுத்துகின்றன. அதேவேளையில், நவீன ரயில்வே மற்றும் நெடுஞ்சாலை மேம்பாட்டு நடவடிக்கைகள் மாநிலங்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கின்றன. பிரதமர் நரேந்திர மோடி சென்னைக்கு வந்தபோது, தமிழ்நாட்டிற்காக ரூ.13,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான திட்டங்களைத் தொடங்கி வைத்தார். மேலும், மூளை ஆராய்ச்சி மையத்தையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அத்துடன், ஜெயகோபால் கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பொன்விழா கொண்டாட்டத்தில் இளைஞர்களிடையே உரையாற்றிய அவர், "நாட்டின் அபரிமிதமான ஆற்றலை வலியுறுத்தியதுடன், இளைஞர்கள் தங்களின் எதிர்காலத்தை மிகச்சிறப்பான அளவில் திட்டமிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

வலிமையான உள்கட்டமைப்பு என்பது இந்தியா உள்ளிட்ட எந்தவொரு நாட்டின் முன்னேற்றத்திற்குமான மிக உறுதியான தூணாகும். இளைஞர்கள்தான் நாட்டின் எதிர்காலத்தின் சிற்பிகள். அதனால்தான், எதிர்கால தலைமுறையினருக்காக ரயில்வே, மெட்ரோ அமைப்புகள், நெடுஞ்சாலைகள், விரைவுச் சாலைகள் போன்ற உள்கட்டமைப்புகளை உருவாக்குவதுடன், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவனங்களையும் இந்தியா நிறுவுகிறது. சென்னையில் நடைபெற்ற. நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியா தனது கலாச்சார வலிமையிலிருந்து ஊக்கத்தைப் பெறுவதாகவும், அறிவியல் முன்னேற்றத்தின் மூலம் வளர்ந்து வருவதாகவும், நவீன உள்கட்டமைப்பின் வாயிலாக புதிய வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் குறிப்பிட்டார். நமது பாரம்பரியமும், எதிர்கால லட்சியங்களும் ஒருங்கிணைந்து முன்னேறுகின்றன. கடந்த பத்தாண்டுகளில், இந்தியா தனது மெட்ரோ ரயில் கட்டமைப்பை நாடு முழுவதும் கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது. 2014–ம் ஆண்டில் ஐந்து நகரங்களில் மட்டுமே இருந்த மெட்ரோ ரயில் சேவைகள், தற்போது 25 நகரங்களில் செயல்பாட்டில் உள்ளன. இந்தக் கட்டமைப்பு 250 கி.மீ–லிருந்து 1,100 கி.மீ ஆக விரிவடைந்துள்ளது. சென்னை மெட்ரோவின் புதிய விரிவாக்கம், இந்த கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்தும்.

ஒரு வலுவான மந்திரம்: மாநில வளர்ச்சியின் மூலம் தேசத்தின் வளர்ச்சி

- சென்னையில் ரூ.13,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இத்திட்டங்கள் மெட்ரோ ரயில், நெடுஞ்சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், பெட்ரோலியம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கியவை.
- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் (இரண்டாம் கட்டம்) பூந்தமல்லி– வடபழனி இடையிலான மெட்ரோ ரயில் சேவையை தொடங்கி வைத்தார். மேலும், மெட்ரோ ரயிலில் பயணம் செய்தார்.
- தமிழ்நாட்டில் சுமார் ரூ.3,700 கோடி மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- காரைக்கால் – பேராளம் ரயில் பாதை உட்பட, ரூ.750 கோடிக்கும் அதிக மதிப்பிலான ரயில்வே உள்கட்டமைப்புத் திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- கோயம்புத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூன்று ரயில் மேம்பாலங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். மேலும், பழனி, வேலூர் கண்டோன்மென்ட், அம்பாசமுத்திரம், பரமக்குடி, நாமக்கல் ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட 'அம்ரித் பாரத்' ரயில் நிலையங்களைத் திறந்து வைத்தார்.
- சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம், வ.உ.சிதம்பரனார் துறைமுகம் தொடர்பான திட்டங்களைத் தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டினார்.
- சென்னை ஐஐடி–ல் உள்ள 'சுதா கோபாலகிருஷ்ணன் மூளை ஆராய்ச்சி மையத்தை' நாட்டுக்கு அர்ப்பணித்து, ஒரு தனித்துவமான உலகளாவிய அறிவியல் பணியை பிரதமர் தொடங்கி வைத்தார். இப்பணியானது, கரு நிலை முதல் முதுமை வரை மனித வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ள 100–க்கும் மேற்பட்ட மனித மூளைகளின், செல் அளவிலான முப்பரிமாண வரைபடங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



கடந்த 25 ஆண்டுகளில், ஜனநாயகத்தின் இரண்டு தூண்களின் மீதான எனது நம்பிக்கை தொடர்ந்து வலுப்பெற்றுள்ளது. முதலாவதாக, நம் நாட்டு மக்கள்! இரண்டாவதாக, கூட்டுறவுக் கூட்டாட்சி! மாநிலங்களின் வளர்ச்சியிலிருந்தே நாட்டின் வளர்ச்சி கட்டமைக்கப்படுகிறது என்ற மந்திரமே எனக்கு எப்போதும் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

– பிரதமர் திரு நரேந்திர மோடி

- மனிதர்களில் ஏற்படும் இஸ்கிமிக் பக்கவாதம் குறித்து, முதன்முதலில் உருவாக்கப்பட்ட அட்லஸான 'சி–ஸ்ட்ரோக்' வெளியிடப்பட்டது. இதில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட மூளையின் 1,000–க்கும் மேற்பட்ட நுண்–பிரிவுகள் குறித்த விரிவான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரதமரின் முழு நிகழ்ச்சியைக் காண கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.


இன்று, கப்பல் போக்குவரத்துத் துறையை புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்லும் நோக்கில், நாடு தனது துறைமுகக் கட்டமைப்பையும் வலுப்படுத்தி வருகிறது. அரசின் தலைவராகத் தான் பணியாற்றிய 25 ஆண்டுகால அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிட்ட பிரதமர், மாநில அளவில் பணியாற்றிய காலமே தனது தேசிய தொலைநோக்குப் பார்வையை வடிவமைத்தது என்று தெரிவித்தார். முதலமைச்சராகப் பணியாற்றியது, மாநிலங்களின் விருப்பங்களைப் புரிந்துகொள்ள அவருக்கு உதவியது. அதன் விளைவாக, பிரதமரான பிறகு, அவர் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முயன்றது மட்டுமின்றி, ஒவ்வொரு மாநிலமும் தனது லட்சிய இலக்குகளை அடைவதை உறுதி செய்யவும் முயற்சித்தார்.

இந்திய இளைஞர்களிடம் உலகளாவிய தீர்வுகளை அளிக்கும் திறன் உள்ளது

பிரதமர் நரேந்திர மோடி, சென்னையில் உள்ள ஜெயகோபால் கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டார். "அறிவே விடுதலை அளிப்பது" என்ற தாரக மந்திரத்தால் ஈர்க்கப்பட்ட அந்தப் பள்ளி, சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் மாணவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



கடந்த பத்தாண்டுகளில் கல்விக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்



- மேலும், பல புதிய ஐஐடி–கள், ஐஐஎம்–கள், ஐஐஐடி–கள், எய்ம்ஸ் கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான உறுதிப்பாடு

இந்த நாடு புதிய விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை விரைவாக உருவாக்கி வருகிறது. மேலும், விளையாட்டை வெறும் பொழுதுபோக்காக மட்டுமின்றி, ஒரு சிறந்த தொழில்முறைப் பாதையாகக் கருதும் வகையில் மேம்பட்ட பயிற்சிகளையும் ஆதரவையும் அளித்து வருகிறது. 2030 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு நாடு தீவிரமாகத் தயாராகி வருவதாகப் பிரதமர் மோடி இளைஞர்களிடம் தெரிவித்தார். அதேவேளையில், 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் லட்சியக் கனவை நனவாக்கும் நோக்கிலும் நாடு முன்னேறி வருகிறது. எதிர்காலத்தில் இத்தகைய முக்கிய உலகளாவிய விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவது, இளைஞர்களுக்கு ஒரு சிறந்த தளத்தை அமைத்துக் கொடுப்பதோடு, அவர்களின் திறன்களை மேம்படுத்தவும்,



“இன்றைய இளைஞர்கள் ‘வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையின் உந்துசக்தியாக மாற விரும்புகிறார்கள். ‘வளர்ச்சியடைந்த இந்தியா’ விற்குத் தேவையான புதிய கருத்துகளும் தீர்வுகளும், நம் நாட்டின் எதிர்காலத்தை மட்டுமின்றி, அனைத்து உலக நாடுகளின் எதிர்காலத்தையே வடிவமைக்கும்.

– பிரதமர் திரு நரேந்திர மோடி

அவர்களுக்கு முழுமையான ஆதரவை உறுதி செய்யவும் அரசு உதவும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இன்றைய இளைஞர்களிடம் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் உந்துசக்தியாக மாற வேண்டும் என்ற வலுவான விருப்பம் உள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தத் தேசிய இலக்கை அடைவதற்குத் தேவையான புதிய கருத்துகளும் தீர்வுகளும், நாட்டின் எதிர்காலத்தை மட்டுமின்றி, உலக நாடுகளின் எதிர்காலத்தையும் வடிவமைக்கும். உலக நாடுகள் தற்போது தீர்வுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. அந்தத் தீர்வுகளை அளிக்கும் திறன் நமது இளைஞர்களிடம் உள்ளது.

கவிஞரின் புகழ்பெற்ற மந்திரமான 'அச்சமில்லை, அச்சமில்லை' என்பதை இளைஞர்கள் மனதில் ஏற்று, தங்கள் எண்ணங்களையும் கனவுகளையும் நனவாக்க மிகுந்த ஆர்வத்துடன் முன்னேற வேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார். பெரிய கனவுகளைக் காணவும், வித்தியாசமாக சிந்திக்கவும், அச்சமின்றி இருக்கவும் கவிஞர் இளைஞர்களை ஊக்குவித்தார்.

பிரதமர் மோடியின் முழு நிகழ்ச்சியைக் காண கியூ ஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

முதலாவது இந்தியப் பெண் ஏர் மார்ஷல்



1968–ம் ஆண்டு இந்திய விமானப்படையில் இணைந்த டாக்டர் பத்மாவதி பந்தோபாத்யாய், இந்தியாவின் முதலாவது பெண் ஏர் மார்ஷல் என்ற பெருமையைப் பெற்றார். இந்திய விமானப்படையின் மருத்துவப் பிரிவில் சுமார் நான்கு தசாப்தங்களாகப் பணியாற்றிய அவர், 1971–ம் ஆண்டு நடைபெற்ற இந்தியா – பாகிஸ்தான் போரிலும் பங்கேற்றார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு 'விசிஷ்ட சேவா பதக்கம்' வழங்கப்பட்டது. இவர், பூமியின் வட துருவத்தில் அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட முதல் இந்தியப் பெண் ஆவார். மகளிர் அதிகாரமளித்தலுக்கு ஒரு அடையாளமாகவும், 'பத்ம ஸ்ரீ' விருது பெற்றவராகவும் திகழும் டாக்டர் பத்மாவதி பந்தோபாத்யாய், ஒட்டுமொத்த நாட்டிற்கும், குறிப்பாக நாட்டின் மகள்களுக்கு பெரும் ஊக்கமளிக்கிறார்.



பிறப்பு: 4 நவம்பர், 1944

ஆந்திரப் பிரதேசத்தின் திருப்பதியில், 1944–ம் ஆண்டு நவம்பர் 4–ம் தேதி பிறந்த டாக்டர் பத்மாவதி பந்தோபாத்யாய், சிறுவயதிலேயே மருத்துவராக வேண்டும் என்ற ஊக்கத்தைப் பெற்றிருந்தார். பிற்காலத்தில், புனேவில் உள்ள ஆயுதப்படை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த அவர், 1968–ல் இந்திய விமானப்படையில் இணைந்தார். வானத்தில் பறக்க வேண்டும் என்பதும் அவரது கனவாக இருந்தது. அவர் விமானப்படையில் சேர்ந்த காலகட்டத்தில், ஒரு பெண் அந்தப் படையில் இடம்பெறுவார் என்பது பலரால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத ஒன்றாகவே இருந்தது.

1971–ம் ஆண்டு போரின்போது, அவர் தனது கணவருடன் இணைந்து எல்லைப் பகுதியில் பணியமர்த்தப்பட்டார். அங்கு பணியிலிருந்தவர்களில் அவர்தான் ஒரே பெண் ஆவார். அப்போது அவர் ஒரு பதுங்கு குழியில் வசித்து வந்தார். 1971–ம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது அவரது சிறப்பான செயல்பாட்டிற்காக, அவருக்கு 'விசிஷ்ட சேவா பதக்கம்' வழங்கப்பட்டது. 2002–ம் ஆண்டில், 'ஏர் வைஸ் மார்ஷல்' (இரண்டு நட்சத்திர அந்தஸ்து கொண்ட பதவி) நிலைக்குப் பதவி உயர்வு பெற்ற முதல் பெண் அதிகாரி இவரே ஆவார். மேலும், அவர்தான் 'ஏர் கமாடோர்' நிலைக்குப் பதவி உயர்வு பெற்ற முதல் பெண் அதிகாரியும், வட துருவத்தில் அறிவியல் ஆராய்ச்சியை மேற்கொண்ட முதல் இந்தியப் பெண்ணும் ஆவார். இதுமட்டுமின்றி, பாதுகாப்பு சேவை பணியாளர் கல்லூரியில் படிப்பை நிறைவு செய்த முதல் பெண் அதிகாரியும் இவரே ஆவார்.

2020 ஜனவரி 25 அன்று, பத்மாவதி பந்தோபாத்யாய்க்கு மருத்துவத் துறையில் பத்மஸ்ரீ விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அப்போதைய குடியரசுத்தலைவர் ராம் நாத் கோவிந்த், ஒரு விருது வழங்கும் விழாவில், பத்மஸ்ரீ விருதை அவருக்கு வழங்கினார். இந்த கௌரவத்தைப் பெற்ற பிறகு, அவர் மத்திய அரசுக்கும், பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். மேற்கு உத்தரப் பிரதேசத்தில் உள்ள நோயாளிகளுக்கு தொலைமருத்துவம் மூலம் தொடர்ந்து சேவை செய்து வருவதாகவும், இது அவர் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக ஈடுபட்டு வரும் ஒரு நடைமுறை என்றும் அவர் குறிப்பிட்டார். அவர் வாரத்திற்கு மூன்று நாட்களை இந்த சேவைக்காக அர்ப்பணித்து, 80–100 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார். மேலும், அவர் தனது வார இறுதி நாட்களை தனது வீட்டில் உள்ள பிந்தங்கிய குழந்தைகளுக்கு அறிவியல், கணிதம் கற்பிப்பதில் செலவிட்டார். அவர்களின் ஆசீர்வாதங்களால் மட்டுமே தனக்கு பத்மஸ்ரீ கௌரவம் கிடைத்ததாக அவர் கூறியிருந்தார். ●

விடை பெற்றார்
நானா படேகர்











மூவண்ணக் கொடியின் கௌரவத்திற்காகவும் பெருமைக்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்த மிகச்சிறந்த கலைஞரான நானா படேகர், அக்டோபர் 8 அன்று காலமானார். பல்வேறு கதாபாத்திரங்களின் மூலம் ரசிகர்களின் மனங்களை வென்ற நானா, எந்தவொரு மரபுச் சங்கிலியாலும் தன்னை பிணைத்துக்கொள்ளவில்லை. மாறாக, ஒரு சுதந்திரப் பறவையைப் போல திரையுலகில் வலம் வந்தார். தனது திரைப்படங்களின் வாயிலாக, சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளை அவர் கடுமையாகச் சாடினார். பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, திரையுலகின் பல முக்கிய ஆளுமைகள் மற்றும் பல முக்கியப் பிரமுகர்கள் அவரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தினர்.

பிறப்பு: 1 ஜனவரி 1951
இறப்பு: 8 அக்டோபர் 2026

இந்தி, மராத்தி ஆகிய இரு மொழித் திரைப்படங்களிலும் புகழ்பெற்ற நடிகரான நானா படேகர், பல தசாப்தங்களாக நீடித்த தனது கலைப்பயணத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து, சமூகத்தில் அழியாத முத்திரையைப் பதித்தார். சமூகத் தீமைகளுக்கு எதிராகப் போராடிய அவர், ஒரு உண்மையான புரட்சி வீரர் ஆவார். அவரது மௌனம், அவரது ஆவேசமான பேச்சைப் போலவே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. தேசவிரோதச் சக்திகளைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியான நிலைப்பாடு கொண்டிருந்தார். 'பரிந்தா', 'கிராந்திவீர்', 'அப் தக் சப்பன்', 'வெல்கம்' போன்ற திரைப்படங்களில் அவர் வெளிப்படுத்திய நடிப்பு பரவலான பாராட்டைப் பெற்றது. மத்திய அரசு அவருக்கு 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவித்தது.

நாட்டின் மீது நானா படேகர் கொண்டிருந்த பற்று எவ்வளவு ஆழமானது என்றால், 'பிரஹார்' திரைப்படத்தை இயக்கி, அதில் நடிப்பதற்காக, அவர் பிராந்திய ராணுவப் படையில் மூன்று ஆண்டுகள் கடுமையான ராணுவப் பயிற்சியைப் பெற்றார். ராணுவத்தில் அவருக்கு கேப்டன் (பின்னர் மேஜர்) என்ற கௌரவ அந்தஸ்து வழங்கப்பட்டது. மிக முக்கியமாக, 1999–ம் ஆண்டு கார்கில் போரின்போது,

“நானா படேகரின் ஆழமான, தனித்துவமிக்க, கம்பீரமான ஆளுமை, மிகச் சில நடிகர்களிடமே காணப்படுகிறது. அவர் நடித்த ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் தனது பன்முகத்தன்மையையும் படைப்பாற்றலையும் வெளிப்படுத்தினார். தலைமுறைகள் கடந்து நினைவுகூரத்தக்க பல கதாபாத்திரங்களை நமக்கு வழங்கினார். தனது கருத்துகளைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் எடுத்துரைக்கும் பண்பிற்காகவும் அவர் போற்றப்பட்டார். எதையும் தயக்கமின்றித் துணிச்சலாகப் பேசும் குணம் கொண்டவராவார்.

– பிரதமர் திரு நரேந்திர மோடி

“இந்தியத் திரைப்பட உலகின் ஜாம்பவான் நானா படேகர் அவர்களின் மறைவு, கலை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

– உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா

அவர் ஒரு 'விரைவு எதிர்வினைப் படையில்' இணைந்து, மராத்தா லைட் இன்ஃபான்ட்ரி படைப்பிரிவுடன் இணைந்து போர்க்களத்தில் நாட்டிற்காகச் சேவையாற்றினார். ●



Narendra Modi ✓
@narendramodi


25 वर्षों का जनविश्वास मेरे लिए और अधिक ऊर्जा के साथ काम करने की प्रेरणाशक्ति है। ईश्वररूपी जनता-जनार्दन के लिए मेरा एक ही संकल्प है कि मैं देशवासियों की और अधिक सेवा करूं।

Gratitude to everyone for their blessings and wishes. What greater strength can there be than the trust and affection of 140 crore Indians?



Rajnath Singh ✓
@rajnathsingh

देश की सुरक्षा के लिए हमारी Defence Industry की Surge Capacity और Production Capacity का मजबूत होना जरूरी है। हमारी प्रतिभा, युवा शक्ति और Policy Support हमारी ताकत हैं। सरकार हमेशा Defence Industry के साथ खड़ी है, ताकि जरूरत पड़ने पर उत्पादन तेजी से बढ़ाया जा सके और देश हर चुनौती के लिए तैयार रहे।



Amit Shah ✓ @AmitShah

मोदी सरकार में सहकारिता ग्रामीण अर्थव्यवस्था व महिला सशक्तीकरण का सशक्त माध्यम बन रही है। चाहे श्वेत क्रांति 2.0 की शुरुआत हो या PACS को बहुउद्देश्यीय बना डेयरी से जोड़ना हो, सहकारिता का सबसे बड़ा लाभ सहकारी डेयरी क्षेत्र को मिल रहा है।

आज भोपाल में आयोजित राज्य स्तरीय गोपालक सम्मेलन में प्रदेशभर से आए पशुपालकों से संवाद किया। इस अवसर पर गोपालक दीदियों का सम्मान किया, डॉ. भीमराव अंबेडकर कामधेनु योजना के तहत लाभ वितरित किए तथा मोरवन प्रोजेक्ट के अंतर्गत नगर वन विकसित करने के लिए KRIBHCO एवं मध्य प्रदेश राज्य जैवविविधता बोर्ड के बीच MOU भी हुआ।



Nitin Gadkari ✓ @nitin_gadkari

हवा में उडनेवाली बस.. (Skybus), यह सिर्फ एक नई Transport Technology नहीं...

यह उस 🇮🇳 भारत की कल्पना है,
जहां Innovation का उद्देश्य सिर्फ गति नहीं, बल्कि जनसेवा, सुविधा और बेहतर भविष्य है।

नई सोच।
नई तकनीक।
नई ऊँचाई।
और गतिशील 🇮🇳भारत का भविष्य - SKY BUS



Kiren Rijiju ✓ @KirenRijiju ·

SIR प्रक्रिया में 13 करोड़ वोटर कटने का दावा भ्रामक है!
प्रक्रिया के दौरान करीब 13 करोड़ नाम ड्राफ्ट स्तर पर मृत, अनुपस्थित/अप्राप्य, स्थायी रूप से स्थानांतरित या दोहरी प्रविष्टि जैसी श्रेणियों में चिह्नित किए गए हैं। इन्हें 13 करोड़ अंतिम विलोपन बताना सही नहीं है।
ड्राफ्ट सूची सभी राजनीतिक दलों के BLA के साथ साझा की गई है और पात्र मतदाताओं को दावा-आपत्ति दर्ज कराने का अवसर दिया गया है।
तथ्यों को समझें, भ्रम से बचें और लोकतांत्रिक प्रक्रिया पर विश्वास रखें।



Arjun Ram Meghwal ✓
@arjunrammeghwal

न्यायिक प्रक्रियाओं में तेजी लाने, मामलों का समयबद्ध निस्ता सुनिश्चित करने तथा justice distribution system को अधिक प्रभावी बनाने हेतु संबंधित अधिकारियों को आवश्यक दिशा-निर्देश दिए।

#JusticeDelivery #JudicialReforms

In world of uncertainty, India offers reliability, stability: PM

'We Don't Grow At Anyone's Cost. We Grow With World, For World'

TIMES NEWS NETWORK

New Delhi: PM Narendra Modi Tuesday sought to position India as a trusted ally while stating that supply chains, energy, minerals, payment systems, and technology are increasingly becoming instruments of pressure and dominance and the routes created by globalisation over the past decades have become chokepoints in several cases.

"One of the biggest questions facing the world today is that of trust, of confidence — the confidence that supplies will continue uninterrupted in times of need. We do not grow at anyone's cost. We grow with the world, and for the world," the PM said at a Bloomberg event. He pitched India's expanding economic and technological capabilities to address global challenges during geopolitical tensions, supply-chain disruptions and growing competition for strategic resources.

The PM also said that India's economic growth is anchored in strong fundamentals, financial resilience and a sustained reform drive, as he cited the 7.8% growth recorded in the June quarter. Modi placed India as a global economic and technology power that seeks to help other countries prosper rather than growing at their expense.

"It is because of this strength that India's sovereign ratings are being upgraded. In a world filled with uncertainty, India offers the assurance of reliability and stability," he said, highlighting GST, labour reforms and steps to make it easier to do business. "We are pursuing reforms with a clear policy direction. India's reform express continues to move ahead at high speed. For us, reforms are not a compulsion. Reforms are our conviction," he said.



PM Modi with former UK PM Rishi Sunak in New Delhi Tuesday

Modi also said that the true measure of economic and technological strength lay not in the ability to control others but in creating opportunities for them, as he argued that India believes in the principle of "power to empower".

"Today, technology is power. Data is power. Knowledge is power. Innovation is power. But the real question is not who possesses power. Rather, the question is how that power is being used," he said, while highlighting the country's digital public infrastructure, affordable mobile data, digital payments and direct benefit transfer as examples of technology widening access to economic opportunities.

PM urges youth to upgrade skills, adapt to emerging technologies

EXPRESS NEWS SERVICE @ New Delhi

PRIME MINISTER Narendra Modi on Friday said that as technology evolves rapidly, young people must acquire new skills, upgrade their existing capabilities and adapt to emerging technologies.

Modi, who was interacting with representatives of Indian participants at the WorldSkills Competition held in Shanghai, also emphasised the need for coordinated efforts by youth, the government and training institutions to establish the country as a global hub of skilled human resources.

Highlighting the importance of specialised skills, he asked young people to adapt to emerging technologies, develop skills in line with requirements of the global market, and contribute to improving India's skill training ecosystem through their experiences and suggestions, an official statement said.



PM Modi interacts with the Indian Team of WorldSkills Shanghai 2026 in Delhi | PTI

Underlining the objective behind establishing a separate Ministry for Skill Development, he said the skill training institutions are no less important than the IITs and IIMs.

Modi encouraged the participants to share their experiences and suggestions with the government to help improve India's skill training system, the statement said.

WorldSkills is a leading international skills competition, bringing together young professionals to demonstrate excellence in a wide range of vocational and technical skills.

During the interaction with Modi, the participants shared their experiences from the competition. They also discussed the importance of adapting to new tools and software.

Empowering States is key to Viksit Bharat: PM

DEVELOPMENT MANTRA. Always committed to cooperative federalism, says Modi at the inauguration of projects totalling ₹13,000 crore in Chennai

Our Bureau
Chennai

Prime Minister Narendra Modi on Sunday said empowering States was central to India's development, emphasising that the country's progress depended on enabling individual States to achieve their aspirations.

Addressing a gathering in Chennai at the launch of over ₹13,000 crore worth of development projects at IIT Madras, Modi said his experience as a Chief Minister had strengthened his understanding of the expectations of States and shaped his approach towards cooperative federalism.

Modi inaugurated the 15-km Poonamallee-Vadapalani stretch of Phase II of the Chennai Metro Rail Project, built at a cost of around ₹4,900 crore and laid the foundation stone for and dedicated various development projects. "I have always carried the mantra of developing the country through the development of the State," he said in the presence of Tamil Nadu Chief Minister C Joseph Vijay. The PM said changes in governments had not altered his commitment to the State's development.

"In the last 25 years, I have always accorded topmost importance to national progress and cooperative federalism. I have had the honour of working with Jayalalithaa, Karunanidhi-ji, O Panneerselvam, Edappadi K Palaniswami, MK Stalin and now Vijay. My commitment to the development of Tamil Nadu and to serving its people has always remained unwavering," he said

PM noted that initiatives such as Make in India and Vocal for Local were benefiting industries in the State. The Centre was working to strengthen the entire manufacturing chain, from components and technology to finished products, he said.



Prime Minister Narendra Modi and Tamil Nadu Chief Minister C Joseph Vijay in Chennai on Sunday

KEY PROJECTS

The Centre is investing around ₹17,000 crore to develop the VO Chidambaranar Port in Thoothukudi as a megacontainer and green energy hub. Once completed, the project will enable ultra-large container vessels to call at the port, strengthening Tamil Nadu's links with global trade, Modi said.

Reiterating the need for collaboration between the Centre and States, Modi said the Union government was committed to providing the support needed for Tamil Nadu's continued development.

Modi laid the foundation stone of and inaugurated key National Highway projects, including the 36-km, four-laned Vaduppatti-Theriyuvengunallur section of NH-744, worth around ₹3,700 crore. He also laid the foundation stone of the Group II/III Lube Oil Base Stocks (LOBS) project at the existing Manali Refinery of Chennai Petroleum Corporation Limited (CPCL) in Chennai costing around ₹1,620 crore. At IIT-Madras, Modi dedicated to the nation the Sudhu Gopalakrishnan Brain Centre (SGBC) at IIT Madras.

Clear metro phase III, release ₹5,110 cr education funds: TN CM

Chief Minister C Joseph Vijay urged the Centre to expedite approvals for key infrastructure projects in the State, including the Chennai Metro Rail Phase III, metro rail projects in Coimbatore and Madurai, and high-speed rail corridors connecting Chennai with Kanyakumari and Coimbatore. He also sought the release of ₹5,110 crore in pending central funds under the Samagra Shiksha scheme without any conditionalities.

Addressing an event in Chennai on Sunday where the PM launched development projects worth ₹13,000 crore, CM Vijay emphasised the role of States in the country's development.

Tamil Nadu had consistently contributed to India's economic, social and cultural progress, cooperation between the Union and State governments should translate into tangible benefits for people, Vijay said.

Vijay also asked the Prime Minister to reconsider the proposals for metro rail projects in Coimbatore and Madurai, citing the future development and economic growth of western and southern Tamil Nadu. He sought approval for an inter-State metro rail link between Hosur in Tamil Nadu and Bommasandra in Karnataka.

Vijay urged the Centre to accord priority to the Godavari–Cauvery river linking project and take it up as a national project.

India and Canada together contributing to prosperous, stable world: Modi to Carney

Suhasini Haidar
NEW DELHI

India and Canada are together contributing to a "more stable and prosperous world", said Prime Minister Narendra Modi after a call with Canadian Prime Minister Mark Carney, during which they agreed to conclude a trade agreement soon.

The phone call on Tuesday night came even as senior Canadian Ministers, including Foreign Minister Anita Anand and Minister of International Trade Maninder Sidhu, are in Delhi for talks with their counterparts – External Affairs Minister S. Jaishankar and Commerce Minister Piyush Goyal – to finalise the contours of the trade deal.



Narendra Modi and Mark Carney shake hands during the 2025 G20 Summit. FILE PHOTO

Mr. Jaishankar had met Mr. Carney in Canada in June, after the G7 Summit in Kananaskis, and had conveyed Mr. Modi's invitation to the Canadian leader to visit India.

Mr. Modi and Mr. Carney had also met briefly at the G7 Summit, and had agreed to "reset" ties between the two countries, which had been strained over the Canadian Government's allegations of Indian involvement in the killing of Khalistani activist Hardeep Singh Nijjar in Canada in June 2023.

Mr. Modi had also met Mr. Carney's predecessor Justin Trudeau at the G20 Summit in Delhi in September 2023, but relations had soured after Mr. Trudeau's allegations in Parliament in October 2023, leading to the withdrawal of High Commissioners and the suspension of trade talks

பொது ஒலிபரப்புச் சேவை தினம் – 12 நவம்பர்


பொது விழிப்புணர்வு, ஜனநாயகம், உரையாடல் ஆகியவற்றை வளர்க்கக்கூடிய ஒரு மகத்தான பயணம்

தேசத் தந்தை மகாத்மா காந்தி, 1947–ம் ஆண்டு நவம்பர் 12 அன்று அகில இந்திய வானொலி (ஆகாஷ்வாணி) வாயிலாக ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் 'பொதுச் ஒலிபரப்புச் சேவை தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது. 2000–ம் ஆண்டில், அப்போதைய மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த சுஷ்மா ஸ்வராஜ், இந்தச் சிறப்பான தினத்தை 'பொது ஒலிபரப்புச் சேவை தினமாக' அறிவித்தார். அன்றிலிருந்து, ஆண்டுதோறும் ஆகாஷ்வாணி மாளிகையில் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது...

பாபு இடம்பெயர்ந்த மக்களிடையே உரையாற்றினார்

- அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளில், பிரிவினையின் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருந்த, குருக்ஷேத்திரத்தில் தஞ்சம் புகுந்த இடம்பெயர்ந்த மக்களிடையே பாபு உரையாற்றினார்.
- அவர் அளித்த செய்தியை நினைவுகூரும் வகையில், அந்த அரங்கு தற்போது 'பாபு அரங்கு' என்று அழைக்கப்படுகிறது.
- இந்த நிகழ்வை முன்னிட்டு, ஆகாசவாணி பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறது. இதில் பாபுவுக்கு மிகவும் பிடித்த பஜனைகள் இசைக்கப்படுகின்றன.





“உங்களுடன் சுமார் இரண்டரை லட்சம் அகதிகள் இருப்பதையும், இன்னும் மக்கள் வந்து கொண்டிருப்பதையும் அறிந்தபோது, நான் மிகுந்த வேதனை அடைந்தேன்... எனது மனம் துயருற்றது. உங்களை நேரில் சந்தித்து, உங்களுக்கு உதவ வேண்டும் என்று எனக்குள் ஒரு உத்வேகம் ஏற்பட்டது.

– மகாத்மா காந்தி (அகில இந்திய வானொலியில் ஆற்றிய உரை, 12 நவம்பர், 1947)

NEW INDIA SAMACHAR
FORTNIGHTLY

RNI NO.: DELENG/2020/78811 NOVEMBER 1-15, 2026
RNI Registered No DELENG/2020/78811 (Publishing Date: October 19, 2026 Pages: 52)

EDITOR IN CHIEF
Dhirendra Ojha
Principal Director General
Press Information Bureau, New Delhi

PUBLISHER:
Kanchan Prasad
Director General, on behalf of
Central Bureau Of Communication

PUBLISHED FROM:
Room No–278, Central Bureau Of Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003